மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்

திருநெல்வேலி

**MANONMANIAM SUNDARANAR UNIVERSITY**

**TIRUNELVELI**

தொலைநெறித் தொடர்கல்வி இயக்ககம்

**DIRECTORATE DISTANCE & CONTINUING EDUCATION**

**TIRUNELVELI**

# பேச்சுக்கலை

முனைவர் கு.பிருந்தா.,**M.A.,M.Phil.,Ph.d.,P.G.D.C.A.,Drawing T.T.C.,**
உதவிப் பேராசிரியர்
தமிழியல் துறை
மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்
திருநெல்வேலி

மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்
திருநெல்வேலி – 627 012

# பேச்சுக்கலை

**நோக்கம்:**

மாணவர்களிடையே பேச்சுத் திறனை வளர்க்க வேண்டும்

அனுபவமிக்க பேச்சாளர்களை அறிமுகம் செய்ய வேண்டும்

**பயன்:**

வருங்காலத்தில் சிறந்த மேடைப் பேச்சாளராக மாணவர்களை உருவாக்க வேண்டும்.

பேச்சுத் திறனை வளர்க்கவும் அதில் கையாளவேண்டிய உத்திகளைக் கற்றுத்தரவும் இந்தப் பாடம் உதவ வேண்டும்.

**அலகு- 1:**

பேச்சாளர் தகுதிகள் - நூலறிவு - ஒன்பது நன்மணிகளும் பதினெட்டு நயமொழிகளும் - பேச்சுச் சுவை - உள்ளமும் உரையும் - பேச்சும் எழுத்தும்

**அலகு- 2:**

பேசும் முறை – அவையோர் உளவியல் - விழாக்காலப் பேச்சு வகைகள் - பேச்சாளர் பின்பற்ற வேண்டிய நெறிமுறைகள் - தவிர்க்கப்பட வேண்டியவை

**அலகு- 3**

பேச்சாளர்க்கு ஏற்படும் பிரச்சனைகள் - பேச்சும் அதன் மொழிக் கூறுகளும் - பேச்சு வகைகள் - பேச்சின் இடையே - ஏழு வகைச்செயல் - பேசும் வாய்ப்பு

**அலகு- 4**

பேச்சு மேலாண்மை - இலக்கியத்தில் சொல்லின் செல்வன் - அறிஞர் அண்ணா - கலைவாணர் - திரு.வி.க - அறிஞர் கி.வா.ஜெகந்நாதன் - திருமுருக கிருபானந்தவாரியார் - கவிப்பேரரசு வைரமுத்து - கு.ஞானசம்பந்தன் - கவிக்குயில் சரோஜினி தேவி

**அலகு- 5**

ஜவஹர்லால் நேரு உரை - சுகிசிவம் - வலம்புரிஜான் - விவேகானந்தர் - காங்கிரசின் முதல் பெண் பேச்சாளர் - இணையவழிக் கருத்தரங்கம் - பேச்சாற்றல் தொடர்பான நூல்கள்

**பாடநூல்:**

முனைவர் வ.ஹரிஹரன் “மேடைப் பேச்சும் ஒரு கலை” சங்கர் பதிப்பகம்(சனவரி 2020)

சென்னை வெளியீடு.

**பார்வை நூல்கள்:**

கே.வி.வீரராகவன் — பேச்சுக் கலை
வலம்புரி பதிப்பகம்
திருநின்றவூர்.

முனைவர் ப.பாலசுப்பிரமணியன் — வாங்க மேடையில்பேசலாம்
சங்கர் பதிப்பகம்(சனவரி 2020)
சென்னை வெளியீடு.

**இணையதள முகவரிகள்**

1.https://www.vidhai2virutcham.com

2.http://siragu.com

## அலகு 1

### பேச்சாளருக்கானதகுதிகள்

பேச்சை ஆளும் திறன் படைத்தவர் பேச்சாளர். பேச்சை ஆளும் திறன் ஓரிரு நாட்களில் வருவனவல்ல பல நாள் பயிற்சி ஆகும். “சிறு துளி பெருவெள்ளம்,” அதைப்போன்று சிறிய சிறிய பயிற்சிதான் ஓர்நாள் பேச்சாளர் என்ற தகுதி உடையவனாக மாறுகின்றான். அதற்கு அடிப்படை தகுதிகள் “முயற்சியும் பயிற்சியும்” தான். “முயற்சி உடையார் இகழ்ச்சி அடையார்” என்பது பழமொழி. “முயற்சி உடையோர் புகழ் அடைவார்” என்பது புதுமொழி விடாமுயற்சி விஸ்வரூப வெற்றிக் கொடுக்கும். விடாமுயற்சி வெற்றிக்கும் வித்திடும் வழிகள் ஆகும்.

### முயற்சியும்பயிற்சியும்

எந்த ஒரு செயலுக்கும் தேவை முயற்சி. முயற்சி செயலின் அடிப்படை தகுதி ஆகும். செயலில் முயற்சியுடையான் வெற்றியடைந்து சாதனையாளனாவான். எந்த ஒரு செயலையும் தன் முனைப்புடன் (self interest) செயல்பட்டால் நிச்சயம் வெற்றி திலகம் இடுவான்என்பதுஉறுதி.

இன்றைய வாழ்வில் மனிதன் மிகவும் சுறுசுறுப்புடன் செயல்படுவதை காண முடிகின்றது அது பாராட்டுக்குரிய ஒன்று. அவ்வாழ்வில் அவன் வெற்றி பெறும் பயன்கள் அதிகம்.

மனித இனத்தின் வரலாற்றை புரட்டிப் பார்த்தால் ஒவ்வொரு வெற்றிக்கும் படிக்கட்டுகளாக இருந்திருப்பது கடுமையான முயற்சி ஒன்றே.

“நீ என்னவாகப் போகிறாய் என்று சிறு வயதில் கேட்கும்போதே நான் வருங்காலத்தில் பேச்சாளராக போகிறேன்” என்று பதில் வரும். அந்த அளவிற்கு அவர்களைபேச்சாளர்களின்பேச்சுகவர்ந்திருக்கும்.

பேச்சாளனாவேன் என்று கூறினால் மட்டும் போதாது. சிறந்த பேச்சாளர் ஆக பல பேச்சாளர்களின் பேச்சுகளையும் அவர்களுக்கு பேச்சின் மீதுள்ள ஈடுபாடு, பேசும் தன்மை அத்தனையும் மிக நுண்ணிப்பாக கவனித்து பேசுவதற்கென நேரம் ஒதுக்கி பேசிப்பழக வேண்டும். பிறர் முன் பேசி காண்பித்தல் வேண்டும். அவர்கள் கூறும் குறை, நிறைகளை ஏற்று மாற்றிக் கொள்ள வேண்டும். பேச்சுப் போட்டிகளில் பங்குபெற்று தம் திறன்களைவளர்க்கவேண்டும்.

## எண்ணமேவெற்றி

வெற்றிக்கு முயற்சி செய்யும் வழிமுறைகளாவன நாம் நம் எண்ணங்களை தூய்மையாகவும் அழகாகவும் ரசிக்கும் தன்மையோடும் வைத்துக்கொள்ள வேண்டும். நாம் நம் எதிர்காலத்தை எப்படி உருவாக்க வேண்டும். அதில் நம்ம பங்கு என்னவாக இருக்க வேண்டும் அல்லது என்ன பணியில், என்ன தகுதியோடு விளங்க வேண்டும் என்கின்ற விதையை மனதின் ஆழ் எண்ணத்தில் விதைத்திட வேண்டும். பின், அதை நம் கண்முன் நிறுத்தி அதை அடைவதற்கான வழிமுறைகள் தேடல்கள் மூலம் அமைதியாக சிந்தனை என்னும் மகாசக்தி வழியாக தேட வேண்டும்.

விதைக்கு தண்ணீர் ஊற்ற வேண்டும் அல்லவா? அது நாம் மேலே கூறிய அந்த மகாசக்தி தான் நற்சிந்தனை என்னும் தேடல். பிறகு தினமும் ஒரு முறையேனும் தியானத்தில் அமர்ந்து நாம் என்னவாக வேண்டும் என்று

விதைத்திருக்கின்றோமோ அதுவாக வேண்டும் என நினைத்து விதையிலிருந்து வெளிப்பட்ட செடியை வளர்க்க வேண்டும். முயற்சியாகிய வெற்றிக்கனியை பறிக்க உதவிடும். எண்ணம், சொல், செயல் மூன்றும் நாம் நினைத்ததை நடத்தும் பயிற்சி ஆகும்.

தினமும் தூங்குவதற்கு முன்பு திட்டமிடுங்கள் கனா காணுங்கள். "பேச்சாளர் சிவ்கேரா கூறுகையில்", ஒரு நிலத்தில் உள்ள கலைகளை எடுப்பதற்கு இரண்டு வழிகள் உள்ளன.

1.எளியமுறை

2.கடினமானமுறை

முதல் முறையில் களைகளை பிடுங்கும் எந்திரம் மூலம் அவற்றை அகற்றலாம். அவ்வாறு செய்யும் போது கலைகளுடன் சேர்ந்து பயிர்களும் வீணாகும். மறுபடியும் களைகள் முளைத்து பயிர்களை நாசம் செய்யும். சற்று கடினமான முறையில் நிலத்தில் காலை ஊன்றி ஒவ்வொரு களைகளையும் அதன் வேருடன் ஆழமாக விரலை உள் செலுத்தி பிடுங்கும் போது களைகள் முழுமையாக அகற்றபடும் போது மறுபடியும் அதில் களை வளரப்போவதில்லை. இதனால் அருகில் இருக்கும் பயிர்கள் பாழ் ஆவது தடுக்கப்படுகிறது ஆகவே உங்களுடைய எண்ணம் கடின முயற்சியை பொறுத்து பயன் கிடைக்கும். முயற்சி செய்வீர் வெற்றி பெறுவீர்.

## நினைவுசக்தி(Memorypower)

பேச்சாளருக்குரிய தலையாய தகுதி 'நினைவாற்றல்' நம் அன்றாட வாழ்வில் நடக்கின்றவைகளை இரவு தூங்க செல்வதற்கு முன் ஒரு முறை நம் என்ன ஓட்டத்தில் அவைகளை ஓட விட்டால் போதும் நினைவாற்றல் பெருகி நம் பேச்சுத் திறமையை

வளர்க்க வழி கோலும்.

பேச்சு மேடையில் பேசும்போது சில புள்ளி விவரங்கள் உலகப் புகழ்பெற்ற சம்பவங்கள், நினைவிடங்கள், இலக்கிய மேற்கோள்கள், சான்றோர்களின் கருத்துக்கள் இவைகளை அறிந்து பேச்சாளருடைய மூளையில் ஆழ்ந்து வைத்திருத்தல் சிறப்பு. போட்டிகளில் பங்குபெறும் போது பேசும் தலைப்பிற்கு இணையாக இவற்றில் இருந்து சில கருத்துக்களை மேற்கோள், புள்ளி விவரங்களை எடுத்து பேச வேண்டும். இது கேட்பவர்களை ஆச்சரியத்தையும், உற்சாகத்தையும் ஊட்டுவதாக அமையும். இதுவே சிறந்தபேச்சாளருக்கு வேண்டிய தகுதிகள் இத்தகுதிக்கு வேண்டியன நினைவாற்றல்.

நினைவாற்றலை வளர்க்க படித்த செய்தியை மீண்டும் மீண்டும் வாய்விட்டு கூறுதல் நல்ல பயிற்சியாகும். செய்திக்கு மனக்கணங்களில் கற்பனை வடிவம் கொடுத்தல், ஒவ்வொரு விஷயத்திற்கும் தகுந்த நேரம் ஒதுக்கி படிப்பது, படித்ததை தன் வயமாக்குதல், படித்ததை அனுபவத்துடன் இணைத்துக் காணுதல் முதலிய வழிமுறைகள் நினைவாற்றலை வளர்த்துக்கொள்ள உதவும் சிறந்த வழிகள் ஆகும்.

## பேச்சுவழக்கு

பொதுவாக பேச்சு வழக்கை இரண்டு பெரும் பிரிவுகளில் அடக்குவார்கள்.

1.இலக்கியப்பேச்சுவழக்கு

2.நாட்டார்பேச்சுவழக்கு

இடம், பொருள், ஏவலைப் பொறுத்துப் பேச்சாளர் தம் பேச்சை அமைத்து கொள்ளலாம். ஒரு நிகழ்ச்சிக்குப் பேச்சாளரை நிர்ணயிப்பவர்கள் பேசும் இடத்திற்கும் கேட்பவர்கள் சூழலுக்கும் தகுந்தவாறு பேசக்கூடியவரை நிர்ணயிக்க வேண்டும்.

இலக்கிய மேடைகளில் பாண்டித்திய நடையில் பேச வேண்டும் என்ற எதிர்பார்ப்பு இருக்கும். கம்பன் கழகம், கோவில் பெருவிழாக்கள், பக்தி சொற்பொழிவுகள் ஆகியவற்றின் நடை மிகவும் தரம் உடையதாக இருக்க வேண்டும்.

முற்காலங்களில் பட்டிமன்றங்களில் பேச்சாளர்கள் செம்மாந்த மொழி நடையில் பேசினார்கள். ஆனால் காலம் மாற மாற அவையோர் ரசனை மாற தொடங்கியது. அவையோர் எண்ண ஓட்டத்திற்கு ஏற்ப அவர்களின் புரிதலுக்கு ஏற்ற பேச்சு வழக்கிலேயே பேசத்தொடங்கி விட்டனர்.

எந்த நடையில் பேச்சாளர் தம் தொடக்க காலத்தில் பேசி பழகுகிறாரோ அந்த நடைதான் அவருக்குக் கைவரப் பெறும். இடத்திற்கு ஏற்ப பேச்சாளர்கள் தம் பேச்சு நடையை அல்லது பேச்சு மொழியை தகவமைத்துக் கொள்வதுமுக்கியம்.

## மேற்கோள்ஆளும்தன்மை

மேடைப்பேச்சு சிறப்பிற்கு பல்வேறு முழு காரணங்கள் இருந்தாலும் அறிஞர்களின் மேற்கோள்களை கையாளும் விதமும் அதில் இடம்பெறும் ஒன்று. எங்கு? எப்படி? யாருடைய? எந்த? மேற்கோளை எங்கே? எப்பொழுது? இடம்பார்த்து பயன்படுத்த வேண்டுமோ அந்த இடத்தில் குறிப்பிட்ட மேற்கோளை கையாளும் திறமை ஒரு சிறந்த பேச்சாளருக்கு இருக்க வேண்டும்.

வார்த்தைச் சித்தர் என்று போற்றப்பட்ட வலம்புரிஜான் தான் பேசும்போது “நெஞ்சில் உரைத்த எண்ணம் நெய்யைப் பேச்சால் இப்பொழுது உருக்குகிறேன்” பேச வந்தசூழல்பற்றிப்பேசுவார்.

சிறுவர்கள் பேச்சுப்போட்டிக்குத் தயார் செய்கையில் பயிற்சியாளர் சிறந்த மேடைப் பேச்சாளர்களின் பேச்சுத்திறனைக் கூறி மற்றும் அவர்களின் பேச்சு ஆளுமையை தொலைக்காட்சி பெட்டி அல்லது ஏதேனும் ஒரு காட்சி ஊடகம் மூலமாக காண்பிப்பது

அவர்களுக்கு ஒரு வித திறனூட்டும் பூஸ்ட் ஆக இருக்கும். அடைமொழிகள் எதுகை மோனை முதலான பழமொழிகள் விழுமிய உரைநடை சொற்றொடர் ஆளுமையை பேச்சில் கொடுக்கும்போதே சபையோருக்கு மேலும் அவரின் பேச்சைக் கேட்க வேண்டும் என்ற ஈர்ப்பைகொடுக்கும்.

## பன்னூல்அறிவு

பேச்சாளர் மேடைப் பேச்சாளனாகையில் மேடைக்கு மேடை காலத்திற்கு ஏற்றார் போன்று தன் பேச்சுத் திறனை வளர்த்துக் கொள்ளல் சிறப்பு தரும். நாட்டு நடப்பை நகைச்சுவை தோணியில் பேசினால் மிக அருமையான பேச்சாளனாகலாம். அதற்கு அன்றாட நாட்டு நடப்புகள் பற்றி அறிந்திடல் வேண்டும். பல நூல்கள் அறிவு பெற புத்தக புழுவாக மாறல் வேண்டும். மூன்று திறன்களின் அடிப்படையில் இவ்வறிவினை பெறலாம்.

1.கற்றல்நூல்அறிவு

2.கேட்டல்அனுபவம்அறிவு

3.அறிதல்நாட்டுநடப்புஅறிவு

வாழ்க்கையில் பொருள் தேட ‘கற்றல் அறிவு’ உதவும். வாழ்க்கையை வழிநடத்த ‘கேட்டல் அறிவு’ தேவை. சமூகத்தில் சிறந்து விளங்குவதற்கு ‘அறிதல் அறிவு’ பயன் தரும்.

இது கேள்வி அறிவு என்று சொல்லலாம் ‘கற்றலின் கேட்டல் நன்று’ என்பர். பன்னூல் அறிவு நிகழ் கருத்துகளை மூளையில் சேகரித்தல் நன்று.

“முற்றப் பகலும் முனியாது இனிது ஒதிக்
கற்றலின் கேட்டலே நன்று”.

-பழமொழி நானூறு.

“செல்வத்துள் செல்வம் செவிச்செல்வம்”

-திருக்குறள்.

பல நூல்களைக் கற்றுணர்ந்து மூளையில் ஏற்றி வைத்து கொள்ள வேண்டும்.

1. வரலாற்று நூல்கள்
2. பயண நூல்கள்
3. நகைச்சுவை துணுக்குகள்
4. அறிவியல் அறிஞர்களின் நூல்கள்
5. ஆன்மீகம்
6. புதுக்கவிதைகள்
7. ஆய்வு நூல்கள்

இவை போன்ற பல நூல்களை கற்றறிந்து கொள்ள வேண்டும். நம் அனைவர் வீட்டிலும் பன்முக நூல்களை சேகரித்து நூலகம் அமைத்திருப்பது நமக்கு எப்போதும் பயனுள்ளதாக அமையும். மேலும், ஏதேனும் நிகழ்வுகளில் பேசுவதற்கு நாம் தயாராகும் போது கருத்துக்கள் சேகரிக்க நம் வீட்டு நூலகமே நமக்கு பயனுள்ளதாக இருக்கும்.

பல நூல் அறிஞர்களின் கருத்துக்களை சேகரித்து கோர்வையாக மேற்கோள் போன்று கருத்துக்களை அவையினர் முன் எடுத்து வைக்கும் போது பேச்சாளரின் தனி திறன் அவையில் ஜொலிக்கும். மேலும், அவையோர்களால் சிறந்த பேச்சாளன் என்ற அங்கீகாரமும் அவனுக்கு கிடைக்கும்.

## மதிநுட்பம்

பேச்சாளன் மதிநுட்பம் நிறைந்தவனாக இருத்தல் வேண்டும். சிறந்த பேச்சாளனுக்குரிய தகுதிகள் மேற் கூறப்பட்டுள்ளன. இத் தகுதிகள் அனைத்தையும் பின்பற்றிட மதிநுட்பம் வாய்ந்தவராக இருத்தல் வேண்டும்.

கூர்மையான நுண்ணறிவுதான் மதிநுட்பம் என்பது ஆகும்.

" மதிநுட்பம் நூலோடு உடையார்க்கு அதிநுட்பம்

யாவுள முன்நிற் பவை" .

குறள் - 136.

மனிதப் பிறவி என்பது அரிய பிறவி. அவர்கள் இயற்கையாகவே மதிநுட்பம் நிறைந்தவர்களாக காணப்படுகின்றனர். மதிநுட்பத்தோடு நூல் அறிவும் சேர்ந்தால் நிற்பவை எதுவுமில்லை என்கின்றார் வள்ளுவப் பெருந்தகை. அறிஞர் தர்ஸ்டன் ஏழு வகையான நுண்ணறிவுத்திறன் குறித்து எழுதியுள்ளார்.

1. சொல்லாற்றல்
2. சொல் வேகம்
3. எண்ணாற்றல்
4. இட ஆற்றல்
5. நினைவாற்றல்
6. புலன்காட்சி வேகம்
7. காரண காரிய தொடர்பு.

சொல்லாற்றல் என்பது சொற்களால் குறிக்கப்படும் பொதுக் கருத்துக்களின் பொருள்களை உணர்ந்து அவற்றைச் சிந்தனையில் பயன்படுத்தும் திறன். பேச்சாளர் மதிநுட்பம் வாய்ந்தவராகத் திகழ வேண்டும்.

## நூலறிவு

பழங்காலத்தில் நூல்களை விலை கொடுத்து வாங்கிப் படிக்கும் வசதியில்லாத பேச்சாளர்கள்அதிகம்.

“கற்கை நன்றே கற்கை நன்றே

பிச்சை புகினும் கற்கை நன்றே.”

- வெற்றிவேற்கை

என்ற கொள்கையில் பேச்சாளர்களும் உறுதியாக இருந்தனர். அறிவிற் முதிர்ந்த அறிஞர்கள் எழுதிய நூற்களைப் படித்து தலைசிறந்த கருத்துக்களை குறிப்பெடுத்து வைத்தல் வேண்டும். பின் நேரம் ஒதுக்கி அக்கருத்துகளை மூளையில் பதித்திடல் பேச்சுக்கு நலன் கொடுக்கும் பின் ஒரு நாள் இந்த கருத்துக்கள் சார்ந்து பேசும் போது தக்க சமயத்தில் கருத்துக்களை கையாளும் போது பேச்சு வலிமை வாய்ந்ததாக விளங்கும்.

இலக்கியங்கள் வாழ்வியல் சுயமுன்னேற்ற நூல்களைத் தேடி வாங்கிப் படித்தல் பேசுவதற்கு உறுதுணையாக இருக்கும். பேசும் பேச்சாளனுக்கு மேடை ஒன்றல்ல ஆகவே புதிய புதிய மேடைகளில் பேசும் போது ஒரே மாவை அரைத்தல் நலம் கெடும். ஆகவே புதிய புதிய மேற்கோள்களைப் பேசுகையில் பேச்சாளர்களுக்கு வரவேற்பு அதிகம் கிடைக்கும்வாய்ப்புகளும்கதவைத்தட்டிடும்.

படிக்கும் ஆர்வம் உடையவர் பெருகி வரும் காலம் இது. ஆகையால் வருடம் தோறும் புத்தகத் திருவிழா மாநிலம் முழுவதும் மாவட்ட தலைநகரங்களிலும் நடந்து வருகின்றது. புத்தகங்களை படிக்கும் ஆர்வலர்கள் ஜாதி, மத, பேதமின்றி வயது வித்தியாசம் இன்றி இவ்விழாவில் கலந்து ஆயிரக்கணக்கான நூல்களை வாங்கி செல்கின்றனர். அன்றைய காலகட்டங்களில் பள்ளி, கல்லூரி இவை சார்ந்து நடக்கும் விழா மற்றும் போட்டிகளில் கலந்து கொள்ளும் சிறப்பு விருந்தினர்களுக்கு மேலும்

போட்டிகளில் பங்கு பெற்று பரிசுகளை வெல்லும் வீராங்கனைகளுக்கு பயனுள்ள நூல்களை பரிசு பொருளாக வழங்குவது வழக்கம். இந்த வழக்கம் இன்றும் பாரம்பரியமாக தொடர்ந்து வருகின்றது. பரிசாக பெற்ற நூல், ஒரு வேளை வாங்குபவர்களுக்கு உபயோக படாவிட்டாலும் வீட்டில் இருக்கும் அண்ணன், தங்கை என கண்டிப்பாக பிற நபருக்கு பயன்படலாம். எனக்கு நினைவிருக்கின்றது நான் படிக்கும் காலங்களில் பள்ளி, கல்லூரிகளுக்கு என்னுடைய பிறந்தநாள் அன்று என் தந்தை இனிப்பு மிட்டாய் கூடவே நூலகத்திற்கு ஒரு பரிசு பொருளாக நூலை வாங்கி கையில் தந்து முதல்வரிடம் கொடு என்று புன்னகைத்து பெருமிதமாக அனுப்பிவைப்பார்.

“தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத்தூறும்அறிவு.”

-குறள்396

என்ற குறள் ” தோண்ட தோண்ட கிணற்றில் ஊற்று நீர் வற்றாது பெருகிக் கொண்டிருப்பது போன்று நூல்களைப் படிக்கப் படிக்க மனிதனுக்கு மூளையில் அறிவு பெருகிக்கொண்டே இருக்கும் ” என்பது திண்ணம் என்ற கருத்தை வலியுறுத்துகின்றது .

## நல்ல பேச்சின் இலக்கணம்

ஒரு பேச்சாளர் பேசும்போது அந்த சபையில் இருக்கும் அத்தனை பேரும் மெய் மறந்து நிற்க வேண்டும். அதைப்போன்று சபையோர் ஒவ்வொருவரும் தம்மையும் அந்த பேச்சாளராகவே மெய்மறந்து கருதி விட வேண்டும் .

காற்று வீசும் எதையும் எடுத்துச் செல்லும் இயல்புடையது அது நறுமணமாக இருப்பினும் சரி துர்மனமாக இருப்பினும் சரி. அதுபோல ஒரு பேச்சாளரின் பேச்சு நன்றாக இருந்தால் சபையில் நறுமணத்தை தரும் , மாறாக இருந்தால் வேறு மணத்தையும் சபையோருக்கு தரும். ஒரு நல்ல பேச்சாளர் அள்ள அள்ளக் குறையாத கல்வியும் அறிவும் திரண்ட அனுபவசாலியுமாகவும் திகழ வேண்டும். நல்ல பேச்சாளரின் பேச்சு காதில் தேன் வந்து பாயும் இனிமைக் கொடுக்கும் அப்படிப்பட்ட நல்ல பேச்சாளர்களால் மட்டுமே நாட்டில் பல நலன்களும் வளங்களும் பெருக வாய்ப்பு உண்டு. கல்வி கேள்வி ஆகிய இரண்டு செல்வங்களும் போல பேச்சாளரின் பேச்சும் கேட்போர்க்கு பெருஞ்செல்வமாகும்.

## பேச்சாளரின் அடிப்படை தத்துவம்

நல்லதொரு பேச்சாளருக்கு பல்வேறு அடிப்படை இயல்புகள் உண்டு ஆனால் ஒரே ஒரு அடிப்படை தத்துவம் கவனிக்கப்பட வேண்டியது .

## பேச்சாளர் பொருண்மை கேட்போர்?

பொதுவாக மேடைப்பேச்சு மூன்று அடிப்படை பொருண்மைகளைக் கொண்டதாக அமைய வேண்டும்.

1. ஏதேனுமொரு ஒரு பொருள் பற்றிப் பேசவரும் பேச்சாளர்கள் .
2. பேசுவதைக் கேட்கப் போகும் தனிப்பட்ட மக்கள்.
3. பொருண்மை பற்றிக் கேட்க எண்ணிக் கூடும் மக்களின் கூட்டுறவு.

இவை மூன்றும் இன்றியமையாத தத்துவங்கள் ஆகும்.

மேடையில் பேச வரும் பேச்சாளன் ஏதேனும் ஒரு பொருளை எடுத்து கொள்ளாமல் பேச முன்வர மாட்டார். அதேப்போன்று பேசுவதை விரும்பாதவர்கள் அக்கூட்டத்திற்கு வர மாட்டார்கள். தூண்டப்பட்ட சூழலில் பேச்சைக் கேட்க வந்த மக்கள் பேச்சாளரின் கருத்துக்கு இணங்கியும் அல்லது இணங்காமல் போகலாம்.

## பேச்சின்குறிக்கோள்

பேச்சாளர் தான் பேசுகின்ற கருத்துக்கள் அனைத்தும் நிகழ்வில் பங்குபெறும் சபையினர் அனைவருக்கும் சென்றடைய வேண்டும் என்று கருதுவர். ஆகையால் பேச்சாளன் கருத்துக்கள் ஆழமானதாகவும் வர்ணஜாலம் போன்ற அழகான கருத்துக்களைக் கொண்டதாக இருத்தல் வேண்டும். பேச்சாளர் பெயர் சொன்னாலே இவருடன் பேச்சு கேட்க கேட்க தித்திப்பாக இருக்கும் என்கின்ற எண்ணத்தை கேட்பவர்களுக்கு கொடுக்க வேண்டும் அந்த அளவிற்கு ஒவ்வொரு முறையும் மேடைப் பேச்சில் கலைத் திறனோடு பேசுதல் வேண்டும். பேச்சாளனின் வர்ணஜாலப் பேச்சு கேட்கும் போது நிகழ்வின் இடையில் எழுந்து செல்லாமல் ஒரே இடத்தில் அமர்ந்து கேட்கக்கூடிய உந்துதலை வழங்க வேண்டும். நிகழ்வில் பங்கு பெறாமல் வெளியே செல்பவர்கள் கூட இவருடைய பேச்சு சப்தத்தைக் கேட்டு மேடை முன் வந்து உட்காரும் அளவிற்கு அவருடைய பேச்சாற்றல் இருத்தல் வேண்டும். மொத்தத்தில் சபையோரின் எதிர்பார்ப்பைப் பேச்சாளர் தன் பேச்சு வன்மையால் திருப்திப்படுத்த வேண்டும். இதுபோன்ற பேச்சாளர்கள்தான் பேச்சுவன்மை கொண்டவர்களாக இருக்க முடியும்.

'தமிழ்த்தென்றல் ' திரு.வி.க. மற்றும் ஈரோடுப் பெரியார் ஈ.வெ.ரா ஆகியோரை

உதாரணம் கூறலாம். இவர்களுடைய பேச்சைக் கேட்கப் பெருங்கூட்டம் கூடும். இதிலிருந்து என்ன தெரிந்து கொள்ளலாமென்றால் பேசுவோர் கேட்போர் இருவரின் மனங்களும் ஒன்றுபட்டு இழைவதே ஆகும். கேட்போர் மனங்களைப் பேச்சாளர் தம் பேச்சுக்கு இணங்க இணங்கச் செய்ய வேண்டுமென்பதும் பேச்சின் குறிக்கோள் ஆகும்.

மக்கள் மனதில் இடம் பிடிக்கும் பேச்சாளர்கள் இங்கு பலர் உள்ளனர். அவர்களுள் குறிப்பிடத்தக்கவர்கள்.

கலைஞர் கருணாநிதி அவர்கள் அறிஞர் அண்ணாவின் அடுக்கு மொழிகளில் பேசி மக்களைக் கவர்வார் . சாலமன் பாப்பையா பட்டிமன்றங்களில் தரமான நாகரிகமான நகைச்சுவை கலந்த நிகழ்ச்சிகளை எடுத்துரைப்பது வழக்கம். லியோனி தன்னுடைய குரல் வளர்த்தால் பழைய பாடல்களைப் பாடி மக்களைக் கவர்வதில் வல்லவர். அவையில் பேசுவதற்கான பலர் அண்டிய நிகழ்வில் பேச வரவில்லை என்றால் அவருக்கு பதில் பேச்சாளர் அன்று அழைக்கப்படலாம் எதிர்பார்த்த பேச்சாளர் வரவில்லை சபையில் சிலர் கலைந்து செல்ல நேரிடும் அந்த சூழ்நிலையில் பேசுபவர் இந்த பேச்சாளர் வெளியேறும் நபர்களை கடிந்து கொள்ள கூடாது. அவ்வாறு செய்தால் இந்த பேச்சாளனை இருக்கும் பிறர் வெறுப்பதற்கான சூழ்நிலையை உருவாக்கிக் கொடுத்து விடும். ஆகவே அதை அறிந்து அடக்கத்தோடு பேசுவது பேச்சாளரின் சிறப்பு ஆகும்.

"வான் கோழி தன் பொல்லா சிறகைச் விரித்து ஆடியது" போன்ற செய்கைக்கு ஒப்பாகும்.

## குரல் பேதம்

பேச்சாளன் தன் குரல் வளத்தை பாதுகாத்தல் மிக முக்கியம். ஆகவே பேச்சாளன்

தான் உண்பது, அருந்துவது போன்றவற்றில் தனி கவனம் செலுத்துதல் வேண்டும் அப்போதுதான் குரல் வளத்தை பேச்சாளன் பேசும் காலம் வரைக்கும் பாது காத்துக் கொள்ள முடியும். பேச்சாளனுக்கு பேசுவதில் மட்டுமல்ல உண்பதிலும், குடிப்பதிலும் நாவடக்கம்தேவை.

மேடையில் பேசிக்கொண்டிருக்கையில் சில நேரம் பேச்சாளரின் வாய்க் குழறி வார்த்தைகள் வெளிவராமல் போகலாம் . சில நேரம் திக்குதலும் நா இடர்படுதலும் ஏற்படவாய்ப்புண்டு.

சில பேச்சாளருக்கு கீச்சு குரல் அமைந்திருக்கும். பெண் போன்ற குரல் கூட சில ஆண்களுக்கும் அமையப் பெறலாம். இத்தகைய குறைபாடு உடையவர்கள் தம் பேச்சு சாதுர்யத்தால் சபையோரைக் கவர்ந்து விடலாம். இவர்களுடைய பேச்சு திறன் அவர்களிடம் இருக்கும் குறைகளைப் பெரிதாக எடுத்துக் கொள்ளாமல் செய்துவிடும்.

"நாவலர்" எனப் போற்றப் பெறும் நெடுஞ்செழியனுக்கு சிறுவயதில் பேச்சுக் கோளாறு, உச்சரிப்பு வரவே வராது . அந்த பலவீனத்தையே தன் பலமாக, பேச்சின் அடையாளமாக மாற்றி வெற்றி கண்டவர் நாவலர்.

திரைப்படத்தில் பாதி வசனத்தைப் பேசிவிட்டு மீதியை ரசிகர்களே புரிந்து கொண்டு சிரிக்கட்டும் என பேச்சின் நடுவே இடைவெளி விடுவதைப் போல, முதன்முதலில் மேடையில் கொண்டு வந்தவர் நாவலர்.

மேடையில் விறுவிறுப்பாகப் பேசிக்கொண்டே செல்பவர் திடீரென பேச்சை நிறுத்தி இறுதியாக அவருக்கு உச்சரிப்பில் ஒத்துழைப்பு தராத 'ங' மேல் புள்ளி வைத்து ' ங் '....... என ஸ்டைலாக இழுப்பார் . அதிலேயே அவர் யாரைச் சொல்ல வருகிறார் எதைச்

சொல்ல வருகிறார் என்பது எதிரில் அமர்ந்திருப்பவர்களுக்குப் புரிந்து கரவொலி விண்ணைத்தொடும்.

## ஒன்பது நன்மணிகளும் பதினெட்டு நயமொழிகளும்

### நன்மணிகள்

1.ஐயந்திரிபற யோசித்துப் பேசக்கூடிய செய்திகளை முன்கூட்டியே தீர்மானிப்பதும் பேசிப் பழகிப் பார்ப்பது முறை.

2.பேச வேண்டியவற்றைக் குறிப்பு எழுதிப்பார்த்து தேவைக்கேற்ப கால அளவிற்கேற்ப நீட்டவோ சுருக்கவோ செய்யலாம். குறிக்கோளைக் குறித்துத் தெளிவாகவும் விரிவாகவும் பேசுதல்.

3.சபையோரின் கவனத்தை ஈர்க்கும் வண்ணம் பேச்சை அடுக்கி தொடுத்து மனதில் பதித்தல் வேண்டும். சபையினரின் நோக்கமறிந்து கொடுத்த காலத்திற்குள் பேச்சை முடிக்க வேண்டும்.

4.மேடையில் பேச்சாளர் முழு உருவம் தெளிவாகத் தெரியும் படி அவைத்தலைவர் அருகே நின்று சபையோரை விளித்துப் பேசுதல்.

5.மாறுபட்ட கருத்துடையோரையும் நோக்கி அவர்களும் இணங்கும் வகையில் பேசிவிட்டால் சபையில் ஏனையோரை ஈர்ப்பது எளிது.

6.விரைந்து இரைந்து பேசலாகாது மிக சாதாரணமாக பேசும் வார்த்தைகளில் கவனம் செலுத்தி அழுத்தம் கொடுத்து உச்சரித்து பேசுவது நல்ல பேச்சு இலக்கணமாம்.

7.தன் குரலை உயர்த்தியும் தாழ்த்தியும் ஏற்ற இறக்கத்தோடு பேசுதல்.

8.குறிப்புகளை கையில் வைத்துக்கொண்டு குறிப்புகளை உள்வாங்கி படிக்காமல்

அவ்வப்போது பார்த்து பேசுவது சரியன்று தேவைப்படும் போது ஒரு சில சமயங்களில் பார்த்து அவையோர் அவை முழுமையும் கண் ஆளவேண்டும் அந்த நோக்கில் பார்வையை செலுத்தி பேசுதல் நலம்.

9.மேடையில் உலாவி பேசுதல் அவையோரை நோக்காது பேசுதல் பய உணர்வில் சாய்ந்து நின்றபடி பேசுதல் சபைக்கு உகந்ததல்ல எதுவும் அளவோடு இருப்பது சிறப்பு.

## நய மொழிகள்

1.தேவையான இடங்கள் தவிர இதர எல்லா இடங்களிலும் ஆற்றோட்டமான நீர்வீழ்ச்சி போல் பேச்சு பொங்கிப் பிரவாகித்து வெளிவரட்டும்.

2. பொருத்தமான உதாரணங்களே பேச்சிற்கு வெளிச்சம் தரும் சாளரங்கள்.

3. சுருங்கச் சொல்; விளங்க வைத்தல்; ஆய்ந்து பேசுதல்; நயம்பட முடி.

4.ஊக்குவி; ஊட்டுவி; உணர்வி; விவரி.

5.நின்று பேசு; நிமிர்ந்து பேசு; உரக்கப் பேசு; ஊன்றிப் பேசு.

6. பேசும்போது யாராவது கேள்வி கேட்டால் தவறாகவேனும் பேசு தயங்காதே; தளராதே; தலை கவிழாதே; தலை மறையாதே.

7. இருபது நிமிடமே சபையோர் பொறுமைக்கு அளவுகோலாம் (1949 -இல் சொல்லப்பட்டது).

8.மூன்று நிமிடங்களில் தண்ணீர் காணாவிட்டால் பேச்சுக்கிணறு தோண்டுவதை கைவிடு.

9.மெல்லிய குரலில் பேசத்துவங்கு; படிப்படியாக உயர்த்து உணர்ச்சி வேகம் காட்டு; கரவொலியால் நீ கவரப்படுவாய்.

10. பேசும்போது அமைதிகவும், அவசரப்படாமலும்  பேசு.

11. களைப்புடன் இருக்கும் போது பேசக்கூடாது மேடைக்குச் செல்லும் முன் போதிய அளவு ஓய்வு எடு.

12.அதிக பசி, அதிக உணவு உண்டு பேசாதே.

13.பேசும்போது தேவையற்ற உடல் மொழி கூடாது.

14.சொல் நயம் மிக்கதாகவும், தெளிவாகவும் பேசு.

15. தேவைப்பட்டால் மட்டுமே கையில் குறிப்பு வைத்துக் கொண்டு பேசு.

16. ஒரே விஷயத்தை தேவையின்றி திரும்பத் திரும்பச் சொல்லாதே.

17.பேசும்போது உன் பார்வையை எதிரில் உள்ளோர் அனைவர் பக்கமும் செலுத்து.

18. குறித்த நேரத்தில் பேச ஆரம்பிக்கவும், குறித்த நேரத்தில் பேச்சை முடிக்கவும் பழகிக்கொள்.

**பேச்சுச்சு சுவை**

பேச்சு சுவைபட அமைத்தல் வேண்டும் என்பது அனைவரின் எதிர்பார்ப்பாகவே இருக்கும். ஒன்பான் சுவைகள் பேச்சுக்கு உண்டு என்பது டி.எம்.தெய்வசிகாமணி அவர்களின் கருத்து. அக்கருத்தாவது சங்கீதக் கலையை ஒத்து மேடைப் பேச்சுக்கும் ஒன்பது சுவைகள் உள்ளன. அவை அதிசயம், கோபம், கருணை, இகழ்ச்சி, சாந்தம், சிருங்காரம், பயம், பெருநகை, வீரியம் என்பதாகும்.

பேசும் கருத்தை சுவைபடக் கூறுதல் சிறப்பு.

## அவலச்சுவை

இறந்த மனிதர் ஒருவரை பற்றிப் பேசும்போது பேச்சாளர் எந்த சூழ்நிலையிலும் அவரை இகழ்ந்து பேசக்கூடாது. துக்க வீட்டில் இடிந்து போனவர் பற்றி அவருடைய பெருமைகளை அளவோடு பேசி குறித்தக் காலத்தில் முடித்தல் நலம். வாழ்வில் நிகழ்ந்த சில நல்ல சம்பவங்களை மட்டும் நினைவு கூர்ந்து பேச்சாளர் எடுத்துக் கூறலாம். அவரோடு பழகிய நண்பர்கள் உறவினர்களுக்கு இந்த பேச்சு மீண்டும் அவரோடு பழகிய காலங்களை நினைவுபடுத்தும் அவலச்சுவையுடன் கூடிய இந்த பேச்சு எவர் மனதையும் புண்படுத்தாதவாறுகாத்துக்கொள்ளவேண்டும்.

## நகைச்சுவை

எந்த ஒரு நிகழ்விலும் நகைச்சுவை பேச்சாளருக்கு தனி இடம் உண்டு. பேசுபவர் நகைச்சுவை கலந்த தோணியோடு பேசினால் அவையோர் மனதில் காந்தமாக ஈர்க்கப்படுவார் நீண்ட நாட்கள் மனதில் நிலைத்தும் நிற்பார். எந்த அளவிற்கு என்றால் அவரை அடுத்த முறை ஏதேனும் மேடையிலோ அல்லது எதார்த்தமாக எங்கோ ஒரு இடத்தில் கண்டாலும் சட்டென்று அடையாளம் கூறுமளவிற்கு சபையில் அல்லது நிகழ்வில் நகைச்சுவையோடு பேசுவது என்பது ஒரு சிறந்த கலை. அவ்வகையில் அமையும் சில மேடை நிகழ்வுகள் இருக்கின்றன. அவை பட்டிமன்றங்கள், வழக்காடு மன்றங்கள் என்பனவையைக் கூறலாம். பட்டிமன்றம் என்றால் நகைச்சுவை பேச்சாளர்கள் சாலமன் பாப்பையா, நெல்லை கண்ணன், திண்டுக்கல் லியோனி இவர்களின் நகைச்சுவையான பேச்சுக்கள் தான் நினைவிற்கு வரும்.

மாவட்ட தலைநகரங்களில் “நகைச்சுவை மன்றங்கள்” வைத்து வாரா வாரம் மாதா

மாதம் கூட்டங்கள் நிகழ்த்தி வருகின்றார்கள். மாணவ மாணவிகளை நகைச்சுவைத் துணுக்குகளை பேச வைத்து கேட்டு பரிசு கொடுத்து ஊக்கப்படுத்துகிறார்கள்.

## வீரியப்பேச்சு

வீரியம் என்பது அநீதிகளை தட்டிக் கேட்கும் ஒருவித ஆற்றல் அல்லது வல்லமை. பேச்சாளர்கள் தான் கூற வந்த கருத்துக்களை ஆணித்தரமாக கேட்பவர் மனதில் பதிய வைக்க மக்களுக்கு ஏற்படும் அநீதி, அக்கிரமங்கள், கொடுமைகளைக் கண்டிப்பதற்கும் வீரியப்பேச்சுஅவசியம்.

வீரம் செறிந்த பேச்சாளரின் பேச்சில் ஈரம் அல்லது கருணை என்ற பசை தடவி விட்டிருக்க வேண்டும். அவ்வாறு பேசுவதே உண்மையான வீரியப்பேச்சாகும்.

## வஞ்சப்புகழ்ச்சி


இலக்கண நூலாசிரியர் தண்டியாசன் தம் தண்டியலங்கார நூலில் செய்யுளுக்குரிய அணிகளுள் ஒன்றான வஞ்சப்புகழ்ச்சி அணியைக் குறிப்பிடுவார்.

புகழ்வது போல் இகழ்வதும், இகழ்வது போல் புகழ்வதும் வஞ்சப்புகழ்ச்சி அணி ஆகும். இவ்வணியை அப்படியே பேச்சில் கொண்டு வந்து விடுவது உண்டு. எதிரியை பற்றிக் கூட நாகரிகமாக பேச வேண்டும். இகழ்ந்து பேசும்போது கூட மேடை நாகரிகத்தை பின்பற்றுவதுதான் ஒவ்வொரு பேச்சாளரின் கடமையாகும். பேசும் பேச்சு எதிரியைப் புகழ்வது போல இகழ்வதாக வஞ்சப்புகழ்ச்சியாக அமையலாம். புரிய

வேண்டியவர்களுக்குப்புரிந்தால்போதும்.

## உள்ளமும் உறையும்

பொது மேடையில் பேசும் பேச்சாளர்களுக்கு உள்ளம், உரை, செயல் ஆகிய மூன்று முக்கிய கோணத்தில் செயல்பட வேண்டும்.




‘உள்ளத்தில் ஒளி உண்டாயின் வாக்கினிலே உண்மை உண்டாகும்’ என்பது ஒரு கல்லூரியின் கோட்பாடு. ஒவ்வொரு மனிதனுக்கும் இந்த கோட்பாடு பொருந்தும். ஒரு பேச்சாளன் தன் உள்ளத்தில் தோன்றும் கருத்துக்களை மணிகளாக கோர்த்து பேச்சு எனும் மாலையாகச் சபையோருக்கு அணிவிக்கலாம். அது பேச்சாளரின் செயல் வடிவில் மணம் பரப்பவேண்டும்.

உள்ளம் என்பது ஓர் உரைகல். கற்றல், கேட்டல், உணர்தல் போன்ற பல்வேறு பரிமாணங்களில் மனிதன் தம் உள்ளத்து உணர்வுகளை வளர்த்துக் கொள்கின்றான். அவ் உணர்வுகள் ஒருங்கே திரண்டுச்செல்லும் இடத்திற்குச் செல்ல வேண்டும். அது அவனை

இச்சமூகத்திற்கு அடையாளம் காட்டும் என்பது நிச்சயம். பேச்சாளனுடைய உள்ளத்தில் உள்ளுவது வாக்கினிலும் அவனுடைய செயல்களிலும் வெளிப்படும். ‘உள்ளுவதெல்லாம் உயர்வு அல்ல’ என்பான் வள்ளுவன் பெருந்தகை.

உள்ளத்தில் நல்ல எண்ணம் உருவாகும்போது அவை கேட்பவர் காதுகளில் தேனாக பாய்ந்து இதயத்தில் இறங்கி மூளையில் இடம் பிடிக்கும்.

‘விழியில் விழுந்து இதயம் நுழைந்து உயிரில் கலந்த உறவு’ என்று காதலை பற்றி கவிஞர் வைரமுத்து எழுதினார். அதுபோல உள்ளத்தில் எழும் எண்ணங்களை மேடைப்பேச்சாளர் தன் உரையில் சுவைபட வெளிப்படுத்துவார்.

## உள்ளம் என்பது யாது?

உள்ளம் என்பது எதைக் குறிக்கும்? உடனுள் உள்ளே உள்ள இதயத்தைக் குறிக்கிறது என்பர் சிலர்; அல்ல இதயம் என்பது உடலின் இரத்த ஓட்டத்தை சீராக்க உதவும் ஒரு முக்கிய உடலுறுப்பு. உள்ளம் என்பது மூளையைக் குறிக்கும் என்பர் ஒரு சிலர். மூளையில் தோன்றும் கருத்தை வாய் வழியே மனிதன் பேசி உலகுக்கு தெரிவிக்கின்றான். எண்ணங்களை செயலாக்கி புற உலகிற்கு வெளிக்கொணர்கின்றான்.

காலில் முள் குத்துகின்றது வலியை உணர்கின்றான். பின் மூளையின் ஆணைக்குப் பிறகு முள்ளை பாதத்தில் இருந்து எடுக்கின்றான். இவ்வாறு மூளையின் ஆணைக்குப் பிறகு செயல்படுவது இச்சையுடனான செயலாகும்.

அனிச்சை செயல்களாக மனித வாழ்வில் சில நடக்கும்.

"உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே
இடுக்கன் களைவதாம் நட்பு."

குறள்- 788

ஒருவன் எதிர்பாராத நேரத்தில் தான் கட்டிய வேட்டி அவிழும் போது மூளையின் ஆணைக்குக் காத்திருக்காமல் கை விரைந்து அவிழும் தருவாயில் இருக்கும் வேட்டியை பிடித்து இடுப்பில் கட்டுகின்றது இதுவே அனிச்சை செயலாகும்.

காணுதல், கேட்டல், முகர்தல், சுவைத்தல், உணர்தல், எண்ணம், விருப்பம், வெறுத்தல், ஆய்தல், உரைத்தல் போன்ற உணர்வுகள் நிகழும். இவை யாவும் உள்ளத்தில் இருந்து உதிப்பனவாகவே தோன்றும். இந்த உள்ளம் எங்கே இருக்கிறது என்று சாதாரண மனிதனிடம் கேட்டால் தன் நெஞ்சின் இடப்புறத்தை தொட்டு காட்டுவான் இந்த இதயத்துக்கும் மூளைக்கும் இடையேயான தொடர்பை அறிஞர்கள் விளக்குவார்கள். மனித உடலிலுள்ள நரம்பு தொடர்புகளால் மூளை இயக்கப்படுகிறது. அந்த இயக்கத்தால் உருவாக்கப்பட்டது 'மனம்' என்று மேலை நாட்டினர் கூறுவர் எனவே 'உள்ளம்' 'இதயம்' இரண்டும் இரண்டறக் கலந்து நிற்கும் ஒர் அரிய நிலையே.

நல்ல எழுத்தாளர் தம் இதயபூர்வமாக தோன்றுவதை மறைக்காமல் எழுதுபவர். இதயத்தில் எழும் எண்ணங்களை வாய்மொழியாகப் பேசுபவர்கள் பேச்சாளர்கள் இத்தகைய பேச்சாளரை நாவலர் ஆவர்.

"எண்ணங்களில் நல்லனவும் உண்டு; தீ எனவும் உண்டு; நல்ல எண்ணங்களால் பழுத்த மனமுடையாரை எந்த வகைத் தீமையும் எதுவும் செய்யாது" என்று திரு.வி.க கூறுவார்.

"வெள்ளத் தனைய மலர் நீட்டம் மாந்தர்தம்
உள்ளத்தனையதுஉயர்வு"

குறள்-595

## ஒரு முகப்பட்ட மனம்

பேச்சாளருக்கு ஒருமுகப்பட்ட மனம் இருக்க வேண்டும். சிக்மன்ட் பிராய்டு, யூங் போன்றவர்கள் மனதை மேல் மனம், நடு மனம், ஆழ்மனம் என்று மூன்றாக பகுப்பார்கள். இந்த மனதை ஒருமுகப்படுத்தி உள்ளொளியை உலகிற்கு எடுத்துச் சொல்வதாக பேச்சு வெளிவரவேண்டும்.

உள்ளத்திலேயே உள்ளொளி கண்டவர்கள் மட்டுமே சிறந்த பேச்சை, எழுத்தை வெளிக்கொணர முடியும். ஜாதி, மத, மொழி, மனம், நாடு கடந்து இந்நாடும் ஒளி வீசும். திருக்குறளை உதாரணமாக கூறலாம். சுதந்திரம் வாங்கித் தந்த மகாத்மா காந்தியடிகளின் பேச்சு அதி நுட்பமானது. இவர்களைப் போன்ற உள்ளத்தில் உள்ளொளி கண்ட பெரியார்கள் இந்தியாவில் ஏராளமானோர் உண்டு.

தஞ்சை பெரிய கோயிலின் கோபுர உச்சியில் காணப்படுகின்ற ஓர் ஆங்கில பதுமையின் தோற்றம் ஓர் ஓவியரின், சிற்பக் கலைஞரின் உள்ளொளியில் தோன்றிய உருவம்தான் என்று அறிஞர் தெய்வசிகாமணி கருதுவார்.

## பேச்சும் எழுத்தும்

ஒரு சிறந்த பேச்சாளருக்கு பேச்சும் எழுத்தும் இரண்டு கண்கள். பேச்சில் சிறந்தவர் பேச்சாளர், எழுதுவதில் சிறந்தவர் எழுத்தாளர். ஆனால் பொதுவாக எழுதுகின்றவர்களுக்குப் பேச்சு வருவதில்லை, பேசுகின்றவர்களுக்கு எழுத்துக்கள்

வருவதில்லை. பேசும் திறனும், எழுத்து திறனும் இரண்டும் பெற்று வாசகர்களை கவரும் திறமை உடையவர்கள் விரல் கொண்டு எண்ணுமளவிற்கு மிகச் சிலரே உளர். அவர்களுள் மக்கள் கண்டுத் தெரிந்துணர்ந்த பிரபலங்களுள்ளும் உளர். அறிஞர் அண்ணா, கலைஞர் கருணாநிதி, நாவலர் நெடுஞ்செழியன், வைகோ, வைரமுத்து இவ்வாறு பட்டியலிடலாம்.

## பேச்சும்சிந்தனையும்

சிந்தனை என்பது பகுத்து அறிவும் 'பகுத்தறிவும்' என்பதாகும். மனிதனை பிற உயிர்களிடமிருந்து உயர்ந்த தகுதி நிலைக்கு எடுத்துச் செல்வது பகுத்தறிவு என்கின்ற ஆறாம்அறிவே.

பேச்சு சிந்தனைக்கு நிகரான இடத்தை பெற்றிருந்தாலும் சில ஐந்தறிவு ஜீவன்களுக்கு ஆறறிவு படைத்த மனிதன் கற்றுக் கொடுத்தால் பேசி விடுகின்றவையாக விளங்குகின்றன.

பேச்சும் சிந்தனையும் மனிதனுக்குரியன. இருப்பினும் சிந்தனை மட்டுமே இந்த இடங்களில் முழுமையாக மனிதனுக்குரியதாக விளங்குகின்றன.

"நூறு ஆண்டுகள் வாழ்பவனைப் போல செயலாற்று, ஆனால் நாளைய இறந்து விடுபவனை போல் சிந்தனை செய்" என்பது பழமொழி.

சிந்தனை செய் மனமே! செய்தால்

தீவினைஅகன்றிடுமே!

என்ற முருக பக்திப் பாடல் உண்டு.

சிந்தனை அவரவர் ஈடுபாடு, புத்திக்கு ஏற்ப வெளிப்படும் உணர்வு. உதாரணமாக, புல்

வெளி மற்று நீரோடை இரண்டையும் காணும் ஒரு வெளிநாட்டான் இதை எப்படி பொழுதுபோக்கு இடமாக மாற்றலாம் என சிந்திப்பான். ஆனால், நம்மவன் அதே அழகிய இடத்தைக் கூட கழிப்பிடமாக மாற்றிவிடுவர். அதற்கு காரணம் சிந்தனை மனிதனுக்கு மனிதன்மாறும்தன்மையது.

மதுரை வாழ்னர் நால்வர் உளர். அவர்கள் நால்வரிடமும் "நீங்கள் மதுரையைப் பற்றி அதன் சிறப்பு பற்றி கூறுங்கள்" என்று கேட்கப்பட்டது. முதலாமவர் கூறினார் 'எங்கள் ஊரில் மீனாட்சி அம்மன் கோயில் பிரபலமானது' என்றார். இரண்டாமவர் 'எங்கள் ஊரில் மதுரை கதம்பம் சிறப்பானது' என்றார். மூன்றாமவர் 'சங்கத்தமிழ் உருவானதே எங்கள் மதுரையில்தான்' என்றார். நான்காமவர் 'எங்கள் ஊரில் உள்ள திருமலை நாயக்கர் மகால் கட்டிடக்கலைக்குச் சான்று' என்றார்.

"செப்பு மொழி பதினெட்டுடையாள்
எனினும்சிந்தனைஒன்றுடையாள்"

என்றான் பாரதி. இந்தியன் என்ற ஒன்றுபட்ட சிந்தனை தேவை என்று பாரதியார் வலியுறுத்தினார்.

பேச்சாளர்கள்தத்தம்மூளையின்

1.ஆர்வம்

2.அறிவுத்திறன்

3.ஈடுபாடு

4.பயிற்சி

5.முயற்சி

இன்ன பிற காரணிகளுக்கேற்ப தன் சிந்தனை திறனை அவ்வத் துறைகளில் வளர்த்துக் கொள்கிறார்கள்.

ஆன்மீகச் சிந்தனை உடையவர்கள் அத்துறையில் சொற்பொழிவு செய்கின்றனர். சமூக அக்கறையில் ஈடுபாடு உடையவர்கள் அத்துறையில் விவாத மேடை, பட்டிமன்றம், சுழலும் சொல்லரங்கம் போன்றவற்றில் பேசும் சிந்தனையை வளர்த்துக் கொள்கின்றனர்.

கவிஞர்கள் தன் படைப்புகளின் ஆளுமையைப் பொறுத்து அவர்களுக்கென்று தனிப் பெயர் சுட்டுவது நம் தமிழர்கள் பாவேந்தர் தம்முடைய பாடல்களில் புரட்சிகரச் சிந்தனையை தட்டி எழுப்பினார் ஆகவே புரட்சிக் கவிஞர் என்றழைக்கப்படுகிறார். சில அரசியல் கட்சியை சேர்ந்தவர்கள் புரட்சிகரமான சிந்தனைகளை மக்கள் மத்தியில் பரப்பிவருவதைக்காணலாம்.

1. சிறந்த பேச்சாளர்கள் என்பவர் யார்?

2. பேச்சாளர் கூறிய தகுதிகள் யாவை?

3. அவர்களுக்கு இருக்க வேண்டிய அறிவு யாது?

4. ஒன்பது நன்மணிகள் குறித்து எழுதுக.

5. பதினெட்டு நய மொழிகள் யாவை?

6. பேச்சுச்சுவைக் குறித்து எழுதுக.

7. நல்ல பேச்சாள் உள்ளமும் முறையும் என்பதை விளக்குக.

8. பேச்சும் எழுத்தும் குறித்து விளக்குக .

9. பேச்சாளனுக்கு இருக்க வேண்டிய கடமைகள் யாது?

10. நல்ல பேச்சாளன் ஆக எவ்வகைப்பட்ட அறிவு இருக்க வேண்டும் விளக்குக.

# அலகு 2

## பேசும்முறை

பேச்சாளர்கள் பல வகையினர் உளர். ஒவ்வொரு பேச்சாளரும் ஒவ்வொரு தனிப்பட்ட முறையை பின்பற்றி பேசுவர். ஒவ்வொருவரும் அவருக்கு உரித்தான முறையை பின்பற்றி பயிற்சி எடுத்து பேசுவர்.

பேசும் முறை நம்மில் பலர் சில குறிப்பிட்ட வார்த்தையை அடிக்கடி பயன்படுத்துவதுண்டு. பள்ளி, கல்லூரிகளில் ஆசிரியர்கள் உரையாடலின் போது புரிந்ததா, அப்படியா, so, but, வந்து, அது, என இது மாதிரியான வார்த்தைகளை அடிக்கடி பாடம் நடத்தும்போது இடையிடையே வருவதை காணலாம். இந்த வார்த்தை அவர்களை அறியாமலே வருவது. இவர்கள் பாடம் நடத்தும் போது மட்டுமல்லாமல் சில நேரம் வெளியே மற்றவர்களிடம் உரையாடும் போதும் தொடர்ந்து விடும். இதனாலே மாணவர்கள் இவர்களுக்கு என்று தனி பெயரை வைத்து விடுவர். உதாரணமாக புரியுதா என்ற வார்த்தையை ஒரு ஆசிரியர் அதிகமாக பயன் படுத்தினால் அவருக்கு புரியுதா சார் என்று பெயர் வைத்து வருகிறார். டா என்று பேசும் வழக்கம் பள்ளி, கல்லூரிகளில் இருக்கும் ஒரு சூழ்நிலை அன்றைய காலகட்டங்த்திலிருந்தே உருவாகியுள்ள சூழ்நிலையை காணலாம்.

தற்போது தொலைக்காட்சியின் நிருபர்கள் பேசும்போது இது மாதிரியான சில வார்த்தைகளை அடிக்கடி அவர்களை அறியாமலேயே பயன்படுத்தி கொண்டிருப்பது கேட்கவும் பார்க்கவும் முடிகிறது.

அரசியல் மேடைகளில் இது மாதிரியான சொல்லாடல்களை அடிக்கடி கேட்கலாம். இதனால் யாவருக்கும் சொல்லிக் கொள்வது என்னவென்றால் என்பது போன்ற நீண்ட

சொற்றொடர்களை கூட சிலர் அடிக்கடி பயன்படுத்துவார்கள். ‘ஆகவே’, ‘எனவே’, ‘அந்த முறையில்’, ‘ஏதோ’, ‘ஆகட்டும்’, ‘மகத்தான’, ‘உண்மையில்’, ‘ஆனபடியாலே’, ‘என்னவென்றால்’ இப்படி பல மொழியொலிகள் எழுதுவதுண்டு.

‘நான் கேட்கிறேன்’, ‘அப்படி கேட்கிறேன்’, ‘அதை நான் கேட்கிறேன்’, ‘நன்றி நன்றி’, ‘ஆம் ஆம்’ என்ற வார்த்தைகளை தம் பேச்சினூடே பத்து இருபது முறை பயன்படுத்துவார்கள். இப்படி பேசும் பேச்சாளர்களை இன்றும் மேடையில் பார்க்க முடிகிறது. இதனைப் பழம்பெறும் எழுத்தாளர் எம்.தெய்வசிகாமணி ‘மொழிச்சேட்டை’ என்றும் இது நல்ல தரமான பேச்சாளனுக்கு உகந்த பழக்கம் அல்ல எனவும் வலியுறுத்துவார்.

## குற்றமானமுறை


மேடையில் பேசுகையில் கதை அல்லது நடப்பு நிகழ்வை பேசும் தலைப்புக்கு பொருத்தமானதாக தேர்ந்தெடுத்து பேச வேண்டும். அதை தவிர்த்து சம்பந்தமில்லாத கதைகளை மேடைகளில் பேசுவது குற்றம். எல்லோரும் கூறிய கதைகளையே எடுத்துக்காட்டாக கூறாமல் தாம் புதிய புதிய கதைகளை நாட்டு நடப்புகளை எடுத்துக் கொண்டு பேச வேண்டும். அரசியல் மேடைகளில் முறையற்ற பேச்சுக்கள் அதிகம் இடம்பெறவாய்ப்புஉண்டு.

## பேச்சாளனுக்குஏற்படும்சோர்வுகள்

மனிதனுக்கு இரத்த ஓட்டம் இருக்கும் வரை ஆடாத ஆட்டம் ஆடுவான்; பேசாத பேச்சை பேசுவான்; சோர்வே அடைய மாட்டான். இரத்த ஓட்டம் குறைய குறைய

ஆட்டப்பாட்டங்கள்குறையத்தொடங்கும்.

இது பொதுவான நியதி




பேச்சாளனுக்கு ஏற்படும் சோர்வை இரண்டு வகையாக பார்க்கலாம்.

1. உடற் சோர்வு
2. மனச்சோர்வு

பேச்சாளனுக்கு மனச்சோர்வு ஏற்பட பல காரணங்கள் உள்ளன. நல்ல ஆரோக்கியமான உடல் கட்டு இருந்தால் மனோதிடம் இருக்கும். குறிப்பாக பேச்சாளருக்கு

1. சபைச் சலச்சலப்பு
2. சரக்கு குறைவு
3. படிப்பின்மை
4. குடும்பச் சூழ்நிலை
5. சமூகச் சூழ்நிலை

இவை போன்ற பற்பல காரணங்களால் பேச்சாற்றலில் மனச்சோர்வை உண்டாக்கும். தைரியமின்மை அல்லது கோழைத்தனம் மறதி சொற்சோர்வு ஆகிய பிறவும் சூழல் காரணமாக உருவாகும் சிற்றெறும்பு போல உள்ள பிரச்சனைகளும் மலைகளென பெருக மனச்சோர்வு உண்டாக வாய்ப்பு உண்டு மனச்சோர்வு காரணமாகவே உடற்சோர்வு 70%

உண்டாகும்.

## சொற்சோர்வு

மேடையில் பேசும்போது சொற்சோர்வு இன்றி ஒருவர் பேசுவதற்கு பேச்சாளருக்கு தேவை பல நூல் அறிவு அவையோரைக் கவர்ந்திருக்கும் சொற்தேர்வும் ஆகும் இம்முறையை சரிவர கையாளுகையில் சொற்சோர்வின்றி பேசலாம்.

பேச்சாளன் மேடையில் பேச வேண்டிய கருத்துக்களை முன்கூட்டியே மனதுக்குள் சொல்லிப் பார்த்தல் கருத்துக்களை தொகுத்து வைத்தல் ஒலி குறைபாடு இன்றி பேசுதல் மனதில் வேறு எந்த எண்ணத்தையும் திணிக்காது தான் பேச இருக்கும் கருத்து பற்றிய நிதானமாக சிந்தித்து அவையோருக்கு ஏற்றார் போல பேசும் சூழலை உருவாக்குதல் இலக்கியங்களை இலக்கண பிழையின்றி அதற்கான சரியான ஒலி அளவை கொண்டு மூத்த பேச்சாளர்கள் பேசும் அனுபவத்தை உள்வாங்கிக் கொள்வதே நல்ல பேச்சாளரின் இலக்கணமாகும். அப்படிப்பட்டவருக்கு சொற்சோர்வு, மனச்சோர்வு, உடற்ச்சோர்வு ஏற்படாதுஎன்பதுஉறுதி.

## கருத்துச்சோர்வு

“சொலல்வல்லன் சோர்விலன் அஞ்சான் அவனை

இகழ்வெல்லல்யார்க்கும்அரிது.”

குறள்-647

பேசும் ஒவ்வொரு விஷயம், இடம் அறிந்து பேச வேண்டும் என்பார்கள். அதற்கு காரணம் நாம் பேசும் ஒன்றிலிருந்து பிறப்பது தான் நமக்கு வருகின்ற இன்பம், துன்பம்.

தான் பேசுகின்ற கருத்து இடமறிந்து தெளிவாக பேசிவிட்டால் நம் வாழ்வில் எந்தவித குறைவும் வருவதில்லை கருத்து அவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தது.

மேடையில் பேசும் பேச்சாளனுக்கு முக்கியமான ஒன்று கருத்து அவன் பேசும் சொல்லின் வலிமை அவையோரை ஈர்க்க வேண்டும். கருத்துக்கள் ஒவ்வொன்றும் தங்கு தடையின்றி அருவியாக கொட்டிடல் நலம் விளைவிக்கும் அதே போன்று கருத்துக்களில் புதியன பல புகுத்துதல் நன்று.

கருத்துக்களை கோர்வையின்றி முரண்பட நின்று யோசித்து பேசுவோரை அவையோர் விரும்புவதில்லை அவையோரால் நிராகரிக்கப்படும் முதல் நபராக அந்த பேச்சாளர்இருப்பார்என்பதுநிஜம்.

பேசும் கருத்து உண்மையானதாக போலித்தனம் இல்லாததுதானா என தேர்வு செய்து பேசுதல் வேண்டும் தான் பேசும் கருத்து உண்மையானது என்று நம்பிக்கை இருப்பின் மனச்சோர்வு இருக்காது தெளிவுத்தோற்றம் முகத்தில் பிரகாசிக்கும்.

உடல் சோர்வு ஏற்படாது திடமாக நின்று மேற் சொன்னவைகளை மக்களுக்கு முன் எடுத்துவைத்தல்ஒர்அழகு.

மேலேசொல்லப்பட்ட

1.உடல் சோர்வு

2.மனச்சோர்வு

3.சொற்சொர்வு

4.கருத்துச்சோர்வு

ஆகிய நான்கும் மேடைப்பேச்சாளரை பாதிக்கும் நான்கு காரணிகள் ஆகும் இத்தகைய நான்கு சோர்வுகளும் தம்மை அண்டாது பாதுகாத்தல் சிறப்பு.

## அவையோர் உளவியல்

மேடை, ஊடகம், கல்வி, நிறுவனம், தொழிற்சாலைகள் என அனைத்தும் வெவ்வேறு பட்டத்துறை நிகழ்வுகளில் பேசும்போது அவையோரிடம் மனதறிந்து பேச்சாளன் தன் பேச்சை வழங்க வேண்டும். பேச்சாளன் தன் மேடைப்பேச்சு முடியும் வரை அவையோரை ஈத்துக் கட்டி போட்டிருத்தல் வேண்டும். சொல்லப்போனால் தன் கட்டுப்பாட்டில் வைத்திருத்தல் வேண்டும்.

அவையோரை

1.படித்தமக்கள்

2.பாமரமக்கள்

3.குற்றம்காண்போர்

என பிரிக்கலாம் படித்த அவையோர் பேச்சாளரின் கருத்துக்களை தாம் ஏற்கனவே கேட்டவர்கள் பேச்சோடும், கற்ற நூல்களின் கருத்துக்களோடும் ஒப்பிட்டு பார்ப்பார்கள். பாமர மக்கள் பேசுவோரை ஊன்றிக் கவனித்து இன்புறுவார்கள். ஆனால் மூன்றாவது சொல்லப்பட்ட குற்றங் காண்பவர் மனது எப்போதும் குற்றங் காண்பதிலேயே ஈடுபட்டு இருக்கும். எவ்வித பேச்சாளர்களும் அவர்கள் திருத்தி விட முடியாது. திருப்தி படுத்தவும் முடியாது. அவர்களை திருத்த வழி குறைவு. .

அவையோர் எதிர்பார்க்கும் அளவிற்கு அறிவுக்கும், நோக்கத்திற்கும், கொள்கைகளுக்கும் ஏற்றுவாறு ஒரு பேச்சாளர் பேசுவதை முறையாகும். உலகப்பொது அறிவும், மானிட சக்தியும் பிணைந்து நிற்பதே நல்ல பேச்சின் இலக்கணம் ஆகும். நல்ல மருத்துவர் எவ்வாறு தன்னிடம் வரும் நோயாளியின் நாடியைப் பிடித்துப் பார்த்து மருந்து

கொடுக்கின்றாரோ அதுபோல பேச்சாளர் சபையோரின் நாடித்துடிப்பை உணர்ந்து இரை போடவேண்டும்.

தாம் பேசிப் பழகியவர்கள் முன்பு பேச நேரிடலாம் . பழகாத புது இடங்களில் பேச வேண்டியிருக்கலாம் . இடம், காலம் , இயல்பு என்று அவையோரைக் கூறுபடுத்திக் கொள்ளலாம். பழகிய பேச்சாளர் பேசும் போது அவையோரும்' இவர் இப்படித்தான் பேசுவார்' என்று முடிவு எடுத்து வைத்துக்கொண்டு கேட்க வருவார்கள். அத்தகைய பழகிய சபையோர் முன்பு பேச்சாளர் அவர்களின் எதிர்பார்ப்புக்கேற்பக் தமது உரையை அமைத்துக் கொள்வார்கள். இத்தகையோர் பேச்சு மேல் பூச்சி இல்லாமல் முலாம் இடாத இயல்பான பேச்சாகவே இருக்கும். அந்தப் பேச்சைச் செவி மடுக்கும் பெரியோர் அந்தப் பேச்சைச் சுவைப்பர். எளிய மொழி நடை, சின்னச் சின்ன வார்த்தைகள், வாக்கியச் தொடர்கள், கருத்துத் தெளிவு ஆகியவை அந்தப் பேச்சுக்குத் துணை நிற்கும்.

## விருப்பு வெறுப்பு

ஒரு பேச்சாளரைப் பலருக்குப் பிடிக்கலாம்; சிலருக்குப் பிடிக்காமல் போகலாம். இன்றைய சூழலில் சில பேச்சாளர்களைத் தற்கால ஊடகங்களின் வாயிலாகச் சபையோர் எடை போட்டு வைத்துள்ளார்கள். தாம் எடை போட்டபடி சிலர் உயர்வாகவும் சிலர் தாழ்வாகவும் மனதில் இடம் பெறலாம். பல்லாண்டுகளுக்கு முன் அமெரிக்காவில் நடைபெற்ற சர்வ மத உலக மாநாட்டில் விவேகானந்தர் இந்துமத உயர்வைக குறித்து பேசினார். பரபரப்பாக இன்று வரை பலர் மேடைப்பேச்சுகளில் உதாரணம் காட்டுவது இந்தப் பேச்சைத்தான்.

ஒரு சில பேச்சாளரின் பேச்சைப் பாராட்டி ஆரவாரித்து ஆர்ப்பரித்து மகிழ சபையோர் கூட்டம் உண்டு. அத்தகையோர் பேசும் இடமெல்லாம் பெருங்கூட்டம் கூடும். ஈ.வே.ரா

பெரியார், சி.என்.அண்ணாத்துரை , திரு.வி.க போன்றோர் பெரும்பான்மை மக்களைத் தம் பேச்சுத் திறத்தால் வசீகரித்தவர்கள்.

சிலர் சபையில் பேசும்போது ஒரு குழுவினரை நண்பர்களாகவும் ஒரு குழுவை எதிரிகளாகவும் பாவித்து சிலர் பேசுவார்கள் . சிறந்த பேச்சாளர்கள் இவ்வாறு பிரித்துப் பார்க்கக்கூடாது. அனைவரையும் ஒருமித்த வகையில் பாவிக்க வேண்டும்.

"இந்தக் கூட்டத்தில் என் பேச்சு பிடிக்காத சிலர் இருப்பதைக் காண்கின்றேன். எனக்குக் கை தட்டா விட்டாலும் பரவாயில்லை , இடைஞ்சல் இல்லாமல் இருந்தால் சரி " என்று சிலர் பேசுவதுண்டு. சில கரடு முரடான பேச்சாளர்கள் "என் பேச்சு பிடிக்காதவர்கள் இருந்தால் வெளியேறுவது நல்லது " என்று பேசத் தெரியாமல் பேசிவிடுபவரும் உண்டு. இந்த மாதிரியான பேச்சாளரின் பேச்சு அவையோரின் ஒரு பகுதியைப் புண்படுத்தும் என்பதை உணராமல் போவதுண்டு இதை தவிர்த்தல் நல்லது.

## தொடர்ந்து விலக்குதல்

அவையோரை ஈர்க்கும் வகையில் பேசும் போது அவர்களுக்குக் தன் பேச்சில் எள்ளளவும் சந்தேகம் ஏற்படாதபடி தொடர்ச்சியாகவும் விளக்கமாகவும் தன் பேச்சைத் தொடர வேண்டும். ஏற்றம் இரைப்பவர்கள் எவ்வாறு தொடர்ந்து நீரை இறைப்பார்களோ அதுபோல பேச்சாளர்கள் பேச்சு என்ற நீரைக் தொடர்ந்து இறைக்க வேண்டும்.

## தேர்தல் வட்ட அவையோர்

'அரசியலில் இதெல்லாம் சகஜமப்பா ?' என்று கவுண்டமணி சொல்வது போல அரசியல் மேடைகளில் ஒருவரை ஒருவர் திட்டிக் தீர்ப்பது காலம் காலமாக நடைபெறும் ஒன்று. சிலர் நாகரிகமாகப் பெயர் குறிப்பிடாமல் சாடைமாடையாக எதிரியைச் தாக்கி பேசுவார்கள். அனுபவம் வாய்ந்த அவையோருக்கு இந்தப் பேச்சாளர் யாரைக் திட்டுகிறார் என்பது புரிந்துவிடும். சில பேச்சில் வல்லவர்கள் சிலேடையாக, குழு உக் குறி கொண்டும் பேசிக் தாக்குவார்கள்.

பேச்சாளர் தான் பேச வந்த நபர் குறித்து வானளாவப் புகழ்ந்து பேசலாம் தவறில்லை. மாறாக எதிராளிப் பற்றி அவதூறாகப் பேசுவதால் இலாபமில்லை. மாறாக குறிப்பிட்ட சிலருடைய எதிர்ப்பையும் , வெறுப்பையும் சம்பாதிக்க வேண்டி இருக்கும்.
இது தேவையில்லாத வேலை. அவையோர் மனம் புண்படாமல் பேசுபவர் பேச்சில் எதிர்த்தரப்பினர் கவனம் திருப்பக் கூடும். அனைவரையும் விருப்பு வெறுப்பு இன்றிப் பேசுவதால் இலாபம்தான்.

வெறுப்பை உமிழ்ந்து பேச்சாளர் பேசுவதால் அவையோர் மத்தியில் ஏற்படும் வெறுப்பு பலவித இடையூறுகளை ஏற்படுத்தும். விளைவுகள் பலவற்றைச் சந்திக்க வேண்டி வரும். சுவரொட்டிகள் கிழிக்கப்படும்; தார் எண்ணெய் பூசப்படும் ; கூட்டத்தில் கல்வீச்சு நடக்கலாம். இவ்வாறு தேர்தல் நேரங்களில் இடையூறு செய்வோர் மீது மக்களுக்கு வெறுப்பு ஏற்படும் . வெற்றிவாய்ப்பு இடம் மாறும். இந்த விளைவுகளுக்கெல்லாம் பேச்சாளரின் பேச்சு அவையோர் மத்தியில் ஏற்படுத்திய வெறுப்பே காரணம் .

## சட்டசபைப் பேச்சு

ஒரு காலத்தில் சட்டசபையில் கௌரவமான முறையில் பேச்சுகள் இருந்தன. காலம் செல்லச் செல்ல நாகரீகமான வாதங்களும் பேச்சுகளும் மறைந்து வருகின்றன. தர்க்க ரீதியாகவும் பகுத்தறிவு கொண்டும் பேச வேண்டிய சபையில் கடமையை உணர்ந்து பேச வேண்டும் என்பது நியதி. ஆனால் அவ்வாறு பேச்சு இருக்கிறதா? என்பது கேள்விக்குறி.

## பெண்கள் அவை

பொதுவாக சபைதனில் பேச வேண்டுமென்றால் சில சபை நாகரிகத்தைக் கடைபிடித்தல் அவசியம். அதிலும் பெண்கள் இருக்கும் சபை என்றால் பேச்சில் கண்ணியம் காக்கப்பட வேண்டும் என்பது கட்டாயம்.

பொதுவாக, பொது இடங்களில் நான்கு சிறுவர்கள் பேசிக்கொண்டு இருக்கும்போது அருகில் பெண்கள் இருந்தால் சில வார்த்தைகளைச் சப்தம் போட்டுப் பேச மாட்டார்கள். " "ஏய்..... பெண்கள் வராங்கப்பா......." என்று தாங்கள் பேசிக்கொண்டு இருப்பதை நிறுத்திக் கொண்டு சென்சார் செய்வது உண்டு. பெண்கள் தினவிழா கூட்டத்தில் பேசப்போகும் ஆடவர் அளவறிந்து அவையோர் மனம் அறிந்து பேசுதல் நலம்.' காதலித்தல்', 'காமம்', 'காமுறுகல் ', ' கைம்மை ', ' விபச்சாரி 'போன்ற சில குறிப்பிட்ட வார்த்தைகளை தவிர்த்தல் நன்று.


இவ்வாறாக, பேச்சாளர் தன் பேச்சை அவையோர் உளவியலை ஒட்டி மாற்றிக் கொள்ள வேண்டும். உள்ளத்தில் ஒளி உண்டாயின் வாக்கினிலே உண்மை வெளிப்படும் என்ற நம்பிக்கையின் அடிப்படையில் அவையோர் உளவியல் முக்கியப் பங்கு வகிக்கிறது.

## விழாக்காலபேச்சுவகைகள்


தமிழர்கள் விழாக்களை கொண்டாடுவதில் சிறப்பானவர்கள் அவரவர் ஊருக்கு என்று கோயில் அமைத்து நாட்கள் பல நிர்ணயித்து விழாக்கள் எடுப்பர். அவ்ளைவகையில் விழாக்கள் எடுக்கும் போது பேச்சுக்கென்று தனி மரியாதை வழங்கி சிறப்பாக பேசும் மேடைப்பேச்சாளர்களை அழைத்து பேச வைப்பது வழக்கம்.

கோவில் கொடை விழா பெருந்தெய்வ கோயில்களில் நடக்கின்ற தேரோட்ட திருவிழா தெப்ப திருவிழா கரூர் கம்பம் விடும் திருவிழா நெல்லை ஆனித் தேரோட்டம் தஞ்சை பெரிய கோயில் கும்பாபிஷேகம் குலசேகரப்பட்டினம் தசரா தூத்துக்குடி பனிமய மாதா திருவிழா, திருவாரூர் இசை விழா, கும்பகோணம் மகாமக விழா, மதுரை அழகர் திருவிழா, நாகூர் கந்தூரி விழா, நாகப்பட்டினம் வேளாங்கண்ணி கோவில் விழா என்று தமிழகமெங்கும் விழாக்களுக்கு குறைவில்லை.

அந்தந்த கோவில் விழாக்களுக்கு ஏற்பப் பேச்சரங்கம், வழக்காடு மன்றம் பட்டிமன்றங்கள் ஏற்பாடு செய்யப்படும். விழாக்களை நாம் பின்வருமாறு பிரிக்கலாம்.




## அரசு விழாக்கள்



பெரும்பாலும் அரசு விழாக்களில் பொதுமக்களின் பங்களிப்பு குறைவாகவே இருக்கும். அரசாங்கத்தில் பயன்பெறுவோர் மட்டும் ஊர்வாரியாக டோக்கன் கொடுக்கப்பட்டு, பார்வையாளர்கள் வரிசையில் உட்கார வைக்கப்பட்டிருப்பார்கள். அவர்கள் விழாவில் பேசுவோரின் பேச்சைக் கேட்க தயாராக இருக்க மாட்டார்கள். இதற்கெனச் சிறப்புப் பேச்சாளர்கள் அதிகத் தொகை கொடுத்து அழைக்கப்படுவதில்லை. அரசு அதிகாரிகள் மட்டுமே குறிப்பிட்ட அளவு நேரம் பேசுவார்கள் .

## குடும்ப விழாக்கள்

குடும்ப விழாக்களில் சொந்த பந்தங்கள் திரளாகக் கலந்து கொள்வார்கள். சிறப்புச் சொற்பொழிவிற்கு இங்கு இடமில்லை. பெரும்பாலும் திருமண வீடுகளில் இசைக் கச்சேரி மட்டுமே ஏற்பாடு செய்து இருப்பார்கள். சினிமாப் பாடல்கள் பாடினாலும் கூட அதை ஒரு சிலர் மட்டுமே உட்கார்ந்து கேட்டு இரசிப்பதுண்டு. மற்றவர்கள் அடுத்தடுத்த நிகழ்ச்சிகளுக்கு விரைந்து கொண்டு இருப்பார்கள்.

## திருமண விழா

திருமண விழாவில் அரசியல் தலைவர்கள் அல்லது ஊர்ப் பெரியவர்களை அழைத்து மணமக்களை வாழ்த்திப் பேசுமாறு கேட்டுக் கொள்வார்கள். அதுமாதிரி தர்மசங்கடமான சூழல் வேறெதுவும் கிடையாது.

சினிமா நடிகர் பேசினால் கூட கேட்டுக் கொண்டிருக்க நேரமில்லை. நடிகைகள் வந்து பேசினாலும் அவர் பேச்சை ரசிக்கிறார்களோ இல்லையோ அவர் அழகை ரசிக்க ஒரு கூட்டம் உண்டு. திருமண விழாவில் பேச்சு எடுபடாது.

"ஒரு திருமண வீட்டில் மணமேடை அருகே நின்று மைக் கொடுத்து பேசச் சொன்னார்கள். நான் கூட்டத்தில் சிக்கிக்கொண்டேன். வருவோர் போவோர் என்னை மைக்கோடு இழுத்துக்கொண்டு மண்டபத்தின் வாசலுக்கே கொண்டு விட்டு விட்டார்கள்" என்று ஒரு பேச்சாளர் சொன்னார்.

மங்களகரமான சொற்களைப் பேச்சாளர் கையாள வேண்டும்.

"சொல்லுக சொல்லிற் பயனுடைய சொல்லற்க

சொல்லிற் பயனிலாச் சொல்."

குறள் - 200

என்பார் வள்ளுவர். அதுபோல அமங்கலமான சொற்களை ஒருபோதும் பயன்படுத்தக்கூடாது.

இரட்டைக் காப்பியங்களில் ஒன்றான சிலப்பதிகாரத்தில் மங்கல வாழ்த்துப் பாடல் இடம்பெறுவதைப் பார்த்திருப்பீர்கள்.

"காதலர் பிரியாமல் கவவுக்கை நெகிழாமல்

கதறுக"

( சிலம்பு)

என்று இளங்கோவடிகள் எழுதியிருப்பார். நாங்கள் எம்.ஏ. தமிழ் படிக்கும்போது சிலப்பதிகாரம் முழுவதும் பாடமாக இருந்தது. இந்தப் பாடல் வரிகளை எங்களுக்குப் பேராசிரியர் தே.ஜோ.அ. ஜான் பின்வருமாறு விளக்குவார்.

"கல்யாணத்துக்கு வருபவர்கள் மணமக்களை நன்றாக இருங்கள். ஒன்றாகச் சேர்ந்து பல்லாண்டு வாழுங்கள் என்று தான் வாழ்த்துவதைப் பார்த்து இருப்போம். அதைவிட்டு "நாசமாக போகாமல் நல்லா இரு", "சேர்ந்த கை பிரியாமல் தீது அறுந்து போகட்டும்" என்று யாராவது வாழ்த்துவார்களா? இளங்கோவடிகள் இப்படி மங்கல வாழ்த்துப் பாடலை அமைத்திருக்கிறாரென்றால் காரணம் இல்லாமல் இல்லை. பின் நடக்க உள்ள செய்திகளை முன்னரே குறிப்பால் உணர்த்துவதற்காகப் புலவர் இந்த மாதிரியான உத்தியைக் கையாளுவது வழக்கம்"என்று விளக்கம் தருவார்கள்.

## பிறந்தநாள் விழா

சிறு குழந்தைகள் பிறந்த நாள் விழாவில் பேச்சாளர்கள் நம் உறவினர்கள் மட்டும்தான். அரசியல் தலைவர்கள், தொழிலதிபர்கள், பிறந்தநாள் விழாவில் தலைசிறந்த பேச்சாளர்களை அழைத்து வந்து பேச வைப்பார்கள்.

வானுக்கும் மண்ணுக்கும் வாமன அவதாரம் எடுத்து நின்று பேச்சாளர்கள் பேசுவதைக் கேட்கலாம். இப்படியெல்லாம்கூடப் பேச முடியுமா? என்று பலர் மூக்கின் மேல் விரல் வைப்பீர்கள்.

"வாங்குற துட்டுக்கு நல்லா வாசிக்கிறாம்பா "என்று கவுண்டமணி சொல்வதுபோல பாட்டுப்பாடி ஆட்டம் ஆடி கொண்டாடப்படுவது உண்டு.

அரசர்களின் பிறந்த நாளின்போது அரசனுடைய போர், வீரம், கொடைச் சிறப்பினை எடுத்துப் பாடி ஏற்றிப் புகழ்ந்து புலவர் பெருமக்கள் பொன்னும் பொருளும் பரிசிலாக வாங்கிச் சென்றதை நான் இலக்கியங்கள் வழிக் காணலாம். பரிசில் பெற்ற புலவர்கள் பரிசில் பெற வருவோரை ஆற்றுப்படுத்தியதாக ஆற்றுப்படை நூல்கள் அரசர்களின் கொடைத்திறத்தை எடுத்தோதுகின்றன.

தஞ்சை ஆண்ட இராஜராஜ சோழன் பிறந்த நாள் சதயத் திருவிழாவாக தஞ்சாவூரில் மிகவும் கோலாகலமாகக் கொண்டாடப்படுகிறது. (நூற்றாண்டு விழாவாக)

"இராஜராஜனின் மகளான குந்தவையை இளவரசன் விமலாதித்தன் காதலித்தார். இராஜராஜனின் பிறந்த நாளன்று தன் பிறந்த நாள் பரிசாகக் குந்தவையைக் கேட்டு மணம் முடித்ததாக இராஜராஜனின் மெய்க்கீர்த்திகள் குறிப்பிடுகின்றன என்று முனைவர் ப.பாலசுப்பிரமணியன் 'வாங்க மேடையில் பேசலாம்' என்ற தமது நூலில் குறிப்பிட்டுள்ளார். சங்கம் வைத்துத் தமிழ் வளர்த்த மதுரையை ஆண்ட திருமலை நாயக்கர் மன்னரின் பிறந்த நாளான தைப்பூசத் திருவிழாவும் மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டு வருகிறது.

## தொடக்க விழா

புதிய நிறுவனங்கள், கட்டடங்கள், பள்ளி, கல்லூரிகள் போன்றவற்றின் தொடக்க விழா சிறப்பாக நடைபெறும். இவ்விழாவில் பேசுபவர்கள் 'ஆரம்பமே அமர்க்களமாகட்டும்' என்று வாழ்த்தி பேச வேண்டும்.

"First impression is the Best impression "என்று எடுத்துக் கூறி தொடக்கம் முதலே நல்ல பெயர் எடுக்க வேண்டும். கடை என்றால் நல்ல வாடிக்கையாளர்களைப் பெறுவதற்கும் பள்ளி, கல்லூரிகள் என்றால் மிகுந்த மாணவர்கள் சேர்க்கை நடைபெறுவதற்கும் வழிவகுக்கும் வகையில் பேச்சாளரின் பேச்சு அமைய வேண்டும்.

## விளையாட்டு விழா

அரசு சார்பிலும் தனியார் பள்ளி, கல்லூரிகளிலும் விளையாட்டு விழாக்கள் கொண்டாடப்படும். விளையாட்டு விழாவில் பேசுவதற்குப் பொருத்தமான நபரைத் தேர்ந்தெடுக்க வேண்டும்.

கால்பந்தாட்டப் போட்டிக்குப் பேச வந்த பேச்சாளர், "ஏன் ஒரு பந்தை வைத்துக்கொண்டு இத்தனை பேர் சண்டை போட்டுக் கொள்கிறார்கள்? அடுத்த முறை ஆளுக்கொரு பந்து கொடுக்க ஏற்பாடு செய்கிறேன்" என்று அந்த விளையாட்டைப் பற்றித் தெரியாமல் பேசிய செய்தி கேள்விப்பட்டு இருப்பீர்கள்.

எந்த விளையாட்டுக்குக் கூப்பிடுறோமோ அந்த விளையாட்டு பற்றிப் பேசத் தெரிந்தவராக பேச்சாளர் அழைக்கப்பட வேண்டும். பள்ளி மாணவர்கள் விளையாட்டு முடிந்து வீட்டுக்குப் போகும் மனநிலையில் இருப்பார்கள். பசியோடு சோர்வாக இருக்கலாம். நேரம், சூழல் அறிந்துக்கொண்டு பேச வருபவர் தன் பேச்சைச் சுருக்கிக் கொள்ளவோ நீட்டிக்கவோ செய்ய வேண்டும்.

## நூலக விழா

வாசகர் வட்டம், நூலக வார விழா, ஆண்டு விழா என்றும் புதிய எழுத்தாளர்கள், புதிய நூல்கள் அறிமுக விழா என்றும் பல்வேறு வகையான விழாக்கள் நடத்தப்படும்.

நூல் அறிமுக விழாவில் வழக்கத்தை விடக் கூட்டம் அதிகமாக இருக்கும். நூலாசிரியர் பதிப்பகத்தார் தொடர்புடைய விருந்தினர் வந்திருப்பார்கள்

நூலாசிரியர் பற்றி நன்கு பரிட்சையமான பேச்சாளர் இவ்விழாவுக்கு அழைக்கப்பட வேண்டும். அவருடைய பேச்சு ஒவ்வொருவரையும் சுண்டி இழுக்கும் வண்ணம் அமைய வேண்டும். நூலை எழுதியவர் புதிய எழுத்தாளராக இருந்தாலும் அறிமுகம் செய்பவர் பிரபலமாக இருந்தால் நூலைப் பற்றிய செய்தி பரவும். பிரபலமான பேச்சாளர் பேச வரும்போது பத்திரிகை, தொலைக்காட்சி செய்திகளில் இவ்விழாவைப் பற்றிய செய்தி வெளிவருவதால் அறிமுகம் எளிதாக இருக்கும். அதில் பேச்சாளரின் பங்கு முக்கியம்.

## புத்தகத் திருவிழா

தமிழகமெங்கும் மாவட்டத் தலைநகரங்களில் வருடந்தோறும் புத்தகத் திருவிழா கொண்டாடப்படுகின்றது.

உலக புத்தக தினமாக 'ஏப்ரல் 23'ஆம் நாள் கொண்டாடப்படுகிறது. 1995 முதல் இந்த நாள் கடைபிடிக்கப்படுகிறது.

தமிழகத்தில் சென்னையில் ஜனவரி மாதம் பொங்கலை ஒட்டி புத்தகத் திருவிழா கண்காட்சி நடத்தப்படுவது வழக்கம். இதையடுத்து ஈரோடு புத்தகத் திருவிழா அடுத்து நெய்வேலி, மதுரை, திருநெல்வேலி புத்தகத் திருவிழாக்கள் பிரபலமானவை. 10 நாட்கள் திருவிழா ஒரு கோவில் விழா போல அரசு இயந்திரங்களுடன் மாவட்ட ஆட்சியர், வருவாய்த்துறை அதிகாரிகள், மாவட்டம் மத்திய நூலகத் துறையினர் ஒத்துழைப்போடு சிறப்பாக நடத்தப்படும்.

தமிழகத்திலுள்ள தலைசிறந்த பேச்சாளர்கள் கலந்துக்கொண்டு பேசுவார்கள். திருப்பூர் கிருஷ்ணன், ஸ்டாலின் குணசேகரன், சுகிசிவம், நெல்லை கண்ணன், ஏர்வாடி ராதாகிருஷ்ணன், காவல்துறை அதிகாரி கலியமூர்த்தி, ஐ.ஏ.எஸ். அதிகாரி இறையன்பு, பர்வின் சுல்தானா, திரைப்படப் பாடலாசிரியர் கவிஞர் வாலி, வைரமுத்து, பழனி பாரதி, நெல்லை ஜெயந்தா இன்னும் பல தரப்பு பேச்சாளர்கள் மாநிலம் முழுவதும் பேசுவதற்கு அழைக்கப்படுவார்கள்.

புத்தகங்கள் படிக்கும் பழக்கத்தை ஊக்குவிக்கும் விதமாக பேச்சுக்கள் விளங்க வேண்டும். புத்தகங்கள் வாசிப்பதால் ஏற்படும் நன்மைகள் குறித்த பட்டிமன்றங்கள் புத்தகத் திருவிழாவில் நெல்லை கண்ணன், சாலமன் பாப்பையா லியோனி, அறிவொளி போன்ற அனுபவம் வாய்ந்த பேச்சாளர்களால் நிகழ்ச்சிகள் நிகழ்த்தப்படுகின்றன. மக்களுக்குப் பயனுள்ள வகையில் பேச்சாளர்கள் திகழ வேண்டும்.

பேச்சரங்கம், வழக்காடு மன்றம், நூல் அறிமுகவிழா, கவியரங்கம், எதுவாக இருந்தாலும் பேசுபவர்களின் குறிக்கோள் புத்தகம் வாசிக்கும் பழக்கத்தை மேம்படுத்தும் நோக்கிலேயே இருக்க வேண்டும்.

## திறப்பு விழா

பள்ளி, கல்லூரி, விளையாட்டு அரங்கம்| வணிக நிறுவனம் எதுவாக இருந்தாலும் திறப்பு விழாவின் போது சிறந்த சுருக்கமான தெளிவான பேச்சு மூலம் வாழ்த்து கூறுவதாக அமைய வேண்டும்.

திறக்கவுள்ள நிறுவனம் குறித்தும் அதன் உரிமையாளரின் பெருமை குறித்தும் பேச்சாளர் அறிந்து வைத்திருக்க வேண்டும். தெரியாத விவரங்களை தொடர்பு உடையவர்களிடம் கேட்டுத் தெரிந்து கொண்டு பேச்சில் அதை வெளிப்படுத்துவது அவசியம். திறப்பு விழாவில் இப்போதுள்ள காலங்களில் பேச்சாளர்களுக்கு வாய்ப்பு குறைவே. புதிய இளமையான திரைப்பட நடிகைகளை அழைத்து வந்து வணிக நிறுவனங்களின் திறப்பு விழாவை நடத்துகிறார்கள். இதனால் பத்திரிகை, தொலைக்காட்சிகளில் விளம்பரமாகி விடுகிறது. பேச்சாளர் பேசுவதை விட இந்த உத்தியின் மூலம் பயன் அதிகம் என்று நம்பப்படுகிறது.

## இலக்கிய விழா

இலக்கியம் குறித்த சொற்பொழிவுகள் கல்வி நிறுவனங்களில், கோவில் தலங்களில் ஏற்பாடு செய்யப்படுவதைக் காணலாம்.

கம்பன் கழகம், கண்ணதாசன் இலக்கியப் பேரவை, வெற்றித் தமிழர் பேரவை, வாலி வாசகர் வட்டம் போன்ற இலக்கிய அமைப்புகள் மூலம் இலக்கியச் சொற்பொழிவாளர்கள் பேசுவதற்கு அழைக்கப்படுவார்கள்.

கம்பன் கழகத்தில் கம்பராமாயணம் குறித்த குறைந்தபட்சம் 100 பாடல்கள் முதல் 500 பாடல்கள் வரை மனனமாக வைத்திருக்கும் புகழ்பெற்ற சொற்பொழிவாளர் நெல்லைக் கண்ணன், சத்தியமூர்த்தி போன்றவர்கள் பேசுகிறார்கள்.

பாடல்களை இராகத்தோடு குறித்த நேரத்தில் வாசகர்களுக்குப் பிடிக்கும் வகையில் எடுத்துக் கூறுவார்கள்.

பாடல்களை இராகத்தோடு கேட்கும்போது மக்களை வெகு விரைவில் ஈர்த்துவிடும். பள்ளி, கல்லூரிகளில் நடைபெறும் இலக்கிய விழாக்களில் மாணவர்களுக்கேற்ப எளிமையாகப் புரியும் வகையில் இலக்கியத்தைப் பேசுபவர்கள் எடுத்துப் பேச வேண்டும்.

சட்டக்கல்லூரி என்றால் சட்டங்கள் குறித்த விழிப்புணர்வையும், சித்த மருத்துவக் கல்லூரியில் சித்த மருத்துவம் குறித்து விழிப்புணர்வையும் மாணவர்கள் மனதில் புரியும்படி பதிய வைக்கும் விதத்தில் பேச்சுக்கள் இருக்க வேண்டும்.

## பிரிவு உபச்சார விழா

ஒவ்வொரு வருடமும் வேலையிலிருந்து பலர் தன் வயது மூப்பு காரணமாக ஓய்வு பெறுவார்கள். அப்போது ஓய்வு பெறுபவர்களுக்கு முக்கியமாக, பிரிவு உபச்சார விழா நடத்துவது வழக்கம். சிலர் குடும்பச் சூழல் இடமாற்றம் காரணமாகப் பிரிந்து செல்வார்கள் அவர்களை வாழ்த்திப் பேசி அனுப்புவதும் உண்டு.

## கல்வி நிறுவன விழா

பள்ளி, கல்லூரி விழாக்களில் நிகழ்ச்சிக்கு ஏற்ப பேச்சாளர்கள் அழைத்து வரப்பட்டு பேச வைக்கப்படுவார்கள்.

இலக்கிய மன்ற விழாக்களில் குறிப்பிட்ட பேச்சாளர்கள் அழைக்கப்படுவார்கள். கம்பராமாயணம், சிலப்பதிகாரம், சிற்றிலக்கியங்கள், காப்பியங்கள் இவற்றின் சிறப்புப் பேச்சாளர்கள் அந்தந்த இலக்கியத்தின் சிறப்பு, மொழி நடை, பாத்திரப் படைப்பு, இன்ன பிற சிறப்புகள் பற்றிக் குறிப்புகள் தயாரித்து வந்து பேசுவது நல்லது. அவர்கள் பேச்சின் வழி பாண்டித்தியம் நமக்குப் புலப்படும்.

கலைநிகழ்ச்சிகள் விழாக் காலங்களில் நிகழ்த்தப்படும். அதில் தொடங்கி வைக்க வரும் பேச்சாளர்கள் அந்தக் குறிப்பிட்ட கலைநிகழ்ச்சி பற்றி வாசகர்களுக்கு விரிவான தெளிவான செய்திகளுடன் உரையாற்ற வேண்டும்.

## பேச்சாளர் பின்பற்ற வேண்டிய நெறிமுறைகள்

ஒவ்வொரு துறையிலும் வெவ்வேறு பணிக்கென்று தனித்தனி முறையில் நெறிமுறைகள் வகுக்கப்பட்டு இருக்கும். அதைப் போன்றே பேச்சாளர்களும் மேடைகளில் பேசும்போது சில நெறிமுறைகளை பின்பற்றுதல் வேண்டும்.

**நடை, உடை**

மேடைப் பேச்சாளர்கள் தனக்கென்று தனித் தன்மையுடன் தன் நடை உடையை அதற்கேற்ப மாற்றிக் கொண்டு தன்னை முன்னிறுத்த வேண்டும். ஆன்மீக

சொற்பொழிவாளர் பொது இடங்களில் பேச வருகையில் திருநீறு, உத்திராட்சம் அணிந்து காவி உடை கட்டிப் பேசுவதை நாம் காணலாம். அதேப் போன்று கவிஞர்கள் ஜிப்பா அணிந்து வருவதைக் காணலாம். உதாரணத்திற்கு கவிப்பேரரசு வைரமுத்து அவர்கள் மேடையில் பேசும்போது ஜிப்பா அணிந்திருப்பதைக் காணலாம்.

ஆண்கள் வேஷ்டியும் , பெண்கள் சேலையும் கட்டி வருவதும் கலாச்சாரமாகப் பின்பற்றப்படுகிறது. பேச்சாளர்களை பார்க்கும்போது நமக்கு இது புலப்படும் .

**பாவனை**

பேச்சாளர்கள் கருத்துக்களை தன் அகத்தில் இருந்து பேசும் போது முக பாவனையில் காண முடியலாம்.

"நகையே அழுகை இளிவரல் மருட்கை
அச்சம் பெருமிதம் வெகுளி உவகை என்று
அப்பால் எட்டே மெய்ப்பா டென்ப "

தொல். சூத். 252

என தொல்காப்பியர் மெய்ப்பாடுகள் எட்டு என கூறுவார்.

மேற்கூறிய எட்டு வகை மெய்ப்பாடுகளில் பேச்சாளர்கள் பெரும்பாலும் பின்பற்றும் குணங்கள் சிரிப்பு, அச்சம், பெருமிதம் ஆகிய மூன்று ஆகும்.

## ஏற்ற இறக்கம் (Modulation)

பேச்சாளர் பேசும்போது வார்த்தைகளில் ஏற்ற இறக்கம் இருந்தால்தான் அதன் கருத்துக்கள் தெளிவாக அவையினருக்கு விளங்கும். பொதுவாக பேச்சாளர்கள் பேசும்போது உணர்வுக்கு ஏற்றபடி வார்த்தைகளில் ஏற்ற இறக்கம் தானாக அமைந்துவிடும்.

ஒரே வார்த்தை அல்லது வாக்கியம் நாம் சொல்லும் முறையிலேயே காலச் சூழலுக்கேற்பப் பொருள் கொள்ளப்படும்.

"ஏலே ! எப்படி இருக்கு ?" என்று சுகமில்லாமல் இருப்பவனைப் பார்த்து பெரியவர்கள் கேட்பதுண்டு.

இதே வார்த்தையை ஊரில் தன்னை எதிர்த்து வரும் நபரை பார்த்து கொஞ்சம் உரத்த குரலில் கேட்டால் அந்த நபர் பேசுவதை கோபத்தில் பேசியதாக எடுத்துக்கொள்ளப்படும்.

" நல்லா இருப்பாய் "என்று சொன்னால் நல்லதாகவும் , வாழ்த்தாகவும் பொருள் கொள்வர்.

"நல்லா இருப்பே?! "என்று கேட்பதாக இருந்தால் கெட்டதாகவும் எதிரிகள் எடுப்பார்கள்.

அரசு அறிவிப்புகளைத் தண்டோரா போட்டு அறிவிப்பது வழக்கம். அவ்வகை அறிவிக்கையில் ஆரம்பத்திலேயே உச்சஸ்தாயியில் பேசுவதைக் காணலாம். உதாரணமாக, "இதனால் சகல மாணவர்களுக்கும் சொல்லப்போகும் செய்தி என்னவென்றால்...." என்று பேசுவர்.

## கால அளவு

பேச்சாளர்கள் மேடையில் பேசுவதற்கு என நிகழ்ச்சிகளில் கால அளவுகள் கொடுப்பது வழக்கம். ஆகவே பேச்சாளர்கள் தான் பேசும் இடம், காலம், மேடை, பொருளுக்கேற்ப கால அளவை நீட்டியோ அல்லது சற்று குறைத்தோ தான் கூற வரும் கருத்துக்களை கூற வேண்டும்.

பட்டிமன்றத்தில் நடுவரால் தரப்படும் மூன்று அல்லது நான்கு மணித்துளிகளில் தன் பங்கு வாதத்தை எடுத்து உரைத்தல் வேண்டும். காலம் நெருங்கும் போது நடுவரின் எச்சரிக்கை மணி சத்தம் கேட்டதும் வாதத்துக்குரிய மைய கருத்தை பேச்சாளர் சொல்லி முடித்தல் வேண்டும்.

பள்ளி, கல்லூரிகளில் பேச்சுப்போட்டியில் பங்குபெறும் மணவ , மானவிகள் நெறியாளர்கள் கூறும் விதிகளுக்கு உட்பட்டு கொடுக்கப்பட்டிருக்கும் மணித்துளிகளுக்குள் கொடுத்த தலைப்பிற்கு ஏற்ற தகவல்களை எடுத்துரைக்கலாம். கால அவகாசத்தை மீறி பேசும் நபர் பரிசுக்குரிய தகுதியை இழக்க நேரிடும். ஆகவே உரிய காலத்திற்குள் தான் கூற வந்திருக்கும் கருத்துக்களை குறித்த காலத்திற்குள் பேசுதல் வேண்டும்.

## தேவைக்கேற்ப கருத்துரைத்தல்

பேச்சாளன் பேசுவதற்கு முன்பு தான் பேசவிருக்கும் இடம், யார் முன்பு பேச போகிறோம் என்பதை அறிந்து அவர்களின் மனநிலைக்கேற்றார் போன்று பேச்சை அளித்தல் வேண்டும். பேசும் மேடை பள்ளிக் குழந்தைகள் முன்பாக வா? கல்லூரியிலா ? கிராமப்புறக் கூட்டமா ? என உணர்ந்து தக்க சூழ்நிலைக்கு ஏற்ப பேசுதல் வேண்டும்.

தொடர்ந்து பேசிக்கொண்டிருக்கையில் இடத்திற்கு ஏற்றார் போன்று உரிய மேற்கோள்களைக் கூறலாம். பேசும் இடமிருந்து கருத்துள்ள குட்டிக்கதைகளைக் கூறலாம். தாம் சொல்லும் கதை கேட்பவர்களின் மனநிலையை ஈர்ப்பதாக உள்ளதா? சலிப்பை கொடுக்கின்றதா ? என அறிந்து சுதாரித்துக் கொண்டு பேச்சை தொடர்ந்து வழங்குதல் வேண்டும்.

புள்ளி விவரங்களை எடுத்துச் சொல்வதாக இருந்தால் அதைக் தகுந்த இடம், தகுந்த நபர்கள் முன்பு கவனிக்கத் தகுந்த முறையில் விவரிக்கலாம். தேவையற்ற இடத்தில் புள்ளி விபரங்களை எடுத்துக் கூறுவது அனைவரின் நேரத்தையும் வீணடிப்பதாக முடியும். மேலும், அதனால் எந்த பயனும் தராது. ஆகவே இடமிருந்து பேசுதல் வேண்டும் என்ற முறையை பின்பற்றுதல் வேண்டும் பேச்சாளர்.

சிலர் மேடையில் பேசும்போது கொடுத்த காலத்திற்குள் முடிக்க வேண்டும் என்பதற்காக தான் கட்டியிருக்கும் கடிகாரத்தை பார்த்துக் கொண்டே பேசுவது வழக்கம். அது அவர்கள் ஆரம்பத்தில் இருந்து பின்பற்றி வந்த பழக்கமாக இருக்கும் அது தவறில்லை.

லேனா தமிழ்வாணன் அவர்கள் பேசும் நேரம் குறித்து ஒரு அலாரத்தில் செட்டிங் செய்து வைப்ரேஷன் மோடில் தன் சட்டைப் பையில் வைத்துக் கொள்வதாக ஒரு முறை குறிப்பிட்டுள்ளார்.

## ஒலி வங்கி

நிலையான அல்லது கை ஒலிவாங்கி தரப்படலாம். தமக்குத் தரப்படும் ஒலிவாங்கி தமது பேச்சின் ஒலி அளவை எவ்வாறு உள்வாங்கி வெளியிடுகிறது என்பதை முதல் ஓரிரு நிமிடங்களில் உணர்ந்து கொள்ளலாம். அதற்கேற்ப ஒலிவாங்கியை நகர்த்தியோ அல்லது தான் அதனருகில் நின்றோ பேச வேண்டியது இருக்கும்.

## குறிப்பு தாள்கள்

கையில் குறிப்புகள் ஏதும் இல்லாமல் பேசுவது அனுபவம் வாய்ந்த பேச்சாளர்கள் என்பதை புலப்படுத்தும்.

சில பேச்சாளர்கள் மேடையில் பேசும்போது கையில் குறிப்புத் தாள்கள் சிறு டயரி வைத்து இருப்பதை காணலாம். அவ்வாறு அவர் பேசும்போது குறிப்பு தாள்களை, டயரியை புரட்டும் போது அவையோர் பாராத வண்ணம் அவர்களின் கண்களில் படாமல் பார்த்துக் கொள்வது முக்கியம். புரட்டும் போதும் ஒலிவாங்கியில் தாள்கள் புரட்டும் போது ஒலி வராமல் தற்காத்துக் கொள்ள வேண்டும்.

## உரிய மரியாதை

சபையறிந்து பேசுவது ஒவ்வொரு பேச்சாளரின் நாகரிகம். மேடையில் பெரியவர்கள், முக்கியஸ்தர்கள் இருப்பார்கள். அவர்களின் பெயர்களை குறிப்பிட நேரிடும். அவர்களின் வயது மூப்பு அடிப்படையிலும் தகுதி, பதவி அடிப்படையிலும் வரிசையாக விளித்துப் பேசுதல் மரபு. அவர்களுக்கு கொடுக்க வேண்டிய உரிய மரியாதை கொடுத்துதான் அழைக்க வேண்டும். தனக்குத் தனிப்பட்ட முறையில் வேண்டாதவராகக்கூட இருக்கலாம். அதற்காக அவர்களை அவமரியாதை படுத்தும் நோக்கில் தவறான முறையில் நடத்திவிடக் கூடாது. சூழல் கருதி மரியாதைக் கொடுத்து பேசுதல் சபை மரபு.

## எதிர்பார்ப்பு

மேடைப் பேச்சாளன் ஒவ்வொருவருக்கும் தான் பேசுவதை அவையோர்கள் அனைவரும் கவனிக்க வேண்டும் என்ற எதிர்பார்ப்பு இருக்கும். அதுபோல மேடைமுன் உள்ள அவையோருக்கும் ஓர் எதிர்பார்ப்பு இருக்கும் அல்லவா?

“இவர் புதுசா தெரிகிறாரே?!"

"இவரு முழிக்கற முழியே சரியில்லையே"

“என்னத்த பேசப் போறாரோ? எவ்வளவு நேரம் பிளேடு போடப் போறாரோ?!"

"நேரம் போவதற்கு ஏதாவது கொஞ்ச நேரம் கேட்டு விட்டுத்தான் போவோமே?!"

இப்படி ஆளாளுக்கு ஒவ்வொரு விதமான எதிர்பார்ப்புகளைப் பேசவிருக்கும் பேச்சாளரின் மேல் வைத்திருப்பார்கள்.

“இருக்கற ஆளுகளைப் பார்த்தால் கவனிக்கிற மாதிரி தெரியலையே?!"

"நம்மளால இந்த ஜனங்களைச் சமாளிக்க முடியுமா?"

"இவங்க எந்த மாதிரி பேசினா நாம பேசுறது கவனிப்பாங்க?!"

என்பன போன்ற எதிர்பார்ப்புகளுடன் கூடிய கேள்விகள் பேச வருபவர் மனதிலும் எழலாம்.

## பேசுவோர் கேட்போர்

பேசுவோர் கேட்போர் ஆகிய இரண்டு நிலையில் உள்ள எதிர்பார்ப்புகள் பலவற்றில் ஒரு சில நிறைவேறினாலும் கூட பேச்சாளரின் பேச்சு வெற்றி பெற வாய்ப்பு உண்டு.

பேசுவதற்கு ஏற்பாடு செய்து தந்தவர்களையும் பேச்சாளர் திருப்திப்படுத்த வேண்டும். அப்போதுதான் அடுத்த முறை பேசுவதற்கான வாய்ப்பு மீண்டும் பேச்சாளருக்கு வழங்கப்படும். ஆகவே பேசுவோரும் கேட்போரும் சமனிலை பெற வேண்டும்.

தனது பேச்சை எதிரில் இருப்பவர் எப்படி வரவேற்கிறார்கள் அல்லது பேச்சு எப்போது முடியும் என்று எதிர்பார்ப்புடன் இருக்கிறார்களா என்பதை அவர்களின் முகக்குறிப்பு அறிந்து பேச்சாளர் பேச்சை நீட்டிக்கவோ அல்லது முடிக்கவோ வேண்டும்.

இதைத்தான் வள்ளுவர்,

" குறிப்பின் குறிப்புணரா ஆயின் உறுப்பினுள்

என்ன பயத்தவோ கண்"

- குறள் 705

என்று கூறுவார்.

பேசுபவரின் பேச்சு அவையோரின் பிடித்திருக்கின்றதா பிடிக்கவில்லையா என்பதை முகபாவங்களின் மூலம் அறிந்து கொள்ளலாம் ஆகவே அவையோரின் மனநிலைக்கு ஏற்ப பேச்சாளர் மேடையில் பேச வேண்டும்.

## தவிர்க்கப்பட வேண்டியவை

பேச்சாளராக விளங்க கடைபிடிக்க வேண்டிய விஷயங்கள் பல உண்டு அதே நேரம் தவிர்க்கப்பட வேண்டியவை என்னென்ன என்று அறிந்து கொள்ள வேண்டும்.

## மேடை அச்சம் (stagefear)

மேடை அச்சம் மேடை ஏறும் ஒவ்வொருவருக்கும் உரியதுதான். எப்படி நடக்க பழகும் குழந்தை தவறி விழுந்து தவறி விழுந்து பின் எழுந்து நடக்குமோ அதேப்போன்று மேடைப் பேச்சாளராகளாக உருவாகும் அனைவருக்கும் முதலில் இருப்பதுதான் மேடை அச்சம் இதை கடந்துதான் இன்று பலர் மிகச்சிறந்த பேச்சாளர் என்று வெற்றி கொடி நட்டு விளங்குகின்றார்கள்.

ஆரம்பகாலகட்டங்களில் இவர்களின் நிலை மேடை ஏறியதும் நெஞ்சில் இனம் புரியாத பயம் ஒரு சிலருக்கு கை, கால் நடுக்கம் வாய் குழறல் சொல்ல வந்த கருத்து மறந்து நிற்றல் வயிற்றுப்போக்கு உருவாகுதல் இவை போன்ற மாற்றுநிலை உடலில் அண்டும்.

இவைகளை களைய வழி திரும்பத் திரும்ப மேடை ஏறி பேசுதல் மூலம். இவர்கள் என்ன நினைப்பார்களோ அவர்கள் என்ன நினைப்பார்களோ என்ற கூச்ச சுபாவமே அச்சத்தைஉண்டாக்கும்.

தான் பேச தயாராகும் போது வேண்டிய கருத்துக்களை தேடி தொகுப்பது வழக்கம் அது வழக்கத்தின் போது தான் ஒரு முட்டாள் தனக்கு எதுவும் தெரியாது என்று கருத்தில் கொண்டு கருத்துக்களை தொகுக்க வேண்டும். அதைப்போன்று மேடையில் பேசும்போது சபையினர் முட்டாள் என்று தனக்கு அதிகம் தெரியும் என்ற நோக்கில் பேச வேண்டும். அப்போது சிறப்பாக பேசுவோம் என்பது பெரியோரின் கருத்து. இந்த நம்பிக்கை பேச்சாளருக்கு உள்ள பயத்தை போக்கும்.

**லாகிரிவஸ்துகள்**

பொதுவாக பீடி, பொடி, மது போன்ற போதை வஸ்துகளை மனிதர்கள் தவிர்க்க வேண்டும் அதிலும் பேச்சாளர்கள் இது மாதிரியான போதை பொருட்களை தொடாமல் இருந்தால் நல்லது. இதயம் நுரையீரல் மூச்சுக் குழாய் போன்றவற்றில் பழுது ஏற்படலாம்.

குரல் வளம் முக்கியம் மூச்சு எடுத்து மைக் பிடித்து பேச வேண்டுமென்றால் நுரையீரல் பாதிக்காமல் இருக்க வேண்டும். எனவே இவற்றை பயன்படுத்தாமல் இருத்தல் நல்லது.

## குழப்பமனநிலை(MoodOut)

தெளிந்த நல்லறிவு வேண்டும் என்றான் பாரதி. தான் பேச போகும் விஷயம் குறித்த தெளிவான ஆழ்ந்த அறிவு இருப்பது நலம்.

குழப்பமான மனநிலை மேடைப் பேச்சாளருக்கு உதவாது. சொல்லப்போனால் ஆற்றொழுக்கான சொற்பொழிவுகள் தேவை குழப்பம் இல்லாத தெளிவான மனநிலை. குடும்பம், செய்யும் வேலை, உடன் பணிபுரிவோர் பற்றிய பிரச்சனைகள் தன் மனதை பாதிக்காத வண்ணம் தற்காத்துக் கொள்வது நல்லது.

## கவனகுறைவு

மேடைப்பேச்சு பேசுகையில் தலைப்பு ஒன்றை தேர்வு செய்து அதற்கு தேவையான கருத்துக்களை சேகரித்து அதனை ஒரு வடிவமாக தொகுத்து பேசுவது வழக்கம். அவ்வாறு பேசும்போது கவனம் இழந்து தலைப்பிற்கு தேவையான கருத்தை மீறி வேறு கருத்துக்களை பேசுவது உண்டு.

பட்டிமன்றத்தில் குடும்பப் பொறுப்பை நிர்வகிப்பதில் சிறந்தவர் கணவனா?மனைவியா? என்ற பொருள் தரப்பட்டிருக்கும் கணவன் தரப்பில் பேசுபவர் கவனக்குறைவாக மனைவி கட்சிக்கு ஆதரவாக பேசுவதுண்டு இதுபோன்ற கவனக்குறைவு அந்த பேச்சாளரின் மதிப்பை குறைத்து விடும்.

## தாழ்வு மனப்பான்மை:(Inferiority Complex)

பொதுவாக சிலருக்கு எப்போதுமே தாழ்வு மனப்பான்மை கூடவே குடிக்கொண்டு இருக்கும். அவர்களால் எந்த ஒரு காரியத்தையும் எளிதில் நுழைந்து எடுத்துச் செய்ய முடியாமலே போகும். குறிப்பாக பேச்சாளருக்கு இந்த குணம் இருக்கவே கூடாது. அப்படி இருப்பின் மேடைப்பேச்சில் வெற்றி காண முடியாது. தன்னால் முடிந்தவரை இருக்கின்ற தலைப்புக்கு ஏற்ற செய்திகளைச் சேகரித்துக் கொண்டு மேடை ஏறி சரளமாக பேச வேண்டியதுதான். தன்னால் முடியும் என்ற நம்பிக்கை தன்னகத்தே எப்போதும் வைத்துக்கொள்ள வேண்டும். நம் மீது நாம் நம்பிக்கை வைத்தால் இவ்வுலகையே வெற்றிக் காணலாம். நம்மால் முடியும் என்ற எண்ணம் நம்முள் இருப்பின் இந்த தாழ்வு மனப்பான்மை எப்போதும் தன்னகம் வந்து தலை காட்டாது.

பேச்சாளர் கேட்போர் இடையேயான இடைவெளியை குறைக்க முயலலாம். தாழ்வு மனப்பான்மை இருந்தால், முன்னால் இருப்பவர்களைப் பார்த்தால் தொடர்ந்து பேச முடியாமல் போகும்.

மேடையில் பேசும்போது மனதில் வேறு எந்த வேற்று எண்ணமும் இன்றி பேசுதல் வேண்டும்.

எனவே, இந்த மனப்பான்மையை அடியோடு தகர்த்தெறிந்துவிட்டு, தடைகளை உடைத்து ஒவ்வொரு பேச்சாளரும் முன்னேற்றப் பாதையில் பயணித்தால் நல்லது.

### தளர்ச்சி - சோர்வு :

உடல் ஆரோக்கியமும் முக்கியம். பேசப் பேச நிறைய ஆற்றல் வெளியாகும். ஆகவே உடலை நல்ல ஆரோக்கிய உணவை உண்டு உடலை பேணி பாதுகாத்தல் வேண்டும் .

ஊட்டமான உணவுகள் பழ வகைகள் உட்கொள்ளலாம். பேசிப் பேசியே சோர்வடையும் வாய்ப்பு உண்டு.

அவ்வாறு தளர்ச்சி அடைந்தாலும் அதை வெளிக்காட்டக் கூடாது. தொடர்ந்து பல கூட்டங்கள் பேசியதால் சோர்வடைய நேரிடும். ஆனால் நல்ல திறமையான பேச்சாளர் தனக்கு ஏற்படும் தளர்ச்சியையோ சோர்வையோ எந்த சூழ்நிலையிலும் வெளிக்காட்டிவிடக் கூடாது.

பேச்சாளரிடம் தளர்ச்சி ஏற்படுவதால் பேச்சுக்கோர்வை இல்லாமல் போகும். வரவேற்பு குறைய வாய்ப்பு உண்டு. ஆகவே தொடர்ந்து பேசுவதற்கு வாய்ப்பு கிடைக்காமல் போகும். எனவே, பேச்சாளர் தன் குறைகளை வெளிக்காட்டாது அதாவது மனதில் இருக்கும் சோர்வை வெளி காட்டாது ஒரே நிலையில் பேசுதல் வேண்டும் உணர்ச்சி வசப்படக் கூடாது

"கறுப்பு தமிழனே கலங்காதே" என்று ஒரு நூலை இ.ஜே.சுந்தர் என்பவர் எழுதியுள்ளார். இந்நூலில் தமிழர்களின் உணர்வுகளைத் தம் கட்டுரையில் எடுத்து கூறியுள்ளார்.

அதில் ஒரு கட்டுரை 'உணர்ச்சிவசப்படும் தமிழன்' என்ற தலைப்பில் அமைந்துள்ளது. தமிழன் எளிதில் உணர்ச்சிவசப்படக் கூடியவன் என்று பல்வேறு உதாரணங்களைக் காட்டி விளக்கி இருப்பார்.

பேச்சாளருக்கு உணர்ச்சிவசப்படும் சூழல் ஏற்படும். கவனமாக இருக்க வேண்டும். உணர்ச்சிவசப்படும்போது வார்த்தைகளைத் தவறவிடக்கூடாது. உணர்ச்சிவசப்படுவதால் பேச்சாளருக்கான இழப்பு ஏற்படும் எனவே இந்த குணத்தையும் தவிர்க்க வேண்டும்.

## கற்றார் தன்மை

"இவரு சரியான கறார் பேர்வழி" என்பார்கள். சொன்ன விஷயத்திலிருந்து மாறாமல் இருப்பவர் ஒருவகை. தான் சொல்வது சரியோ தவறோ அதில் பிடிவாதமாக இருப்பவர் வேறு ரகம்.

சிலர் மட்டுமே சரியாகப் பேசி, சரியாக நடந்து கொள்வார்கள் அவரே கறார் பேர்வழி.

பேச்சாளர்கள் தன்னைப் பேச அழைப்பவர்களுடன் காசு விசயத்தில் கறாராக இருப்பவர்கள் உண்டு. நல்ல பெயர் வாங்கிப் பிரபலமான பிறகு கறாராக இருக்கலாம் தவறு ஏதும் இல்லை. வளர்ந்து வரும் காலகட்டத்தில் அப்படி இருந்தால் வாய்ப்புகள் அதிகமாக கிடைக்காமல் போகும். உயர்நிலைக்கு செல்ல விரும்பும் எவரும் எந்நிலையிலும் வளைந்து கொடுக்கும் தன்மை உடையவராக இருத்தல் வேண்டும். அப்போதுதான் வாழ்வில் வெற்றி பெற முடியும்.

## மங்கல,அமங்கல மொழிகள்

சுபவார்த்தைகள் மங்கலமொழி என்று அழைக்கப்படும் சில வார்த்தைகள் தவிர்க்கப்பட வேண்டும். சபை நாகரிகம் கருதி, சில வார்த்தைகள் பேசவே கூடாதவையாகக் கருதப்படுவன.

பொதுவாக எந்த ஓர் அமங்கலச் சொல்லையும் எந்த சூழ்நிலையிலும் பேச்சாளர் பயன்படுத்தவே கூடாது. இதில் பேச்சாளர் கண்ணும் கருத்துமாக இருக்க வேண்டும். சாதாரணமாக வீட்டிலேயே மங்களமல்லாத மொழியைப் பேசும்போது மற்றவருக்கு அருவருப்பை ஏற்படுத்துவதாக ஆகலாம்.

கிராமங்களிலும் நகரங்களிலும் வீட்டில் பெண்கள் மாலையில் விளக்கு ஏற்றி விடுவார்கள். அந்த விளக்கை அணைக்க வேண்டிய பொழுது அணைத்துவிடு என்று சொல்ல மாட்டார்கள். விளக்கை 'ஒசத்தி விடு' என்றோ 'விளக்கை குளிர்வித்துவிடு' என்றோ கூறுவார்கள். முடியாது, கூடாது, ஆகாது, இல்லை போன்ற எதிர்மறைச் சொற்களைப் பெரியோர்கள் பயன்படுத்துவது இல்லை.

பேச்சாளர்கள் மங்கலமான சொற்களைப் பயன்படுத்துகிறார்களோ இல்லையோ அமங்கலச் சொற்களைப் பயன்படுத்தாமல் பேசவேண்டும்.

1. மேடையில் பேசும் முறை குறித்து எழுதுக.

2. மேடைப் பேச்சை கேட்கும்போது அவையோரின் உளவியல் பங்கு எவ்வகையில் இருக்கும் ?

3. விழாக்கால பேச்சு வகைகள் குறித்து எழுதுக.

4. விழாக்கால பேச்சுக்களில் பங்கு பெறும் மேடை பேச்சாளர் யார்? விளக்குக.

5. மேடைப்பேச்சில் பேச்சாளர் பின்பற்ற வேண்டிய நெறிமுறைகள் யாது?

6. பேச்சாளர் மேடையில் பேசும்போது தவிர்க்கப்பட வேண்டியவைகள் யாது?

7. பேச்சாளன் அவையில் சபையோர ஈர்க்க என்ன செய்ய வேண்டும்?

8. மேடைப் பேச்சாளரின் உழப்பாங்கு குறித்து ஆய்க?

9. பேச்சாளனுக்கு இருக்க வேண்டிய நன்னெறி முறைகள் யாது?

10. பேச்சாளர் எவ்வகைப்பட்ட மேடையை தேர்ந்தெடுக்க வேண்டும்?

## அலகு-3

### பேச்சாளருக்கு ஏற்படும் பிரச்சனைகள்

சுவர் இருந்தால்தான் சித்திரம் வரைய முடியும் ஆகவே பேச்சாளர்கள் உடலை ஆரோக்கியத்துடன் பாதுகாத்தல் வேண்டும். எனவே பேச்சாளன் இரவு பேசுவதற்கு செல்லும் முன், நன்கு தூங்கி எழுந்தல் வேண்டும். அப்போது தான் இரவு கண் விழித்தலுக்கு ஏதுவாக உடம்பு ஒத்துழைக்கும். மேலும் சரியான நேரத்தில் சரிவிகித உணவை உண்பது உடல் நோயின்றி ஆரோக்கியமாக வாழ வழிவகுக்கும்.

## குரல்வளம்

பேச்சாளருக்கு குரல் வளம் மிக முக்கியம் ஆகவே அதை பாதுகாத்தல் வேண்டும். ஆனால் அதனை கெடுக்கும் விதமாக அமையக்கூடிய குளிர்ந்த பானங்கள், ஐஸ்கிரீம் போன்றவற்றை தவிர்ப்பது நல்லது. கீச்சுக் குரல், கரகரத்த குரல், கணீரென்ற குரல் என்றதும் நமக்கு ஒவ்வொருவர் நினைவுக்கு வருவார்கள். மேடையில் பேசுபவர்களுக்கு குடிதண்ணீர் வைப்பது வழக்கம். சோடா பாட்டில்களும் மேடையில் வைப்பதாக பழைய சினிமாக்களில் காட்டுவார்கள்.

## போக்குவரத்து

கூட்டம் நடைபெறும் இடத்திற்குப் போக சிலர் தன்னிடம் உள்ள சொந்த வண்டியை பயன்படுத்துவதுண்டு. ஒரு சிலர் பேச செல்லும் இடத்திலிருந்தே வண்டி அனுப்பி விடுவர். எதுவாகினும் வண்டி செல்லும் வழியில் எதிர்பாராத பழு ஏற்படலாம்.அவ்வாறு ஏற்படின் நிகழ்விற்கு செல்வதற்கு காலதாமதம் ஏற்படும். இந்நிலை வருவதை தடுத்து நிறுத்துதல் சிறப்பு. ஆகவே செல்லும் முன் வண்டி பழுதின்றி நல்ல நிலையில் உள்ளதா என்பதை சரி பார்த்து வைத்திட வேண்டும்.

## போட்டி

பேச்சாளரின் திறமையும் மக்கள் மத்தியிலுள்ள செல்வாக்கை பொறுத்து பல மேடைகளில் பேசுவதற்கான வாய்ப்புகளை பெற்றுத்தரும். மேடையில் பேசும் அனைவருக்கும் இவ்வாய்ப்பு கிடைக்குமா என்றால் அது அரிது. ஒரு சிலர் வாய்ப்புகளைத் தேடித்தான் போக வேண்டியிருக்கும். அதிலும் சிலர் நிலைய வித்வான்களாக இருப்பார்கள் மற்றவர்களுக்கு இடம் கொடுக்கவே மாட்டார்கள். பேச்சாளர்களுக்கிடையே போட்டி நிலவும். அது ஆரோக்கியமான போட்டியாக இருக்க

வேண்டும். அப்போதுதான் அந்தத் துறையில் தொடர்ந்து பரிணமிக்கவும் பெயர் வாங்கவும்முடியும்.

## பேச்சின்போதுகுறுக்கீடுகள்

பேசிக்கொண்டிருக்கும்போது கூட்டத்திலிருந்து யாராவது எழுந்து பேச்சாளரைக் குறுக்கீடு செய்து வினா எழுப்புதல் கூடும். அந்நேரம் சபையினரில் ஒருவர் கேட்ட வினா தமக்கு இடையூறு என்று எண்ணாது சாதுர்யமாக பேச்சாளர் பதில் சொல்ல வேண்டும்.

பேச்சாளருக்கு ஏற்படும் இவ்வகையான குறுக்கீடு எந்த வகையான பேச்சு மேடையிலும் ஏற்படலாம். உதாரணமாக பட்டிமன்றத்தில் பேசிக் கொண்டிருக்கும் பேச்சாளரைக் குறுக்கிட்டு சபை நபர் ஒருவர் "தங்களுக்கு இது மாதிரி நடந்தா என்ன பண்ணுவீங்க" என்று கேட்பார்கள் அதற்கு புண்முறுவலோடு விடை அளிப்பது நமது பங்கு.

## மின்தடை

இந்த காலத்தில் மின் தடை ஏற்படுவது குறைவு. ஏனென்றால் மின் தடையை தவிர்க்க ஜெனரேட்டர் பயன்படுத்துவது வழக்கமாகிவிட்டது. இருப்பினும் சில நேரங்களில் தடையை தவிர்க்க முடியாது சில சூழ்நிலைக் காரணமாக இந்நிலை ஏற்படும் போது பேச்சாளர் பேச்சை நிறுத்தாது மேடையின் நடுப்பகுதிக்கு வந்து நின்று சற்று சப்தம் அதிகமாகபேசவேண்டும்.

## குறிப்புகள்

"ஆனைக்கும் அடி சறுக்கும்" என்பது பழமொழி. என்னதான் திறமை சாலியாக

இருப்பினும் மேடையில் பேசும் போது ஒரு சிலர் நிலை தடுமாறும். ஆகவே சிலர் குறிப்புகள் வைத்துக் கொண்டு பேசுவார்கள். அப்படி செய்யும் போது குறிப்புத் தாள்கள் ஒழுங்காக அடுக்கி வைத்து திருப்பும் போது தாள்களின் ஒலி மைக் வழியாக சபையினர் செவிக்கு செல்லாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். குறிப்புத் தாள்கள் கைதவறி பறந்து விடாமலும் கைப்பிடிக்குள் வைத்தல் வேண்டும். அவ்வாறு ஒரு வேளை குறிப்புத் தாள்கள் தவறி விட்டாலும் பேசும் தலைப்புக்கு நிகரான செய்திகளை பேசிச் சமாளிக்கும் திறமையை வளர்த்துக் கொள்ளவது அவசியம்.

## அவையில்சலசலப்பு

பேசுபவரின் பேசும் போக்கில் தொய்வு ஏற்படும் போது அவையில் சலசலப்பு ஏற்பட வாய்ப்புள்ளது. இந்நிலை வராமல் தடுக்க பேசும் கருத்துக்கு நிகரான நாட்டுநடப்பு செய்திகளைக் கொண்டு வந்து கலகலப்பூட்டி அவையினரை திருப்தியாக நல்ல பேச்சுக் கேட்ட மனநிலையோடு வீட்டிற்கு செல்லும் நிலையை வழி வகுப்பது நல்ல பேச்சாளனுடைய கடமை ஆகும்.

விழாவுக்கு அல்லது நிகழ்ச்சிக்கு முக்கியமான சிறப்பு விருந்தினரின் தாமதமான வருகை கூட கூட்டத்தின் கவனத்தைக் திசை திருப்புவது கூடும். அந்தச் சூழலைப் புரிந்து கொள்ளவது பேச்சாளரின் புத்திசாலித்தனம்.

இவ்வாறு இன்னும் பல்வேறு காரணிகளால் பேச்சாளருக்குத்தான் பிரச்சனைகள் ஏற்பட வாய்ப்பு அதிகம். இதையெல்லாம் சமாளித்தால் தான் சிறந்த பேச்சாளராகப் பெயர் பெறமுடியும்.

## பேச்சும் அதன் மொழி கூறுகளும்

ஒவ்வொரு மொழியும் மொழிக் குடும்பமாக விளங்குகின்றது. மொழிக்கென்று சில மூலக்கூறுகள் இருக்கும். அவ்வகையில் மேடைப் பேச்சுமொழி என்பது தனி ரகம். மேடைப்பேச்சு மொழி மூன்று கூறுகளோடு விளங்குகின்றது.

## பேச்சின் முக்கூறுகள்

1.எடுத்தல் ( தொடங்குதல் )

2.தொடுத்தல்

3.முடித்தல்

ஆகிய மூன்றும் ஒவ்வொரு மேடைப்பேச்சாளனும் கவனத்தில் கொள்ள வேண்டிய அம்சங்களாகும்.

முறைப்படுத்தப்பட்ட உழைப்பும், சிறந்த திட்டமிடலும் ஒருவரின் வெற்றிக்கு அணி செய்கின்றன. பேசும் பொருளை ஒழுங்கு முறைக்குக் கொண்டு வந்து தொடக்கம், இடைப்பகுதி, முடிவு எனப்பகுத்துப் பேசுவதையே பேச்சின் கூறுகள் என்கிறோம். இதனை எடுத்தல், தொடுத்தல், முடித்தல் எனவும் கூறலாம்.

## எடுத்தல்

பேச்சைத் தொடங்குவது எடுத்தல். தொடக்கம் நன்றாக இல்லாவிட்டால் கேட்பவர்களுக்குப் பேச்சினைக் குறித்த நல்லெண்ணம் தோன்றாது. சுருக்கமான

முன் ரையுடன் தொடங்க வேண்டும். தடங்கலின்றிப் பேச்சைத் தொடங்குவதே நல்ல அடித்தளமாகும். அவையோருக்கு வணக்கம் கூறி, சிறிய அறிமுகத்துடன் தொடங்க வேண்டும். அறிஞர்களின் மேற்கோள்கள், கவிதை வரிகள், ஆர்வத்தை ஏற்படுத்தும் செய்திகளோடு தொடங்கலாம். கேட்பவர்களுக்கு ஆர்வம் ஏற்பட வேண்டும் என்பதை மனதில் கொள்ள வேண்டும்.

## குழந்தை பேசத் தொடங்குதல்

குழந்தையின் வளர்ச்சியில் பேசுவதும் ஒரு மைல்கல் தான். இரண்டு வயதில் சில குழந்தைகள் நன்றாக மழலை இல்லாமல் பேசும். சில குழந்தைகள் 3 வயதிலும் மழலையுடன் பேசும்.

குழந்தை பிறந்தவுடன் அதன் பேச்சு அழுகைதான். இரண்டு மூன்று மாதங்களில் 'ஆ….' ஊ…..' என்று சில சத்தங்களை எழுப்பும். இந்த சத்தங்கள் கொஞ்சம் கொஞ்சமாக வார்த்தைகளாக மாறி அம்மா அப்பா என்று சொல்லும்போது நமது பரவசத்திற்கு எல்லை எது?

முதலில் எல்லாக் குழந்தைகளும் அம்மா பேசுவதை அப்படியே திருப்பி சொல்லுகிறது. 'மம்மு சாப்படலாமா?' என்று அம்மா கேட்டால் குழந்தையும், 'மம்மு சாப்படலாமா?' என்று பதில் சொல்லுகிறது. 'சாப்பிடலாம்' என்று சொல்ல சிறிது காலம் ஆகிறது.

ஒரு வயதில் குழந்தை ஒற்றைச் சொல்லில் நமக்கு சகலத்தையும் புரிய வைக்கிறது. இந்த வயதில் குழந்தையை பார்த்தால் அதன் வாய் அசையும்; கூடவே ஒரு விரல் நீளும்;

தலை அசையும்; கண்ணில் ஒரு உணர்ச்சி என்று குழந்தையின் முழு உடலும் பேசும். வேண்டாம் என்று சொல்லும்போது தலையை இருபக்கமும் அசைக்கிறது. வேண்டும் என்றால் தலையை மேலும் கீழும் அசைக்கிறது. அடம் பிடிக்கும்போது கால்களை உதைத்துக் கொண்டு தன் விருப்பத்தை சொல்ல நினைக்கிறது. எடுத்துக் கொள்ள வேண்டுமா, இருகைகளையும் தூக்கி காட்டுகிறது.

குழந்தை கற்றுக் கொள்ள இது உதவும். இரண்டு வயதுக்குள் இருக்கும் குழந்தைக்கு புத்தகத்திலிருக்கும் கதையை படித்து அதற்கு புரிவதுபோல சொல்லாம். பிறகு புத்தகத்திலிருப்பதை படித்துக் காட்டுவதுடன் நிறுத்திக் கொள்ளுங்கள். இதனால் வாக்கிய அமைப்புகளை குழந்தை தானாகவே கற்கும்.

குழந்தை பேசும்போது கேளுங்கள்: இது மிகவும் முக்கியம். ஒரு கண், ஒரு காது தொலைக்காட்சிப் பெட்டியின் மேல். இன்னொரு கண், இன்னொரு காது குழந்தையின் மேல் என்று இருக்காதீர்கள். நீங்கள் பேசும்போது கவனிக்கவில்லை என்றால் உங்கள் கணவர் மேல் உங்களுக்கு எத்தனை கோவம் வரும், அதுபோலத்தான் குழந்தையும். குழந்தை தானே என்று நினைக்காதீர்கள். இப்போது நீங்கள் எப்படி குழந்தையை உருவாக்குக்கிறீர்களோ, அப்படித்தான் பிற்காலத்தில் குழந்தை உருவாகும்.

சிறு சிறு பயிற்சிகள் மூலமாக அவர்களின் பேச்சுக் கலையை வளர்க்க முடியும்.

உங்கள் குழந்தையின் வயதுக்கு ஏற்ற பொது விஷயங்கள் பற்றி, நேரம் கிடைக்கும் போதெல்லாம் அவர்களிடம் பேசிக்கொண்டே இருங்கள். அவர்களுக்கு எந்தளவுக்குப்

புரிந்திருக்கிறது என்பதை பேசச் சொல்லி தெரிந்துகொள்ளுங்கள். எங்க செல்லம் உங்களுக்குத் தெரிந்த அளவுக்கு நீங்களே சொல்லுங்க பாப்போம்னு ஊக்கப்படுத்துங்கள்.

ஆரம்பத்தில், வார்த்தைகளை உடைத்துத் தயங்கியபடியேதான் குழந்தைகள் பேசுவார்கள். “வாவ் உனக்கு செமையா பேச வருதே..." என்று அவர்களுக்கு நீங்கள் கொடுக்கும் ஊக்கம் மட்டுமே அவர்களைத் தெளிவாகப் பேச வைக்கும்.

பள்ளி விடுமுறை நாள்களில், குடும்பத்தினர் அனைவரும் கூடியிருக்கும் நேரத்தில், ‘தங்கம் இந்த வீட்ல உனக்கு யார் ரொம்பப் பிடிக்கும்? அவங்களைப் பத்தி எழுந்து நின்று பேசு பார்ப்போம்’ என்று சொல்லுங்கள். நேரத்தை செட் செய்யுங்கள். அவர்கள் எவ்வளவு சுருக்கமாகப் பேசுகிறார்கள் என்று பாருங்கள். படிப்படியாக `ஒரு நிமிஷம் பேசு' என்று அவர்கள் அறிய நேரத்தை செட் செய்யுங்கள். கோவையாக வார்த்தைகளைக் கையாளுதல், நேரக் கவனிப்பு, சொல்ல வந்ததைத் தெளிவாகச் சொல்லுதல் ஆகியவற்றை வளர்க்க இது உதவும்.

குழந்தைகளைச் சட்டெனப் பொதுவெளியில் பேச சொல்லி அனைவரின் முன்பும் பேசி தர்மசங்கடப்படுத்த வேண்டாம். அவர்கள் விரும்பும் இடங்களில், விரும்பும் நேரத்தில் அவர்களைப் பேச ஊக்கப்படுத்துங்கள்.

நாளிதழ் படிக்கும் போது குழந்தைகளையும் பக்கத்தில் உட்காரச்சொல்லிப் படித்து காண்பிக்கவும். அவர்களையும் நாளிதழ் கொடுத்து உரக்க வாசிக்கச் சொல்லுங்கள். இதன் மூலம் சரியான உச்சரிப்பை உள்வாங்கிக்கொள்ள முடியும்.

குழந்தைகள் பேசிய வீடியோவை அவர்களிடமே காட்டி, `சூப்பரா பேசியிருக்க... சில இடங்களில் திருத்திட்டா இன்னும் சூப்பர் ஆகிடும்' என்று அவர்களை உற்சாகமூட்டுங்கள்.

பேச வேண்டிய டாப்பிக், செய்தி போன்றவற்றை எங்கிருந்து எடுக்க வேண்டும், எப்படி நோட்ஸ் எடுத்துக்கொள்ளவேண்டும்... அவற்றை ஞாபகம் வைத்துக்கொள்வது எப்படி என்பதை எடுத்துச் சொல்லுங்கள்.

பேச்சாளராக முதலில் உடல் மொழி அவசியம். அதற்குக் கண்ணாடியைப் பார்த்து சுயமாகப் பேசுவது முக்கியம். உங்கள் குழந்தைகளைக் கண்ணாடியைப் பார்த்து உரக்கப் பேசச் சொல்லுங்கள்.

மற்றவர்கள் முன் பேசும் போது தவிர்க்க வேண்டிய செயல்களான... தேவையில்லாமல் எச்சில் விழுங்குதல், மறந்த வார்த்தையை நினைவுகூர்வதிலேயே நேரத்தைக் கடத்துதல், கூட்டத்தில் ஒரே நபரையோ இடத்தையோ மட்டுமே பார்த்துப் பேசுதல், கைதட்டல் வரும் எனக் காத்திருத்தல் அல்லது கைதட்டி முடிப்பதற்குள் பேச்சைத் தொடங்குதல், தேவையின்றி ஆடை மற்றும் தலைமுடியைச் சரிசெய்தல், குறிப்பாகக் கையில் குறிப்புகளை வைத்துக்கொண்டு அதைப் பார்ப்பதிலேயே கவனம் செலுத்துதல் ஆகியவற்றை ஒவ்வொன்றாய்த் தவிர்க்க பயிற்சி அளிக்கலாம்.

இனி உங்கள் குழந்தையும் மேடைப் பேச்சாளர்தான்!

## பேச்சைத் தொடங்குதல்

பேச்சு தான் நமது வாழ்க்கையின் உயிர் நாடி என்பதனால், இளம் வயிலேயே மேடையில் பேசுகின்ற திறமையை வளர்த்துக் கொண்டால், பிற்காலத்தில் பணியிடமாக இருந்தாலும், அல்லது எந்தச் சூழ்நிலையாக இருந்தாலும் சமாளித்துக் கொள்கின்ற பக்குவத்தை மாணவ மாணவியர் பெறமுடியும்''.

எந்த ஒரு காரியத்தையும் நல்ல நேரம் பார்த்து நல்ல பயிற்சி எடுத்துக்கொண்டு கடவுளை வேண்டிக் கொண்டு தொடங்குவது மனிதர்கள் இயல்பு.

பேச்சை எவ்வாறு தொடங்க வேண்டும்? என்று சில நடைமுறைகள் இடத்துக்கேற்ப பின்பற்றப்படுவதைக் காணலாம்.

## வணக்கம் சொல்லி தொடங்குதல்

நாம் ஒருவரை ஒருவர் பார்த்தால் வணக்கம் சொல்கிறோம். தமிழர் பண்பாடு வழக்கத்தின் படி நாம் காணும் ஒருவரையொருவர் வணக்கம் சொல்லி பின் பேசக் தொடங்குவது. ஒருவரிடம் நாம் பழகுவதற்கு முன்பு வணக்கம் சொல்லி ஆரம்பிப்பது தமிழருடைய மரபாக இருந்து வருகின்றது .

ஆனால் வணக்கம் சொல்வது தமிழர் வரலாற்றில் எங்குமே எந்த குறிப்பிலுமே கிடையாது. சேர மன்னர் தன் குடும்பத்துடன் கானகத்தை காணச் சென்ற போது கூட மக்கள் அனைவரும் ‘வாழ்த்து’ தான் சொன்னார்களேத் தவிர ‘வணக்கம்’ சொல்லவில்லை. 'வாழ்க எங்கோ' அதாவது வாழ்க அரசர் என்று தான் சொன்னார்கள். ஆரிய பழக்கம் வந்த பின்னர் தான் நமஸ்ஹாரம் என்று ஒருவரைஒருவர் பார்த்து சொன்னார்கள். அதைத் தமிழில் எப்படி சொல்வது என்று கேட்டார்கள். அதைத் தொடர்ந்து தான் வணக்கம் நம்மை தொற்றிக் கொண்டது.

ஆகவே வணக்கம் என்ற சொல் ஆரியர்கள் வருகைக்கு பின் நம் தமிழகத்தை ஆளுகின்றது எனலாம்.

முதலில் ஒரு சில இலக்கிய மேற்கோள்களை இங்கு பார்ப்போம்.

கூடா நட்பு பற்றி பேச வந்த திருவள்ளுவர்,

“சொல்வணக்கம் ஒன்னார்கண் கொள்ளற்க வில்வணக்கம்
தீங்கு குறித்தமை யான்”.

( திருக்குறள். 827 )

என்று சொல்லுகிறார். ( இதற்கு மு.வரதராசனார் உரை: “வில்லின் வணக்கம் வணக்கமாக இருந்தாலும் தீங்கு செய்தலைக் குறித்தமையால், பகைவரிடத்திலும் அவருடைய சொல்லின் வணக்கத்தை நன்மையாகக் கொள்ளக் கூடாது” ) இந்த திருக்குறளில் வணக்கம் என்ற சொல், ஒருவருக்கொருவர் முகமன் கூறிக் கொள்ளுதல் என்ற பொருளில் இல்லை. இங்கு வணங்குதல் என்ற வினையின் செயலை மட்டும் குறிக்கிறது.

' தம்பிரான் வணக்கம்' என்ற நூலின் தலைப்பே வணக்கம் என்று அமைந்துள்ளது. இந்த நூல் 20.10.1578 இல் தமிழில் வந்த முதல் அச்சு நூல் ( Printed book ); இந்திய மொழிகளிலும் இதுவே முதல் அச்சுநூல் ஆகும். போர்த்துகீசியமொழியில் எழுதப்பட்ட இந்த கிறிஸ்தவ சமய போதனை நூலை, தமிழில் மொழி பெயர்த்து, வெளியிட்டவர் அண்ட்ரிக் அடிகளார் (Hendrique Henriques) இந்த நூல், கிறிஸ்தவ இறைவணக்கம் என்ற பொருளில், வணக்கம் என்ற சொல்லை கையாண்டு இருக்கிறது எனலாம்.

சிந்தாமணி நிகண்டு என்பது அருஞ்சொற் பொருள் கூறும் அகராதி ஆகும். இதனை எழுதியவர் இலங்கை, யாழ்ப்பாணம், வல்வெட்டித்துறையைச் சேர்ந்த ச.வைத்தியலிங்கம் பிள்ளை என்பார். இந்த நூல் 1876 இல் இயற்றப்பட்டது ஆகும். இந்த சிந்தாமணி நிகண்டில் வணக்கம் என்ற சொல்லிற்கு நிகரான இரண்டு சொற்கள் காணப்படுகின்றன. 1.உபாசிதம் 2. சம்மானனம் ( தகவல்: விருபாவின் 'சிந்தாமணி நிகண்டு மின்–அகராதி' ) இவை இரண்டும் வடமொழி சொற்கள்.

பொதுவாகப் பார்க்கும்போது, ஒருவரைப் பார்த்து ஒருவர் வணக்கம் சொல்லுதல் தமிழர் வழக்கமன்று. வாழ்த்து தெரிவித்தல் மட்டுமே. ஆங்கிலேயர் ஆட்சி இங்கு வந்த பிறகு அவர்களுடைய மரியாதைகளில் ஒன்றான Good Morning, Good Evening, Good Night கூறும் வழக்கம் இங்கும் புகுந்தது. இதற்கு மாற்றாக 'நமஸ்காரம்' என்று சொல்ல ஆரம்பித்தனர்.

எங்கும் தமிழ் எதிலும் தமிழ் என்ற தனித்தமிழ் இயக்கம், மறைமலை அடிகள் தலைமையில் தமிழ்நாட்டில் தோன்றிய போது பல வடமொழிச் சொற்கள் தமிழ் வடிவம் பெற்றன. எனவே அப்போது எழுத்திலும், பேச்சிலும் வழக்கத்திலிருந்த பல சமஸ்கிருத சொற்கள் வழக்கொழிந்து போயின. நமஸ்காரம், ஜலம், சந்தோஷம், அபேட்சகர், பிரஜை போன்ற வடமொழி சொற்கள் முறையே வணக்கம், நீர், மகிழ்ச்சி, வேட்பாளர், குடிமகன் என்றாயின. பாராளுமன்றம் நாடாளுமன்றம் ஆயிற்று நமஸ்காரம் மறைந்து 'வணக்கம்' வழக்கில் வந்தது இப்படித்தான். (முன்பெல்லாம் தமிழ் சினிமாவில், படம் முடிந்தவுடன் 'சுபம்' என்று போடுவார்கள்; பிற்பாடுதான் 'வணக்கம்' என்று போட ஆரம்பித்தனர்.)

'எது எப்படி இருந்த போதிலும், 'பழையன கழிதலும், புதியன புகுதலும்' என்ற நன்னூலின் கருத்தினுக்கு ஏற்ப, வணக்கம் என்ற சொல், ஒருவருக்கொருவர் கூறிக் கொள்ளும், அன்பைத் தெரிவித்துக் கொள்ளும், வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்ளும் ஒரு பொது தமிழ்ச் சொல்லாக, தமிழர்கள் மனதினில் ஆழமாக பதிந்து விட்டது. எனவே நாம் வணக்கம் சொல்லிக் கொள்வதில் தவறேதும் இல்லை.

" எல்லாம் வல்ல இறைவனை வணங்கி தொடங்குகிறேன்" அன்பு மாணவ மணிகளே! ஆசிரியர் பெருமக்களே" என காலத்துக்கு ஏற்ப சபையோருக்கு ஏற்ப வணக்கம் சொல்வார்கள். எந்த புத்தகத்தை எடுத்தாலும் சுவாமி விவேகானந்தர் சிகாகோ மாநாட்டில் சகோதர சகோதரிகளே என்று பேசி தொடங்கியதை குறிப்பிடாமல் இருக்க மாட்டார்கள் ஒரு தொலைபேசியில் பேச தொடங்கினால் கூட வணக்கம் என்று சொல்லித்தான் பேச தொடங்குவேம் இந்த பழக்கம் நாம் அனைவரின் உள்ளத்தில் இருந்து வெளிவரும் ஒரு அழகிய சொல்.

தமிழ் ஆர்வலர்கள் அல்லது மேடைப் பேச்சாளர்கள் பலரும், தொடங்கும்போது வணக்கம் சொல்லி விட்டு, முடிக்கும் போது, நன்றி – வணக்கம் என்று அமர்வர்.

### பேச்சாளர்கள் பேச தொடங்குதல்

அறிஞர் அண்ணா, டாக்டர் கலைஞர் “என் உயிரினும் மேலான கழக உடன்பிறப்புகளே !” என்றும்,

டாக்டர் எம்.ஜி.ஆர் ”என் இரத்தத்தின் இரத்தமான உடன்பிறப்புகளே" ,

செல்வி ஜெயலலிதா "புரட்சித் தலைவரின் இரத்தத்தின் இரத்தமான உடன் பிறப்புகளே" என்றும் தொடங்குவர்.

மேடையில் தோன்றி இவ்வாறு இவர்கள் பேசத் தொடங்கியதும் எழுகின்ற கைதட்டல்கள் அடங்க அதிக நேரம் பிடிக்கும்.

பேச்சாளர் நாம் பேசவுள்ள மேடை பட்டிமன்றமா? அரசியல் களமா ? வழக்காடு மன்றமா ? சொற்பொழிவா ? விளையாட்டு விழாவா ? திருமண வைபவமா ? என்பதை மனதில் வைத்துக் கொண்டு மேடையில் உள்ளவர்களின் பெயரைச் சொல்லி வணக்கம் சொல்ல வேண்டும்.

அரசியல் மேடை என்றால் மைக் செட் காரர் பெயரைக் கூட விடக் கூடாது! தலைவர் அவர்களே! முன்னிலை வகிக்கும் ....... அவர்களே! என்று ஒருவர் விடாமல் கூட்ட நிகழ்ச்சி நிரலில் உள்ள பெயர்களைக் குறிப்பிட்டு வணக்கமும் நன்றியும் சொல்ல வேண்டுமென எதிர்பார்ப்பார்கள். இதைப் போன்றுதான் அலுவலக நிகழ்விலும் பணியாளர்கள் ஒவ்வொருவரின் பெயரையும் கூறி வணக்கம் மற்றும் நன்றி சொல்ல வேண்டும் என எதிர்பார்ப்பார்கள். இதுவே வரைமுறையும் ஆகும். நிகழ்வில் பங்குபெறுபவர்கள் என அழைப்பிதழில் பெயர் இருக்கும். ஆனால் கூட்டத்திற்கு சில சூழ்நிலைக் காரணமாக வந்திருக்க மாட்டார்கள் அவர் பெயரை விட்டு விடக் கூடாது . சூழ்நிலைக் காரணமாக வர முடியவில்லை என நிகழ்வில் பங்குபெற இருந்திருக்கும் நபரின் பெயரைக் கூறி வணக்கம் நன்றி சொல்லுதல் முறைமை.

கூட்டத்தின் முடிவில் நன்றி உரை கூற வருபவர் அனைவருக்கும் நன்றி தெரிவிப்பதுடன் ஒலி, ஒளி அமைப்பாளர், செய்தி, ஊடகத்துறையினருக்கும் நன்றி கூற வேண்டும். தவறியேனும் மறந்து விட்டு விடக்கூடாது.

பட்டிமன்றம் வழக்காடு மன்றங்களில் தான் கூற வந்த தலைப்பு பற்றி விரிவாக நடுவர் மட்டும் பேசுவார். இரண்டு தரப்பிலும் பேச வருபவர்கள் தான் பேச வந்த தலைப்பு

மட்டும் சொல்லிப் பேசத் தொடங்க வேண்டும். எல்லோருக்கும் சிறப்பு வணக்கம் சொல்வது நேர விரயம் ஏற்படாமல் தடுக்கும்.

சொற்பொழிவு ஆற்றுபவர் தான் பேசும் கூட்டத் தலைவர் மற்றும் தன்னை இந்த நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்தவர், நிகழ்ச்சி அமைப்பாளர் பற்றிக்
கூறி வணக்கம் கூறுவார்.

திருமுருக கிருபானந்தவாரியார் சுவாமி, புலவர் கீரன், குன்றக்குடி அடிகளார் போன்ற ஆன்மீகச் சொற்பொழிவாளர்கள், தெய்வங்கள் பெயரைச் சொல்லி இறைவணக்கம் பாடிய பிறகு பேச தொடங்குவார்கள். அவர்கள் மேடை அத்தகையது கோயில்களில் உள்ள அரங்கத்தில் சொற்பொழிவு நடக்கும். பெரும்பாலும் பக்தர்கள் மட்டுமே அவையோராக இருப்பார்கள்.

## தொடுத்தல்

தொடக்கவுரைக்குப் பிறகு, பொருளை விரித்துப் பேசும்முறை தொடுத்தல் எனப்படும். சொல்ல வேண்டிய கருத்தைச் சுருக்கமாகவும் தெளிவாகவும் எடுத்துரைக்க வேண்டும். சிலர் பேசும்போது, என்ன தலைப்பில் பேச வந்தோம் என்பதையே மறந்து பேசிக்கொண்டிருப்பர்.

பேச்சு நன்றாக இல்லாவிட்டால் கேட்போரின் கவனம் சிதறிவிடும். பேச்சு கேட்பவர்களைக் கவர வேண்டும். பேச்சின் அடிப்படை, தெளிவாகப் பேசுதலாகும். ஆகையால் சொல் தெளிவும் கருத்துத் தெளிவும் மிக முக்கியமானவை. கருத்து, சுருக்கமாக இருக்கும்போது தான் பேச்சு சுவைக்கும்.

நாம் பேசும் பேச்சு, எளிமையான சொற்களைக் கொண்டதாகவும் பார்வையாளர்களின் ஆர்வம் குறையாமல் கருத்தைக்கொண்டு சேர்ப்பதாகவும் அமைதல் வேண்டும். மேலும் அது, கருத்தாழம் உடையதாகவும் தெளிவுடையதாகவும் கருத்து விளக்கமுடையதாகவும் அமையுமாயின் வெற்றியடையும்.

எண்ணங்களைச் சொல்லும் முறையால் அழகுபடுத்துவதே அணி எனப்படும். கேட்போர் சுவைக்கத்தக்க உவமைகள், எடுத்துக்காட்டுகள், சொல்லாட்சிகள், பல்வேறு நடைகள், சிறுசிறு கதைகள் முதலியன அமையப் பேசுவதே சிறந்த பேச்சாகும்.

உணர்ச்சி உள்ள பேச்சே உயிருள்ள பேச்சாகும். பேச்சாளர், தம் உணர்ச்சிப் பெருக்கில் பேசக்கூடாது. கேட்போரின் உள்ளத்தில் தாம் விரும்பும் உணர்ச்சியை ஏற்படுத்தும் வகையில் பேசுதல் வேண்டும்.

## முடித்தல்

பேச்சின் முடிவுதான் நாம் என்ன பேசினோம் என்பதனைப் பார்வையாளர்கள் உணர்ந்து பாராட்டுவதற்கும், பரிசினைப் பெறுவதற்கும் இன்றியமையாததாகும். அதனை ‘முடித்தல்’ என்பர். தொடக்கம் எவ்வாறு சிறப்பாக இருக்க வேண்டுமோ அதே போல சிறந்த கருத்தினைக் கூறி முடிப்பதும் முக்கியமானதாகும். பேச்சுப் போட்டிகளில் கலந்து

கொள்பவர்கள், நேரம் கடந்து விட்டது என்பதற்காக பேச்சினை முடிக்காமல் அப்படியே விட்டுவிடவும் கூடாது. கொடுக்கப்பட்டுள்ள நேரத்திற்குள் பேசுவதற்குப் பலமுறை பயிற்சி எடுத்துக் கொள்ள வேண்டும். பேச்சின் முடிவில் நன்றி சொல்லி முடித்தல் மேடைப்பேச்சுக்குரிய பண்பாடாகும்.

பேச்சை முடிக்கும்போதுதான், பேச்சாளர் தமது கருத்தை வலியுறுத்தவும் கேட்போர் மனத்தில் பதியுமாறு சுருக்கிக் கூறவும் கூடும். பேச்சின் சுருக்கத்தைக் கூறி முடித்தல், உணர்ச்சியைத் தூண்டும் முறையில் முடித்தல், பாராட்டி முடித்தல், பொருத்தமான கவிதையைக்கூறி முடித்தல், அறிஞர்களின் கருத்தைக்கூறி முடித்தல் என முடிக்கும் முறைகள் பல உள்ளன. சிறந்த பேச்சாளர் எப்படி முடித்தாலும் அது அழகாகவே இருக்கும்.

**பேச்சு வகைகள்**

பேச்சுக்களை அறிஞர்கள் பலர் பலவாறு வகைப்படுத்தி விளக்குகின்றனர்.

'சாதனை படைக்கும் சிந்தனையாளர்கள்' என்ற நூலில் பெ. வேலுச்சாமி என்ற கட்டுரையாளர் 'அன்பாகப் பேசுவோம்' என்ற பொருளில் ஒரு கட்டுரை எழுதி உள்ளார். அதில் வரும் செய்திகளாவது.

நாவைக் கட்டுப்படுத்த வேண்டியது மானிடராகப் பிறந்த 'ஒவ்வொருவரின் கடமையாகும். நரம்பில்லா நாக்கு அப்படியும் பேசும் இப்படியும் பேசும் ' என்பது

ஒருவரின் நேர்மை இல்லாத தன்மையைத் சுட்டிக்காட்ட அனைவரும் பயன்படுத்தும் பழமொழி ஆகும்.

பேச்சின் தனித்தன்மை, திறமையைப் பொறுத்து பலவகைப்படுத்தலாம். அவை முறையே அன்புப் பேச்சு, அமைதி, அவமான, அறிவுப்பேச்சு, ஆலோசனைப்பேச்சு, கண்டனப் பேச்சு, ஆனைப்பேச்சு, கோபப்பேச்சு, நிதானப்பேச்சு, நையாண்டிப்பேச்சு, நக்கல்பேச்சு, மழலைப்பேச்சு, மகிழ்ச்சிப்பேச்சு மற்றும் வாழ்த்துப்பேச்சு என்று பல வகைகள் உண்டு. எப்போதும் மகிழ்ச்சியாக இருப்பதற்கு அன்புடன் பேசுங்கள் அது உங்களுடன் இணங்க இருப்பதற்கு ஒப்பாகும் என்று பெ. வேலுச்சாமி குறிப்பிடுவார்.

**தொல்காப்பியர் பேச்சு வகைகளாக**

பேசு( speak)

பகர்( speak with data)

செப்பு(speak with answer)

கூறு ( speak categorically)

உரை ( speak meaningfuly)

நவில்( speak rhymingly)

இயம்பு( speak musically)

பறை ( speak to reveal)

சாற்று ( speak to declare)

நுவல் (speak with introduction)

ஓது ( speak to recite)

கழறு( speak with censure)

கரை( speak with calling)

விளம்பு( speak with a message)

என தொல்காப்பியர் இத்தனை வகையான பேச்சுகளைக் குறிப்பிடுகிறார்.

**புத்திசாலித்தனமான பேச்சு**

ஜெர்மானிய அறிஞர் மார்க்ஸ் முல்லர் விக்டோரியா பேரரசிக்கு எழுதிய கடிதத்தில் அறம் சார்ந்த வாழ்க்கை முறையை அறிய உலகம் இந்தியாவின் பக்கம் திரும்ப வேண்டும் என்று எழுதி இருந்தாராம்.

"இன்றும் வாழ்கின்ற பண்பாடு இந்தியாவில் மட்டுமே இருக்கின்றது" என்றார் தத்துவவாதி வில்டி யூராண்ட் என்றால் எழுத்து உலக மேதை நம் பாரதத்தின் பண்பாடு உன்னத பண்பாடு அதற்குப் பேராசிரியர் க.இராமச்சந்திரன் என்பார் ஒரு சம்பவத்தை எடுத்துக் கூறுவார்.

பிரிட்டிஷ் பிரதமர் சர்ச்சில் இந்திய தத்துவமேதை ராதாகிருஷ்ணனுக்கு விருந்தளித்தார். கரண்டியை தவிர்த்து கைகளால் சாப்பிட்டால் ராதாகிருஷ்ணன் இதை பார்த்த சர்ச்சில் இந்தியர்களுக்கு சுத்தம் பற்றிய பிரக்ஞையை கிடையாது நாங்கள் கைகளால் சாப்பிடாமல் கரண்டியால் சாப்பிடுகிறோம் என்று ஏளனமாக பேசி இருக்கிறார்.

அதற்கு பதிலடி தரும் இடத்தில் ராதாகிருஷ்ணன் நீங்கள் சாப்பிட்ட கரண்டியில் அடுத்தவர் சாப்பிட முடியும். ஆனால், என் கையால் வேறொருவர் சாப்பிட முடியாது. சுத்தம் பற்றிய தெளிவு எங்களுக்கும் அதிகம் இருப்பதால் தான் நாங்கள் அவரவர் கையால் சாப்பிடுகிறோம் என்றாராம்.

## காலமும் இடமும்

“நேரமும் அலையும் யாருக்காகவும் காத்திருப்பதில்லை என்பதை ஆங்கிலத்தில் 'Time and tide waits for none' என்று கூறுவார்கள். இதற்கு ஏற்ப தக்க நேரம் பார்த்து காயை நகர்த்தி காரியத்தை செயல்படுத்த வேண்டும். என்னதான் ஆங்கிலத்தில் பழமொழி ஆயிரம் இருந்தாலும் நம் நாட்டுக் திருக்குறளில் இல்லாத கருத்தை எந்த மொழியிலும் காண முடியாது.

"ஞாலம் கருதினும் கைகூடும் காலம்

கருதி இடத்தால் செயின்".

குறள் - 484.

தக்க இடத்தையும், காலத்தையும் தேர்ந்தெடுத்து செயல்பட்டோமாயின் உலகத்தையே கூட வெல்ல முடியும் முடியும் என்பது குறளின் கருத்து ஆகும்.

அதுபோல, பேச்சாளர் என்பவர் குறித்த காலம் இடம் கருதி தன் பேச்சு என்ற ஆயுதத்தைப் பயன்படுத்த வேண்டும். அப்பொழுது அந்தப் பேச்சும் பேச்சாளனும் வெற்றி பெறுவது உறுதி.

பேசி சாதிப்பவனை விட பேசாமல் தக்க நேரத்தில் தன் பேச்சு என்கின்ற ஆயுதத்தை பயன்படுத்தி வெற்றி பெறுபவனே இவ்வுலகில் அதிகம்.

" இவன் நேரம் காலம் தெரியாமல் பேசிகிட்டு இருக்கான் பாரு" என்று பேச்சு வழக்கில் ஒருவன் பேசிக்கொண்டு இருப்பதை கிண்டலடிக்கும் விதத்தில் கூறுவதை நாம் பார்த்திருக்கின்றோம்.

சாதாரணமாக நாம் அப்பாவிடம் செலவுக்கு பணம் வாங்க வேண்டும் என்றால் கூட அவருடைய மனநிலை, கால, நேரம் பார்த்து தான் பேச வேண்டும்.

பொதுவாக ஒருவர் வெளியே கிளம்பும் போது பணம் கேட்டால் சிலருக்கு பிடிக்காது அம்மாவிடம் முதல் நாளே சொல்லி அவங்க மூலம் கேட்டு பெறுவது ஒரு உத்தியாகும்.

பள்ளி செல்லும் மாணவ பருவத்தில் ஆசிரியர் மாணவரிடம் ப்ரோக்ரஸ் ரிப்போர்ட்டை கையில் கொடுத்து மறுநாள் அதில் கையெழுத்து வாங்கி வருமாறு கொடுத்து அனுப்புவது வழக்கம்.

மறுநாள் அந்த அட்டையை மாணவன் தன்னுடைய பெற்றோரிடம் காண்பித்து கையெழுத்து வாங்கி வர வேண்டும்.

நன்கு படித்திருக்கும் மாணவன் பள்ளியிலிருந்து வீட்டுக்கு வந்ததுடன் தாய் தந்தையிடம் காண்பித்து விடுவான் சந்தோஷமாக. ஆனால் மதிப்பெண் குறைவாக எடுத்த மாணவன் அட்டையை பெற்றோர்களிடம் காண்பிப்பதில் தாமதம் ஏற்படும். அவன் பெற்றோரின் மனநிலை அறிந்து நேரம் காலம் பார்த்துக் கொண்டிருப்பான். எப்போது காண்பித்தால் அடி வாங்காமல் தப்பிக்கலாம் கையெழுத்து வாங்கலாம் என்று.

மறுநாள் பள்ளி செல்லும் காலை வேளையில் தன்னுடைய புத்தகப்பையை தோளில் போட்டுக்கொண்டு, தன் தந்தை பணி செய்ய அலுவலகம் கிளம்பும்போது தாய் சமையல் செய்து கொண்டிருக்கும் வேளையில் காடை நீட்டுவான். அந்த நேரம் இருவருமே தன்னுடைய கவனத்தை தன் வேலையில் வைத்திருக்கும் நேரம் அது. திட்டு அல்லது அடியோ கொடுக்க வேண்டிய நேரத்தில் மதிப்பெண் இவ்வளவு தான் எடுத்திருக்கிறாயா சரி சரி அடுத்த முறை நல்லா படித்து நல்ல மார்க் எடு என்று கையொப்பம் வைத்து கொடுத்து அனுப்பி விடுவார் . தாயோ மார்க்கை சரியாக பார்க்காது கவனத்தை சமையலறையில் வைப்பதைக் காணலாம்.

அதுபோல நாம் பேசுவதைக் கேட்டுக் கொண்டிருப்பவர்கள் மனநிலை, நாம் பேசிக் கொண்டிருக்கும் காலம் ஆகியன அறிந்து பேச வேண்டும். கூட்ட முடியும் தருவாயாக இருந்தால் சுருக்கமாக விரைவில் பேச்சாளர் தன் உரையை முடிக்க வேண்டும். தேவையில்லாமல் நீட்டித்துக் கொண்டிருக்கக் கூடாது. கேட்பவர்களுக்குச் சலிப்பை உண்டாக்கும். இருப்பவர்கள் புறப்பட்டு விடுவார்கள். கூட்டம் குறையத் தொடங்கும். பேச்சாளருக்கே இது அவமானமாக போய்விடும்.

**பேச்சாளர் செய்யத்தக்கன; தகாதன:**

மேடையில் பேசும் பேச்சாளர் என்னென்ன செய்யத் தக்கன? என்னென்ன செயல்கள் செய்யக்தகாதன?அதாவது செய்யக் கூடியவை எவை, செய்யக்கூடாதவை எவை என்று கருத்தில் கொள்வது அவசியம்.

மொத்த சபையையும் நோக்கிப் பேச வேண்டும். ஒரு புறத்திலுள்ளோரையோ நடுவில் உள்ளவர்களையோ மட்டும் பார்த்துப் பேசக்கூடாது. வலப்புறம், இடப்புறம் திரும்பிப் பார்த்துப் பேச வேண்டி வந்தால் குரலைச் சற்று உயர்த்திப் பேச வேண்டும். சபைக்கு முதுகைக் காட்டுதல் நல்ல செயல் அல்ல.

மேடையில் பேசும்போது, தனக்குள் தனியாக ஏதாவது முணுமுணுக்கக் கூடாது. ஒரேயடியாகக் கூச்சலிட்டுப் பேசுவது சபையோர் அனைவருக்கும் பிடிக்கும் என்று கருத முடியாது. சிலருக்கு இந்தப் பேச்சு பெரும் சப்தமும் சலிப்பையும் சில நேரம் வெறுப்பையும் உண்டுபண்ணும். எனவே, தேவையான நேரத்தில், தேவையான இடத்தில் குரலை உயர்த்தி, தாழ்த்தி ஏற்ற இறக்கத்துடன் பேசினால் சபையோர் அனைவரும் இரசித்துக் கேட்பார்கள்.

"நீட்டோலை வாசியா நெடுமரமாய் நின்றான்"

என்பது போல நிற்காமல் உயிருள்ள மனிதனைப்போலச் செயல்பட வேண்டும். கை, கால்களை உயர்த்தி தாழ்த்தி திரும்பி சிரித்துப்பேசி சபையோரைக் கவரலாம்.

உணர்ச்சி வேகம், அவ்வப்போது எழுகின்ற கோபம், அவற்றால் உருவாகும் சுடுசொற்கள் அறவே தவிர்ப்பது நலம். அவசியம் ஏற்படும் பட்சத்தில் அவையோரை அவமானப்படுத்தாதவாறு பேசுதல் அவசியம்.

கிராமத்துப் பாமர மக்கள் நிறைந்த சபையில் அவர்கள் தகுதிக்கு மீறிப் பேசலாகாது. சபையோரின் அறியாமைக்கு மதிப்புக் கொடுத்துப் பேச்சு அமைய வேண்டும். மரபு மீறக்கூடாது.

சபையோர் கை தட்டாவிடில் பேச்சாளர் மனமொடிந்து போகலாகாது. சில இடங்களில் அமைதியாகப் பேச்சைக் கேட்பார்கள். அதுவே சபையோரே அமைதிப்படுத்திய சிறந்த பேச்சாகும். நாடக மேடைபோலப் பொதுமேடையில் அடிக்கடி கைதட்டல்களையும் நகைச்சுவையையும் எதிர்பார்க்கலாகாது.

பேசும்போது தன்னுடைய பேச்சு சபையோரின் மனதைப் புண்படுத்தாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். யாருடைய மனமும் பாதிக்காத வண்ணம் பேச்சை அமைப்பது சிறப்பு.

பேச்சாளர் தான் பேசும் விசயத்தை எடுத்துச் சொல்வதில் தளராத உற்சாகத்தோடிருப்பதாகக் காட்டிக் கொள்ளலாம். தவறில்லை அரசியல் பேச்சில் உற்சாகம் கனன்று வீசும். இடையிடையே தீப்பொறி பறக்கலாம். தேவைக்கேற்ப பேச்சைச் சுருக்கி கொள்ளலாம்.

பெரும்பாலும் பேச்சு கேட்போருக்கு விளங்கும்படி வெளிப்படையானதாகவும் விரைந்து புரியும் வகையிலும் அமைதல் நலம். சபையில் இரட்டுற மொழிதலும் சங்கேத விபரீதங்களை உண்டாக்குவது ஆகாது.

முடிந்தவரை எளிய சொற்களை கொண்டு சிறு சிறு வாக்கியங்களால் பேச்சை வடிவமைக்கலாம். நீண்ட நெடிய உரைகளை தவிர்ப்பது நல்லது. ஆபிரகாம் லிங்கன் தனது கெட்டில்பர்க் பேச்சில் 207 சிறு வார்த்தைகள்தான் பேசியுள்ளார். அவற்றில் 200 வார்த்தைகள் மிகச் சின்னஞ்சிறியவை.

தாம் கற்றதையெல்லாம் சபையோர் முன் கொட்டிவிட வேண்டும் என்று ஆசைப்படக் கூடாது கொடுந்தமிழில் பேசலாகாது. வழக்கில் இல்லாத சொற்களை அள்ளிக் கொடுத்தல் கூடாது. மனக்கணக்கில் மேல்மூச்சு கீழ்மூச்சு வாங்கப் பேசுவதும் கணக்கில்லாமல் மேற்கோள்களை அள்ளி வழங்குவதும் கதைகளை விரிப்பதும் விடுத்துத் தக்கவை என்றால் செய்யுங்கள். தேவையில்லாத நேரங்களில் தவிர்த்துவிட வேண்டும்.

பேசி முடித்து, கடைசி மணித்துளிகள் தான் சொன்ன கருத்துக்களின் சாராம்சத்தைச் சுருங்க எடுத்துக்கூற வேண்டும். இடையில் வந்து கலந்து கொண்டோரும் முழுவதும் அறிந்து கொள்வதற்கு வசதியாக இருக்கும்.

ஒவ்வொரு குறிப்பும் கேட்போருடைய உள்ளத்தில் நேரடியாகப் பதியுமாறு செய்தல் நலம். முடிவுரையை வரம்பின்றி நீட்டித்துச் சொல்லுதலும் ஆங்காங்கு நிறுத்துதலும் பேச்சாளருக்கு ஆகாத செயல்கள்.

எந்த ஒரு பேச்சாளரும் எடுத்த உடன் சிறிது புன்முறுவலுடன் சபையை வணங்கி பேசத் துவங்க வேண்டும் . அகம்பாவமான பேச்சை மக்கள் அருவருப்பதைக் காணலாம்

அத்தகைய பேச்சைச் சபையோர் இடைமறிக்கவும் வாய்ப்புண்டு. கேட்கவும் மாட்டார்கள் கடுகடுத்த முகத்துடன் தடித்த பேச்சுடன் பேச்சாளர் பேசப் புகுதல் ஆகாது.

இவை யாவும் பெரும்பாலும் பேச்சாளர் தம் மேடைப்பேச்சின் போது பின்பற்ற வேண்டிய நெறிமுறை Dos & Don't என்பார்களே அதுபோல செய்யத்தக்கன - தகாதன என்றுக் கொள்ளலாம்.

## சபையை உற்சாகப்படுத்துதல்

பொதுவாக எந்த ஒரு பேச்சாளனும் தன் முன் இருக்கும் சபையோரேத் தன் வயப்படுத்துவது மிக முக்கியமான முதற்கடைமையாகும். அவ்வாறு தன்வயப்படுத்திய சபையோரே விளிக்கும் வார்த்தைகளே கவர்ந்திழுக்கும் விதமாக அமைய வேண்டும்.

பொய் சொல்ல தயங்கவே கூடாது. " இது போன்ற சபையை நான் பார்த்ததே இல்லை. கடந்த 10 வருடங்களாக மேடையில் பேசிக்கொண்டு இருக்கிறேன். தேர்ந்தெடுக்கப்பட்ட மக்களைக் கொண்டு இறைவனால் உருவாக்கப்பட்டது இந்தச் சபை.

“ஆன்றவிந்த சான்றோர்கள் நிரம்பிய சபையில் அடியேன் பேசுவதற்கு வாய்ப்பு கிடைத்தமைக்குப் பெருமைப்படுகிறேன்”.

“இதுபோன்ற சிரித்த முகத்துடன் நீங்கள் இருப்பதை கண்டால் எங்களுக்கு பேச்சு தானாக வரும்”.

இப்படியெல்லாம் வாய் கூசாமல் பேசப்பழக வேண்டும். பேச்சாளர் நம்மைப் பாராட்டுகிறார் என்ற எண்ணம் சபையோர் மனதில் தோன்ற வேண்டும், பேச்சாளர் தோற்றுவிக்க வேண்டும்.

ஒரு கல்விக்கூடத்திற்குப் பேசப் போகும் பேச்சாளர், அந்தக் கல்விக்கூடத்தை நிறுவியவர் பற்றிய குறிப்புகளை ஏற்கனவே சேகரித்து அதை தன் பேச்சில் கலந்து பேசுதல்; இவ்வூரிலிருந்து வெளிநாடு, ராணுவம், ஆராய்ச்சிக்காகச் சென்றவர்களைக் குறித்த விவரங்களைக் கேட்டறிந்து பேசுதல் அவ்வூர் மக்களை உற்சாகப்படுத்துவதாக அமையும் என்பது உண்மை.

“ஒரு காலத்தில் தென்னை மர ஓலைகளால் வேயப்பட்ட கொட்டகையில் ஆரம்பிக்கப்பட்ட இந்தப் பள்ளி இன்று 50 ஆண்டுகளில் ஆல விருட்சமாக வளர்ந்து பரந்து விரிந்து கல்வி கற்போருக்கு தவச்சாலையாக மாறியுள்ளது. இந்தப் பொன் விழா மேடையில் இந்தப் பள்ளியின் பழைய மாணவன் என்று பெருமையாகக் கூறிக்கொள்கிறேன். என்னை அன்று பேச்சுப்போட்டிகளில் ஊக்குவித்த இப்பள்ளித் தமிழாசிரியர் பெருமகனார் ஐயா புண்ணியத்தில் உங்கள் முன் நின்று நிற்கிறேன். 'பாராளுமன்ற உறுப்பினராக உயர்ந்து மக்கள் சேவை செய்வதற்கு அடித்தளமிட்டுத் தந்தது இந்தப் பள்ளிக்கூடம்தான் " என்று பெருமை பொங்க பேச்சாளர் பேசும்போது அவ்வூரைச் சேர்ந்த அவையோர் மிகுந்த உற்சாகம் அடைவார்கள்.

குழந்தைகள் படிக்கும் பள்ளியில் பேசப்போகும் பேச்சாளர் அந்தக் குழந்தைகள் கூடிய சபையை உற்சாகப்படுத்துவது ஒரு சாதுர்யம். அவர்கள் நிலைக்கு நாம் இறங்கி, கதைகள் சொல்லிப் பேசிக் கவர்ந்திழுக்க வேண்டும் . அதுதான் அவர்களை உற்சாகப்படுத்துவதாக இருக்கும் .

ஆக, சபையை ஒரு பேச்சாளர் உற்சாகப்படுத்துதல் என்பது அவரது கடமை. சபையோர் யார்? எத்தகையவர்? எந்தச் சூழலில் இருக்கிறார்கள்? நாம் பேசுவது முதலாவதா? கடைசியா? இன்னும் பேச்சைக் கேட்கும் உற்சாகத்துடன் சபையோர் மனநிலை உள்ளதா? என்பதைப் பேச்சாளர் ஆராய்ந்து அறிந்து நடந்து கொள்ள வேண்டும்.

## பேச்சின் இடையே

பேச்சாளர் மேடையில் பேசிக் கொண்டிருக்கும் போதே 'நா' வரண்டு போகலாம். பேசிக்கொண்டிருக்கும் போதே தண்ணீர் தாகம் ஏற்படலாம். ஆகவே பேசுவதற்கு மேடைக்கு செல்வதற்கு முன் எச்சரிக்கையாக தண்ணீர் எடுத்து வைத்துக்கொள்ள வேண்டும்.

தாம் பேசிக் கொண்டிருக்கும் வேளையிலே சரியான தருணம் பார்த்து ஒரு மடக்கு தண்ணீரை குடித்து விட வேண்டும். தாம் தண்ணீர் குடிக்கும் வேளையில் பார்வையாளர்களுக்கு இடையே சலசலப்பு ஏற்படாத வண்ணம் குடித்தல் வேண்டும்.

அறிஞர் அண்ணா அவர்களுக்கு அடிக்கடி மூக்குப்பொடி போடும் பழக்கம் இருந்திருக்கிறது. தொடர்ந்து மேடையில் பல மணி நேரங்கள் பேசக்கூடிய வலிமை வாய்ந்தவர் என்பதை உலகம் அறியும்.

அண்ணா அவர்கள் மூக்குப்பொடியை பயன்படுத்தும் விதம் எந்த வகையிலும் யாரையும் இடையூறு செய்ததில்லை. தன்னுடைய முன்னங்கையில் பொடியைத்தடவி வைத்துக்கொண்டு பேச்சினிடையே தடங்கல் இல்லாதபடி மூக்கில் வைத்து அப்படியே உறிஞ்சி விடுவாராம். இந்தச் செய்தி ஒரு நூலில் குறிப்பிடப்பட்டிருந்தது.

**சமய மேடைப்பேச்சு**

சமய மேடைப் பேச்சாளர்கள் மறைமலையடிகள், கிருபானந்த வாரியார், குன்றக்குடியடிகள், புலவர் கீரன், தாவூத் ஷா, அப்துல் சமது, காயிதே மில்லத், அப்துல்லா செய்யதலி, தனிநாயகம் அடிகளார், அமுதன் அடிகள், எஸ்ரா சற்குணம் ஆகியோரின் மேடைப்பேச்சு சமயம் சார்ந்த பேச்சுகளுக்கு சொந்தக்காரர்கள்.

**ஊடகப் பேச்சு**

சுகிசிவம், இறையன்பு, கண்ணதாசன், வைரமுத்து, கு. ஞானச்சம்பந்தம், தென்கச்சி கோ சுவாமிநாதன், ஐ.லியோனி, சுப.வீரபாண்டியன், புலவர் நன்னன் எஸ். ராமகிருஷ்ணன் போன்றவர்கள் ஊடகங்களில் பேசுகின்றனர். அவற்றை வலையொளியில் கண்டு, கேட்டு மகிழலாம்.

## ஏழுவகைச் செயல்

ஒரு பேச்சாளர் மேடையில் பேசும் முறை பற்றி விரிவாகக் கண்டோம். அந்தப் பேச்சை எவ்வாறு செயல்படுத்துவது என்பது குறித்துக் காணலாம்.

ஒருவர் தன் பேச்சுத்திறனைச் செயல்படுத்துவதற்கு ஆற்றலைப் பெற வேண்டும். அவ்வாறு ஆற்றலை பெறுவதற்குத் தமது சுய முயற்சியும், பொது அறிவையும் உலக நடைமுறைப் போக்கையும் தம்முள் மிகுதியாகப் பெருக்கிக் கொள்ள வேண்டும். அவ்வாறு செயல்பட பேச்சாளர் ஏழு வகை உபாயங்கள் உள்ளன.

### 1. பொருத்தம்

முதலாவதாக பேச்சுக்கும் பேச்சாளருக்கும் ஒருவிதப் பொருத்தம் இருக்க வேண்டும். பேச எடுத்துக்கொண்ட சொற்பொருளுக்குத் தகுதியுடையவராக அவர் இருக்க வேண்டும். ஒருவர் பேச்சிலும் வெளியிடும் கருத்துக்களிலும் ஊக்கமும் கவலையும் தமக்கு இருப்பதாக அவையோரை அறியச் செய்ய வேண்டும். கடமைக்காகவும் வாங்கும் கைக்கூலிக்காகவும் பேசுவதாக சபையோர் எண்ணி விடக் கூடாது. பேசுபவரிடத்தில் ஊக்கம் நிறைந்த பேச்சு இல்லாது போனால் ஒரு நாளும் சபையை ஊக்கப்படுத்த முடியாது. ஒப்புக்காக அவையில் பேசுபவரின் பேச்சின் மீது அவையோர் கவனம் செலுத்த மாட்டார்கள் என்பதும் உறுதி.

### 2. தன்னம்பிக்கை

அவையோரின் தன்னம்பிக்கை முழுவதையும் பேச்சின்வழி பெறுவதற்குப் பேச்சாளர் முயல்வது முக்கியம். பேச்சாளரின் பேச்சில் இம்முயற்சி வெளிபடாவிட்டால் பேச்சாளருடைய பேச்சின் மீது அவையோர் எந்தவித நம்பிக்கையும் வைக்க மாட்டார்கள்.

மக்களின் நம்பிக்கையைப் பெறாதவர் பேச்சு மேடைகளில் மட்டுமல்லாமல் வாழ்விலும் எங்கணுமே முன்னேற்றம் ஏற்படப்போவதில்லை. நாவின் வன்மையால் சிலர் மக்களிடம் நற்பெயர் வாங்குதல் உண்டு. ஆனால் அந்த நற்பெயர் நீண்ட நாள் நீடிப்பது இல்லை. அவர்கள் பேச்சு சூழ்ச்சி நிறைந்த பேச்சு என்பது காலப்போக்கில் மக்களுக்குத் தெரிந்து விடும்.

ஆகவே, ஒரு பேச்சாளர் உண்மையான கருத்துகளை மறைக்காமல் உண்மையாகவே வெளிப்படுத்த வேண்டும். அது மட்டுமே ஒரு பேச்சாளருக்குப் பொதுமக்களின் நன் மதிப்பையும் விருப்பையும் உண்டாக்கும் என்பது திண்ணம்.

## 3. சத்திய நெறி

தெய்வ சிந்தனையும் சத்திய நெறியும் ஒரு பேச்சாளர் தம் பேச்சில் வைத்திருந்தார் என்றால் உலகில் நல்மதிப்புகள் என்றும் உண்டு. இப்படிப்பட்டவருக்கு எந்த சூழ்நிலையிலும் எந்த சபையோரையும் தன்னகம் ஈர்க்கும் திறமை இயல்பிலேயே அமைந்திருக்கும். தமிழகத்தில் உள்ள பெரும்பாலான மக்கள் தெய்வ பற்று உடையவர்கள். சில பேச்சாளர்கள் தம் உடை, ஒப்பனை, சமயக்குறியிடுதல் போன்ற செயற்கைகளால் வெளிப்படுத்துவார்கள்.

சில பேச்சாளர் பாதக் குறடுகளையும் மணிவடங்களையும் சடைமுடிவுகளையும் அணிந்து கொண்டு மேடை மீது தோன்றுவர். சில பேச்சாளர்கள் தனக்கென தனித்தன்மையோடு திகழ வேண்டும் என்பதற்காக அவர்களுடைய செயல்கள், சொற்கள், ஆடையணிகலன்களில் சில மாற்றங்கள் செய்திருப்பர். இந்த அடையாளங்களுக்கு நம் நாட்டில் மிகுந்த மரியாதை உண்டு . யாரும் மறுக்க முடியாது உண்மை இது. ஒரு பேச்சாளர் கடவுளுக்குப் பயந்து நடப்பவர் அல்லது சத்திய நெறியிலிருந்தும் வழுவாதவர் எனப் பொதுமக்கள் அறிந்து கொள்ளுமாறு நடந்து கொள்ள வேண்டும்.

ஆன்மீகச் சொற்பொழிவாளர்கள் திருமுருகக் கிருபானந்த வாரியார், புலவர் கீரன், சுகிசிவம் போன்றவர்கள் மக்கள் மத்தியில் நன்மதிப்பைப் பெற்றவர்கள். அவர்களின சீரிய ஒழுக்கங்கள்தாம் அதற்குக் காரணம். சொல்லின் செல்வர் திரு.வி.கலியாணசுந்தரனார் பேச்சில் நம்பிக்கை கொள்ளாதவர்களும் வெறுப்புக் காட்டுபவர்களும் உண்டோ?!

நமது தேசப்பிதா மகாத்மா காந்தி பேச்சு இந்தியாவையே அகிம்சா முறையில் விடுதலைப் போராட்டங்களில் ஈடுபட வைத்தது. அவருக்கு எதிராக ஆங்கிலேய அரசு நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தது. நீதிமன்றத்திற்கு அண்ணார் சென்றபோது நீதிபதி உள்ளிட்ட வழக்கறிஞர்கள் காவல்துறை அதிகாரிகள் அனைவரும் எழுந்து நின்று மரியாதை செலுத்தினார்களாம். அதற்கு காந்தியடிகள் பின்பற்றிய சத்தியநெறி மட்டுமே காரணம்.

திரு.வி.க. தொழிலாளர் நலச் சங்கத் தலைவராகப் பதவி வகித்தார். தொழிலாளர்கள் உரிமைப் போராட்டங்களின் போது திரு.வி.க.வுக்கு தண்டனை வழங்கப்பட்டது. அவர் சத்தியநெறி தவறாத மனிதர் என்பதை உணர்ந்த அரசியலார் தண்டனைக் காலம் வரை அவரை வீட்டுச் சிறையிலேயே இருக்க வைத்தனர். அமெரிக்க அதிபதியான ஆபிரகாம் லிங்கன் பேச்சுகள் சத்தி வசனங்கள் என்றும், நம் நாட்டு கோபாலகிருஷ்ண கோகலே என்ற பெரியார் நமது நாட்டு மக்களின் அறியாமையை அறவே அகற்ற கைக்கொண்ட

உழைப்பும், ஊக்கமும், மேடைப்பேச்சுகளும் சத்தியநெறி பிறழாதனவாம் என்றும் கூறுவர்.

## 4. சொந்த அனுபவம்

பேச்சாளர் பொது மேடையில் பிறருடைய அனுபவங்களையும் தம் சொந்த அனுபவங்களையும் எடுத்து பேசுவது உண்டு. இவர்கள் பேசுவதை எல்லாம் அவையோர் அப்படியே கேட்க வேண்டும் என்பது கட்டாயமில்லை. சபையோரின் சந்தேகக் கேள்விக்கு விடை கூறலாம். அவர் சொந்த அனுபவத்தை சிறிதேனும் அவையோர் முன் எடுத்து சொல்ல வேண்டும்.

வெறும் புத்தகங்களில் உள்ள பல்வேறு அறிஞர் பேச்சுகளை மட்டுமே கொண்டு பேசுவதால் மக்களால் அந்த பேச்சை ஏற்கப்படாமல் போகலாம் அவ்வாறு பேசுவதனால் அவர்களுக்கு சலிப்பை ஏற்படுத்தும்.

தம் வாழ்வில் நடந்த சில சம்பவங்களை பேசும்போது இடையே வரவேற்பை பெறும். பாதிக்கப்பட்ட பேச்சாளர் மீது பரிதாபப்படும் மக்களும் உண்டு பேச்சில் நிபுணர் என்று அவர் கருதப்படுவார்.

## 5.அறிமுகம் செய்தல்

ஒருவர் எந்த நபரால் எந்த விதத்தில் அறிமுகப்படுத்துகிறாரோ அதைப் பொறுத்து அவருக்கு மதிப்பு கிடைக்கும். சபைத்தலைவர் ஒரு பேச்சாளரை தக்க விதத்தில் அறிமுகம்

செய்து வைத்தால் சபை மத்தியில் அவருக்கு மதிப்பு கிடைக்கும் அவருடைய பேச்சு மக்கள் மனம் கவரும்.

தம்மைப் பற்றிய சுய விவரங்களை திறமைகளை குறிப்பு எடுத்து அவைத்தலைவரிடம் கூட்டம் தொடங்குவதற்கு முன்பே கொடுத்து விட வேண்டும் எந்தவித கௌரவமும் யாரும் பார்க்க கூடாது அனுசரையான சபையில் ஆதரவான அவைத்தலைவர் பேசும் மேடைகளை பேச்சாளர் தேர்ந்தெடுக்க வேண்டும். தமக்கு அனுசரணை இல்லாத சபையில் தான் கலந்து கொள்ளாமல் ஒதுங்கி கொள்வது பேச்சாளருக்கு நல்லது.

## 6.மூலம்

பூமி தன்னைத்தானே சுற்றிக்கொண்டு சூரியனையும் சுற்றி வருகிறது அல்லவா? காரணம் இருக்க வேண்டும் அல்லவா? பேச்சாளர் தான் பேச உள்ள அரங்கம், நடைபெறும் விழா, தன் பேச்சைக் கேட்கும் சபையோர் இவற்றையெல்லாம் கருத்தில் கொள்ள வேண்டும். ஓர் இளைஞன் புகைப்படம் உடையவராக இருந்தால் அவனை அடிக்கவோ தண்டிக்கவோ முதலில் முன்வரக்கூடாது. மாறாக, இவனுக்கு இந்த பழக்கம் எப்படி வந்தது? யாரால் வந்தது? என்ற மூலாதாரத்தை விவாதித்து விசாரித்து அறிந்து அவனுடைய கெட்ட சகவாசத்தை களைய முயற்சிக்க வேண்டும்.

அதுபோல பேச்சாளர் தான் பேசும் செய்தியின் கருத்தின் மூலம் புரிந்து கொள்ள வேண்டும். சபையோரின் நோக்கம் உணர்ந்து பேச வேண்டும்.

## 7. சபை உற்சாகம்

சபையோரே உற்சாகப்படுத்துதல் குறித்து இந்நூலில் பிரிதோர் இடத்தில் எழுதியுள்ளோம்.

சபையோரே உற்சாகப்படுத்த ஒவ்வொரு பேச்சாளரும் பழக வேண்டும் தன்னுடைய அனுபவத்தால் இந்த உத்தி பேச்சாளருக்கு கைவரப்பெறும்.

சபையோரையும் அவர்கள் ஊரையும் அவ்வூர் மக்களின் சிறந்த செயல்பாடுகள் குறித்தும் முன்னரே அறிந்து தெரிந்து வைத்திருந்தல் வேண்டும். பின் மேடையில் பேசுவதற்கு அவர்கள் ஊர்களையும் சிறப்பையும் எடுத்துக்கூறி பாராட்டும் போது அவரின் பேச்சு சபையோரே உற்சாகம் அடையவும் செய்யும். அவ்வூர் மக்களின் மனதில் நீங்கா இடமும் பிடிப்பார்.

மேலே கூறப்பட்ட ஏழு செயல்களிலும் ஒவ்வொரு பேச்சாளரும் கவனம் செலுத்தவாரேயானால் அவர் பார் புகழ்ந்த சிறந்த பேச்சாளர் ஆவார்.

## பேசும் வாய்ப்பு

மேடையில் பேசும் வாய்ப்பு எல்லோருக்கும் கிடைப்பதில்லை. ஆரம்பக் காலத்தில் தனக்கான வாய்ப்புகளைப் பேச்சாளராக வேண்டிய எண்ணத்தில் தானே தேடி போக வேண்டும். தன் திறமையைத் தானே வளர்த்துக் கொள்வதன் மூலம் புகழ் பெறலாம். ஒவ்வொரு பேச்சாளரும் தன்னைத்தானே திறனறிந்துக் கொள்ள வேண்டும். எவ்வாறு திறனறிவது என்றால் சில கேள்விகளைத் தனக்குத்தானே கேட்டுக்கொள்ள வேண்டும். அதற்கான விடைகாணும் முறையின் மூலம் ஒருவர் தன் திறனை இனங்காண முடியும். உதாரணத்திற்குச் சில வினாக்களைக் குறிப்பிடலாம்.

1.தனக்கு எந்த துறையில் ஆர்வம் உள்ளது?

2.இயல்பாகக் தன்னெழுச்சிக்காகப் பேச முடியுமா? தூண்டல் தேவையா?

3. தன்னால் சபையில் கூச்சமின்றி, அச்சமின்றி, தயக்கமின்றிப் பேசிவிட முடியுமா?

4. நம் திறமையை வளர்த்துக் கொள்ள வேண்டுமென்றால் நாம் யாரைத் தொடர்புக்கொண்டு உதவிப் பெற வேண்டும்?

5. போதுமான பயிற்சி நமக்கு உள்ளதா?

6. தமிழில் பேசுவதென்றால் தெளிவான உச்சரிப்பு (Pronunciation) ஏற்ற இறக்கத்துடன் (Modulation) பேச நம்மால் முடியுமா ?

7. வாய்ப்பு தருபவருக்கு நமது பேச்சு நல்ல பெயரை வாங்கித் தருமா?

8. எல்லாம் சிறப்பு கூட்டிட்டு இருக்கீங்க நான் நல்ல புதுமா போதுமான அறிவு திறன் உள்ளதா?


9. நமக்குத் தரப்பட்டுள்ள தலைப்பு குறித்து நுண்ணறிவு தனக்கு உள்ளதா?

10. 40நிமிடங்கள் பேச வேண்டுமானால் அதற்கான நினைவாற்றல் நம்மிடம் உள்ளதா?

11. நாம் வானொலியில் தொலைக்காட்சியில் பேசியிருக்கலாம் அதனை மாற்றி அமைக்க முடியும். சபையோர் முன்பு தடுமாற்றம் இன்றி தங்கு தடை இன்றி பேசி விடுவோமா?

12. அனைத்துக்கும் மேலே நமக்கு நம் மீது தன்னம்பிக்கை உள்ளதா?

இது போன்ற வினாக்களை தன்னக்கு தானே எழுப்பி தன்னை முழுமையாக எடை போட வேண்டும்.



## பேசும் வாய்ப்புக்கான காரணிகள்

வாய்ப்பு கிடைக்கலாம் சிபாரிசின் அடிப்படையில் இருக்கலாம். இவருடைய மேடைப்பேச்சைக் கேட்க ஒருவர் அடுத்த கூட்டத்துக்கு இவருடைய திறமையை வைத்து அழைப்பு விடுத்திருக்கலாம். அன்று பேசிய பேச்சு தயாரிப்பு மிக நேர்த்தியாக அமைந்திருக்கலாம். சபையோருடைய உற்சாகப்படுத்தும் விதம் இவரை அன்று நல்லவிதமாகப் பேச வைத்திருக்கலாம். பேசும் வாய்ப்பு ஏற்படப் பல்வேறு காரணிகள் உள்ளன. அவற்றில் குறிப்பாக நாம் ஈண்டு ஐந்து காரணிகளை மட்டும் காணவுள்ளோம். இவற்றைப் பொறுத்து ஒருவர் பேசுவதற்கு வாய்ப்பு கிடைக்கும்.

### (i)பொருண்மை

என்னதான் திறமையானவராக இருந்தாலும் எல்லோருக்கும் எல்லாப் பொருளிலும் பேச முடியாது; எல்லா நேரத்திலும் பேச வாய்க்காது. இன்ன பொருளில்தான் பேசுவேன்! என்ற தன் திறனைத் தாமே அறிந்து வைத்திருக்க வேண்டும். இது பேச்சாளர் கடமை.

1.அரசியல்

2.ஆன்மீகம்

3.வணிகம்

4.கல்விக்கூடங்கள்

5.தொழிற் கூடங்கள்

6.திறனாய்வு

7.இலக்கிய மேடை

8.பட்டிமன்றம், வழக்காடு மன்றம்

9.இலக்கணச் சொற்பொழிவு

10.மருத்துவத்துறை

என்று அவரவருக்கென்று ஏதேனும் ஒரு துறையில்தான் ஆர்வம் இருக்க முடியும். தனக்கான திறமை, தகுதி அடிப்படையில் தான் பேச உள்ள துறை அல்லது பொருள் குறித்து முடிவெடுத்தல் நலம். "ஆன்மிகம் என்றால் அதே துறையில் தன்னை வளர்த்துக்கொண்டு நாடெங்கும் உலகம் எங்கும் புகழ்பெற முடியும்". 'ஆற்றில் ஒரு கால் சேற்றில் ஒருகால்' என்று முடிவு எடுக்கக் கூடாது. அவ்வாறு அழைப்பவர் கூட எல்லாம் சென்று வெவ்வேறு துறையில் பேசினால் பேச்சும் வளர்ச்சி அடையாது. நிலையான புகழையும் பெற முடியாது. காலப்போக்கில் வாய்ப்புகளை இழந்து போக நேரிடும்.

இவ்வாறாக, மேடைப்பேச்சாளராக விரும்புபவர் முதற்காரணியாகத் தான் பேசவுள்ள 'பொருண்மை' எதுவென்று முதலிலேயே தீர்மானிக்க வேண்டும். அவ்வாறு தீர்மானித்து முடிவெடுத்தப்பின் அதில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டு முன்னேற வேண்டும். திறமையை வளர்த்துக் கொள்ள அந்தப் பொருள் தொடர்பான பல்வேறு நூல்களைக் கற்றுத் தெளிய வேண்டும். தன்னைத்தானே மெருகேற்றிக் கொள்வது அவசியம்.

## (ii) இடம்

இரண்டாவது காரணி மேடைப் பேச்சாளர் பேசப்போகும் இடம். இடத்தைத் தீர்மானிப்பது முக்கியம். தான் பேசப்போகும் மேடை அல்லது பேசும் இடம் எத்தகையது என்று அறிந்து வைத்திருக்க வேண்டும்.

"பூடந் தெரியாமல் சாமியாடக் கூடாது" என்று சொல்வார்களே! அதுபோல இடம், பொருள், ஏவலறிந்து பேச்சாளர் நடந்து கொள்வது முக்கியம்.

ஆன்மீகக் கூட்டத்தில் கலந்துக்கொண்டு பேசும் வாய்ப்பு கிடைத்தால் பேச்சாளர் ஆன்மீகவாதி போல நடை, உடை பாவனைகளை மாற்றிக்கொள்ள வேண்டும். அவ்வாறு மாற்றிக்கொண்டால் புறத்தோற்றத்தை வைத்தும் கோவில்களில் பேசுவதற்கும், சமய மாநாடுகளில் கலந்து கொண்டு ஆன்மீகச் சொற்பொழிவாற்றுவதற்கும் வாய்ப்புகள் ஏராளம் வந்து குவியும்.

'ஆள்பாதி ஆடைபாதி' என்று அந்த நாளில் சும்மாவா சொல்லி வைத்தார்கள். வள்ளுவப் பெருந்தகையே கூறியிருக்கிறார். 'காலம் கருதி இடத்தாற் செயின்' என்று. திருமுருகன் கிருபானந்தவாரியார் சுவாமிகளைப் பார்க்கும்போதே பொதுமக்களுக்கே கையெடுத்துக் கும்பிட வேண்டும் போலத் தோன்றுமல்லவா? பேசும் இடத்திற்கேற்பப் புறவயமாதலைப் போலப் படிப்படியாக அகவயமாதலும் முக்கியம். தான் தேர்ந்தெடுத்த துறை (field) யை முடிவு செய்து விட்டால் அதில் காலூன்றி நிலைத்து நின்று புகழின் உச்சிக்குப் போக அரும் பாடு பட வேண்டும்.

பேசும் இடம் கல்வி நிறுவனமா? தொழிற்சாலையா? வானொலியா? தொலைக்காட்சியா? பட்டிமன்றமா? வழக்காடு மன்றமா? விளையாட்டு விழாவா? அரசியல் களமா? ஆன்மீக விழாவா? பேசுகின்ற உரை வாழ்த்துரையா?

தலைமையுரையா? நன்றியுரையா? என்பதையும் உணர்ந்து கொண்டு பேச்சாளர் தன் பணியைச் செவ்வனே நிறைவேற்றலாம்.

இடத்துக்கேற்பக் தன் பாணியை மாற்றிக் கொண்டு தகவமைய வேண்டியது அவசியம். இடமறிந்து இச்சூழலறிந்து பேசும் பேச்சாளர் எளிதில் வெற்றி பெறுவார்.

### (iii) காலம்

வள்ளுவர் காலமறிதல் என்ற ஒரு தனி அதிகாரமே வகுத்துள்ளார். என்னதான் ஒருவர் திறமைசாலியாக இருந்தாலும் நூற்றுக்கணக்கான நூல்களைக் கற்றுத் துறை போனவராயிருந்தாலும் காலமறிந்து செயல்படாவிட்டால் அந்தப்பேச்சு விழலுக்கு இறைத்த நீராகிவிடும்.

பேசுகின்ற காலம், பொழுது எத்தகையது? யாருக்குப் பிறகு? யாருக்கு முன்னால் பேசப்போகிறோம்? நிகழ்வு தொடங்கியபோதா அல்லது முடிவடையும் காலத்திலா? எப்போது நம் உரை இடம் பெறும்? என்ற கால அறிவு பேச்சாளருக்கு இருக்க வேண்டும்.

தனக்கு தரப்படும் வாய்ப்பு எந்த காலத்தில் தரப்பட்டுள்ளது?! அதனை அறிந்து உணர்ந்து அதற்கேற்பத் தன் பேச்சைச் சுருக்கவோ விரிக்கவோ செய்யலாம்.

முக்கியப் பிரமுகர் காலமானபோது மயானத்தில் இரங்கல் கூட்டம் போடப்படும். இரங்கள் தெரிவித்துப் பேசும்போது கூட சில பரம்பரை பேச்சாளர் கால அறிவு இல்லாமல் இஷ்டத்துக்குப் பேசுவதைக் காணலாம். "மைக் இல்லாமலே இப்படிப்

பேசுறார். மைக் கொடுத்தால் இந்த ஆளு விடமாட்டார் போல " என்று சுற்றியிருப்போர் கேலி செய்வார்கள்.

கூட்டம் எதுவாக இருந்தாலும் சரி காலங்கடந்து நடக்கிறதென்று பேச்சாளருக்குத் தெரிகிறதென்றால் பேச்சைச் சுருக்கி கொள்ளுதல் நலம். இல்லையென்றால் சபையோர் தங்களுடைய அலுவல் நிமித்தமாக எழுந்து செல்லத் தொடங்கி விடுவார்கள். பேச்சாளர் பேசிக்கொண்டு இருக்கும்போது சபையோர் இடையில் எழுந்து செல்வது பேச்சாளருக்குக் கேவலமாகப் போய்விடும். கிடைத்த வாய்ப்பு இவ்வாறு அவையோர் எழுத்து செல்வதால் பறிபோய்விடகூடும்.


காரைக்குடி கம்பன் கழகம் சார்பில் வருடந்தோறும் கம்பன் விழா நடைபெறும். விழாவுக்குச் சிறப்பு விருந்தினர்கள் வருவார்கள். குறித்த நேரத்தில் வந்து கலந்து கொள்ள வேண்டும் என்பதில் கம்பன் கழகப் பொறுப்பாளர் திரு. கணேசன் கண்டிப்புடன் இருப்பார். இந்த விழாவில் பேச வாய்ப்பு கிடைப்பது அரிது. ஒருமுறை கவிஞர் கண்ணதாசனை அழைத்திருந்தார்.

எந்த விழாவென்றாலும் கண்ணதாசன் சற்று தாமதமாகவே செல்வார் என்பது உலகமறிந்த விஷயம். ஆனால், கம்பன் கழகம் கணேசனார் கால நேரம் தவறாமை குறித்து அறிந்திருந்த கண்ணதாசன் பேசவுள்ள நேரத்துக்கு 15 நிமிடம் முன்னதாகவே வந்துவிட்டாராம். மேடையில் பேசும்போது "எனக்கு மிகவும் பிடித்த மதங்கள் நான்கு. இந்து, கிறிஸ்தவம், இசுலாம், மற்றொன்று தாமதம்" என்று கண்ணதாசன் குறிப்பிட்டதாகச் சொல்லப்படுவதுண்டு.

காலத்தைச் சரியாகப் பயன்படுத்தக் தெரிந்தால் பேச்சாளருக்கு வாய்ப்புகள் பெருகும்.

## (iv) சூழல் (Situation)

காலத்திற்கேற்ற சூழலைப் பயன்படுத்துதல் முக்கியம். சூழல் என்பது




சூழலுக்கேற்ப மனிதன் தன்னைத் தகவமைத்துக் கொள்வான். அவனே வெற்றி பெறுவான். அறிவியலில் Survival of the fittest theory என்ற ஒரு கோட்பாடு உண்டு. சூழலுக்கேற்பத் தகவமைதல் என்பது இதன் பொருள்.

பேசுவதற்கு மேடை கிடைத்துவிட்டது என்பதற்காக சபையோர் குறிப்பறியாமல் பேசிக்கொண்டே இருக்கலாகாது. காலச்சூழலுக்கு ஏற்ப வாய்ப்பை பயன்படுத்திப் பேச

வேண்டும். பேசும் வாய்ப்பை தக்க வைத்துக் கொள்ள சமயோசித புத்தியுடன் பேச்சாளர் நடந்துக் கொள்ளலாம்.

## (V) உடன் பேசுவோர்

பேச்சாளருக்கு வாய்ப்பு கிடைக்கும்போது தான் யாருடன் பேசப்போகிறோம் என்று அவதானிக்க வேண்டும். உடன் பேசுவோரை அனுசரித்து நாம் முன்பு, பின்பு பேசினால் தொடர்ந்து பேச வாய்ப்பு கிடைக்கும். தொடக்க நிலையில் கறாராக நாம் இருக்கக்கூடாது.

மற்றவர்களிடம் இறங்கிப் பேசிப் பழகுதல் சகஜமாக நடந்து கொள்ளுதல் அவசியம். அந்தக் குணம் பேச்சாளரை உயரத்துக்கு இட்டுச் செல்லும் உபாயமாகும்.

உடன் பேசுவோர் குறித்த அருமை பெருமைகளை முன்னரே அறிந்து தெரிந்து கொண்டு சபையோர் முன் எடுத்துச் சொன்னால் சபையோரும் அறிந்து கைத்தட்டி உற்சாகப்படுத்துவார்கள். மூத்த பேச்சாளரும் மகிழ்ச்சி அடைவார். அதுதான் சூழலுக்கு ஏற்ப தகவமைத்தல்.

பேசும் வாய்ப்பு கிடைக்கும் போது, தனக்குப் பிடிக்காத ஒரு நபர் மேடையில் பேச வந்திருக்கலாம். அவரை மேடை நாகரிகம் கருதி வணங்கி வரவேற்றுப் பேசலாம். ஒரு வார்த்தை கூட அவரை அவமானப்படுத்தும் விதத்திலோ, மரியாதைக் குறைவாகவோ குறிப்பிடக்கூடாது! அதே வேளையில் தன்னுடன் பேச வந்தவர் தனக்குப் பிடிக்காதவர் என்று பிறரிடம் காட்டிக் கொள்ளவும் வேண்டாம். அவர் பெயரைக் குறிப்பிட மறந்து விடக்கூடாது. மற்றவர்களின் பெயரைச் சொல்ல மறந்தாலும் தனக்குப் பிடிக்காதவராகக்

கருதப்படுபவரைக் குறிப்பிடாமல் இருப்பது பேச்சாளரின் வளர்ச்சிக்கு இடையூறாக அமைந்த விடும். மாறாக, இவ்வாறு குறிப்பிடும் போது அவர் மூலம் பேச்சாளருக்குப் புதிய வாய்ப்பு கிடைக்க வழியுண்டு. எல்லோருக்கும் பேச்சாளராக வேண்டும் என்ற எண்ணமும் வருவதில்லை.

வாய்ப்புகள் வந்து எப்போது கதவைத் தட்டும் பேச்சாளன் என்றில்லை, எந்தத் துறையைச் சார்ந்தவராக இருந்தாலும் தான் சார்ந்த துறையில் ஆழங்கால் பட்டு திறமையை வளர்த்துக் கொள்ள வேண்டும். திறமையானவர் என்ற பெயர் பெற்ற பிறகு அவரைத்தேடி பல்வேறு வழியில் அழைப்பு வரும்.

சிலர் தொடக்க காலங்களில் வாய்ப்பு தேடி அலைகின்றனர். சிலருக்கு அந்த யோகம் வாய்ப்பது இல்லை. வாய்ப்பு கிடைத்தவர்கள் உழைக்கின்றனர். தொடர்ந்து ஈடுபடுகின்றனர். பேசிப்பேசி அவருக்கான தகுதி, திறமையின் அடிப்படையில் பிரபலம் அடைகிறார்கள். மக்கள் மத்தியில் வரவேற்பைப் பெறுகின்றனர்.

மேடைகளைத் தீர்மானிக்கும் கூட்டங்களில் மேடையில் பேசுவதற்கு இவர்களைத்தான் அழைக்க வேண்டும் என்று பேசி முடிவெடுக்கின்றனர்.

பேசுபவர் இன்னாராகத்தான் இருக்க வேண்டும் என்று கூட்டத்தில் தீர்மானம் எடுக்கின்றனர். சில பிரபலமான பேச்சாளருக்காக அவருடைய தேதி கிடைக்கும் வரை விழாவைத் தள்ளி வைக்கின்றனர்.

ஆக பேச்சாளருக்கு வாய்ப்பு என்பது கிடைக்கத் தொடங்கும் வரைதான். வரத் தொடங்கிய பிறகு அவரை அழைத்துவர பலர் காத்து இருப்பார்கள். மேடையில்

பேச்சாளர் பேசக் தேர்ந்தெடுக்கும் பொருண்மை, பேசும் இடம், பேசுகின்ற காலம், பேசும் சூழல், உடன் பேசுவோர் ஆகிய காரணிகள் முக்கிய இடம் வைக்கின்றன. இவற்றையெல்லாம் கணக்கிட்டு ஒருவர் பேச்சாளராகி விட்டால் அவருடைய ஆயுளுக்கும், அவருக்கென்று மக்கள் மத்தியில் தனி இடம் இருக்கத்தான் செய்யும். இருமுருக கிருபானந்த வாரியார், சுகிசிவம், நெல்லைக் கண்ணன் போன்றவர்களை உதாரணமாகச் சொல்லலாம்.

1. பேச்சாளருக்கு ஏற்படும் பிரச்சனைகள் யாது?
2. பேச்சும் அதன் மொழிக்கூறுகளும் குறித்து ஆய்க.
3. பேச்சு வகைகள் - விளக்குக.
4. பேச்சின் இடையே செய்ய தகாத செயல்கள் யாது?
5. பேச்சாளர்க்குறிய ஏழு வகை செயல்கள் என்னென்ன?
6. பேசும் வாய்ப்பு எவருக்கு அமையும்?
7. பேச்சாளர் பின்பற்ற வேண்டிய கடமைகள் யாது ?
8. மேடைப் பேச்சாளரின் சொல்லாக்கங்கள் குறித்து எழுதுக .
9. பேச்சாளரின் மேடைப் பேச்சும் அவனின் மனநிலையும் குறித்து எழுதுக.
10. பேச்சாளன் கடைபிடிக்க வேண்டிய மொழிக்கூறுகள் யாது?

# அலகு - 4

## பேச்சுமேலாண்மை

ஒவ்வொரு தொழிலுக்கும் மேலாளர் ஒருவர் செயல்படுவார் மேலாளர் செய்யும் பணியே மேலாண்மை எனப்படும். நம்முடைய பேச்சுக்களை மேடைப்பேச்சுகலை என்பது ஒரு செயல்முறை. இந்தச் செயலை மேற்கொள்வதற்கு மேலாண்மை திறன் என்பது அவசியம். பேச்சாளர் ஒவ்வொருவரும் தன் பேச்சை மேலாண்மை செய்பவராக இருக்க வேண்டும்.

வணிக மேலாண்மையைப் போலவே பேச்சு மேலாண்மையும் ஒரு தனித்துறைதான். ஒரு மேடைப் பேச்சாளர் மட்டும் பேச்சாளர் அல்ல.பேசும் அனைவருமே பேச்சாளர் தான். மனிதர்கள் அனைவரும் இதில் அடக்கம். "பேசியே காரியத்தை முடித்து விடுவானப்பா". “பேச்சிலே இவன் கில்லாடி" "நைசா பேச்சு வாக்குல சொல்லி விட்டாயே?!" "வாழைப்பழத்துல ஊசியை நுழைக்கிற மாதிரி பேசுவோம்பா." "வாய் இல்லன்னா நாய் கூட ஒப்பாது". "வாய் பேச மட்டும் தான் லாய்க்கு காரியத்துல ஒன்றும் கிடையாது". என்றெல்லாம் சிலர் பெயர் வாங்குவதுண்டு.

"பேச்சைக் குறைப்போம் பெருக்குவோம் உழைப்பை" என்ற வாசகத்தை தொழிற்கூடங்களில் எழுதிப் போட்டிருப்பார்கள்.

" அரசியல் பேசாதீர்கள்" என்று டீக்கடை ஓட்டல்களில் எழுதிப் போட்டு இருப்பார்கள்.

"வாயாலயே வடை சுட்டு விடுவாம்பா" என்பது நெல்லை வட்டார வழக்கு.

இவ்வாறு மனிதர்கள் பேசுவதைக் குறித்து மக்களிடையே பேச்சு வழக்காறுகள் இன்றும் வழக்கில்உள்ளன.

'வாய்' என்பது ஐம்புலன்களில் ஒன்று. வாயால் பேசி கெட்ட காரியமும் உண்டு. பேசாமல் கெட்ட காரியங்களும் உண்டு. பேசி வெற்றி பெற விஷயங்களும், பேசாமல் வெற்றி பெற தருணங்களும் வாழ்வினில் நிகழலாம்.

பேச்சை ஓர் ஆயுதமாக பயன்படுத்துவர்களும் பேசிய தன் நேரத்தையும் பிறருடைய நேரத்தையும் வீணடிப்பவர்களும் நம்மில் நிறைய பேர் உளர்.

" அளவறிந்து வாழாதான் வாழ்க்கை உளபோல
இல்லாகிகத் தோன்றாக் கெடும்"


திருக்குறள்479

எதையும் அளவோடு வைத்துக் கொண்டால் நல்லது அளவறிந்து வாழாதவன் வாழ்க்கை இருப்பது போல தோன்றினாலும் இல்லாமலும் ஆகிக்கேட்டு போகும் என்று வள்ளுவப் பெருந்தகை அன்றே கூறியுள்ளார்.

## பேச்சுமேலாண்மை

இத்தகைய பேச்சை யார் யார் எவ்வாறு மேலாண்மை செய்ய வேண்டும்? மேடைப் பேச்சாளர் தவிர யார் யார் பேச்சைக் கொண்டு பெரும்

பணியாற்றுகின்றார்கள்?என்பதையும் காணப் புகுவோம். மேடைப் பேச்சாளர் மட்டும்தான் பேச்சை நம்பி உள்ளாரா? இல்லை.





பேச்சு மேலாளர்களை மேற்கண்டவாறு மூன்று வகைகளாகவும் பிரித்துக் கொள்ளலாம்.

1.விளம்பரப்பிரதிநிதிகள்

2.விற்பனைப்பிரதிநிதிகள்

3.விற்பனைமுகவர்கள்

இவர்கள் மூவகையினரும் பேசியே காரியம் சாதிப்பதில் முக்கியப் பங்கு வகிக்கிறார்கள்.




அரசு,தனியார்நிறுவனங்களாகஇருந்தாலும்

1.விற்பனைநிறுவனம்

2.விளம்பரநிறுவனம்

என்றுஇரண்டாகபகுக்கலாம்.

விற்பனை செய்ய வேண்டிய பொருள் குறித்த உண்மையான தகவல்கள் அதனை பயன்படுத்தும் விதம் குறித்து மக்கள் அல்லது நுகர்வோர் மத்தியில் விளம்பரம் செய்ய வேண்டும் நிறைந்த உலகத்தில் விளம்பரம் இன்றி எதுவும் நடக்காது என்ற நிலையே இன்றுஉள்ளது.

நடிகர்கள், நடிகைகள், கிரிக்கெட், பிரபலங்கள் கொண்டு விளம்பர படம் எடுத்து வசனங்களை எழுதி நுகர்வோரை வாங்க தூண்டும் அளவிற்கு கவர்ச்சியாக விளம்பரம் தயாரிக்கப்படும் அதனை மக்கள் மத்தியில் கொண்டு சேர்த்து விற்பனையை பெருக்கும் வேலையை பிரதிநிதிகள் செய்து வருகிறார்கள்.

"கரிஇல்லை;உப்புஇல்லை"

என்று விளம்பரம் செய்த நிறுவனங்களே

"டூத்பேஸ்ட்லஉப்புஇருக்கு"

என்று காலம் மாற்றத்திற்கு ஏற்ப விளம்பரம் செய்கிறது.

## சந்தைப்படுத்துதல்(Marketing)

தயாரிப்பு பண்டங்களை மக்கள் பயன்பாட்டுக்கு கொண்டு சேர்க்கும் விதத்தில்

சந்தைப் படுத்துதல் நடைபெறுகிறது. இந்த நேரத்தில்

1.விற்பனைபிரதிநிதிகள்

2.விளம்பரபிரதிநிதிகள்

இருவகையினரும் விற்பனை முகவர்களுக்கு தேவைப்படுகிறார்கள். விற்பனை முகவர்கள் நேரடியாக பொருளை சந்தைப்படுத்துதல் இயலாத காரியம் மேற்சொன்ன இரண்டு வகையான பிரதிநிதிகளை வைத்து தான் நுகர்வோரை சென்றடைய முடியும் இவர்களுக்கு முக்கிய ஆயுதமாக பயன்படும் உத்தி "பேச்சுக்கலை."

விற்பனை செய்வதற்கு நேரடியாக நுகர்வோரை அணுகுதல் ஒரு முறை வீட்டுக்கு வீடு விற்பனை பொருளை எடுத்துச் சென்று மக்களிடம் எடுத்துக் கூறி விற்பனை செய்வது இவ்வகை.


" வந்து அலைகிறார்களே!பாவம்! இவர்களுக்காக வேண்டி ஏதாவது வாங்குவோம் என்ற எண்ணத்தை மக்கள் மனதில் தூண்டும் விதத்தில் பேசுவார்கள். அவர்களின் பேச்சுத் திறமையைக் கொண்டு பொருள் விற்பனை பெருகவும் வாய்ப்பு உண்டு.

## விற்பனைபிரதிநிதிகள்

விற்பனை முகவர்கள் பயன்படுத்துவதுவிளம்பர பிரதிநிதிகளைத்தான்(Advertisement Representatives). நான் கல்லூரியில் எம்.ஏ.,எம்.ஃபில்.,டிஜிடி., முடித்து பி.எச்.டி என்ற முனைவர் பட்ட நிறைவு செய்து வேலை தேடிய காலத்தில் எனக்கு முதலில் கிடைத்த வேலை விளம்பர பிரதிநிதி வேலைதான்.

Advertisement Agencies

↓




தனியார் நிறுவனத்தில் வேலைக்குச் செல்வது கரண்ட் ஷாக் அடிப்பதும் ஒன்றுதான். ஷாக் அடித்ததும் உயிரை உறிஞ்சி விட்டு உடலைச் சக்கையாக கீழே போடும். அதுபோல நம் உழைப்பை இரத்தமாகவும், வியர்வையாகவும் சுரண்டி விட்டுச் சக்கையாக விடுவார்கள்.

1993இல் தனியார் பத்திரிக்கையில் மாதம் 700 ரூபாய் சம்பளத்தில் வேலைக்குச் சேர்ந்தேன். மாதந்தோறும் அந்த பத்திரிக்கைக்குஅலைந்து திரிந்து ஆயிரக்கணக்கான ரூபாய்க்கு விளம்பரம் வாங்கிக் கொடுப்பேன். அதில் எந்த கமிஷனும் நமக்குக் கிடையாது.அதுபோல இளைஞர்கள் பலரை வேலை தருவதாக அழைத்து விற்பனையைப் பெருக்கும் விதத்தில் விளம்பரம் செய்ய பிரதிநிதியாகப் பயன்படுத்துவார்கள். பேச்சு வன்மை அந்தத் தொழிலுக்கு முக்கியமாகத் தேவை.

" பொய்மையும் வாய்மையிடத்த; புரைதீர்ந்த

நன்மைபயக்கும்மெனின்"

-குறள்292

என்ற குறளுக்கேற்ப சில, பல பொய்களைச் சொல்லி விளம்பரம் சேகரிப்போம்.

விளம்பரம் செய்வதற்கு பத்திரிக்கை தொலைக்காட்சி வானொலி போன்ற நிறுவனங்களுக்கு விளம்பரம் வாங்குவதற்கும் பேச்சு திறமை வேண்டும்.

ஆக மேடைப் பேச்சாளர் மட்டுமல்ல விற்பனை பிரதிநிதிகளும் விளம்பர பிரதிநிதிகளும் பேச்சு மேலாண்மை உள்ளவர்களாக இருந்தால்தான் தொழிலை சிறப்பாக செய்ய முடியும் என்பதையும் நினைவிற்கொள்ள வேண்டும். இன்னும் கொஞ்சம் சிறப்பாகச் சொல்ல வேண்டுமானால் பேச்சு மேலாண்மை என்பதை பேச்சு வேளாண்மை என்று கூட சொன்னால் பொருத்தமாக இருக்கும். பேச்சு மேலாண்மையில் தொழில் பயிர்கள் பெருகுகின்றன. தொழில் அதிபர்கள் உண்டு கொடுக்கின்றனர். மக்கள் கண்டு களிக்கின்றனர்.

## இலக்கியத்தில் சொல்லின் செல்வன்

பொதுவாக சிலர் பேசினால் சபையோர் கேட்டுக் கொண்டே இருப்பார்கள். சிலர் வாயைத் திறந்தாலே எப்போது இடத்தை காலி பண்ணலாம் என்று எண்ணத்தோடு வழி செய்து விடுவார்கள்.

"சிலர் சொல்லின் செல்வர் என்று நினைப்பது போல இல்லை. இவர் 'சொல்லின் ' மக்கள் செல்வர்" என்று வாரியார் கேலி பேசுவார். கம்பராமாயணத்தில் 'சொல்லின் செல்வன்' என்று அனுமனைக் குறிப்பிடுவார்கள். சீதையை 'கற்பின் கனலி ' என்று கூறும் கம்பர் அனுமனை இராமன் வாயிலாக 'சொல்லின் செல்வன் ' என்று குறிப்பிடுவார்.

இராம இலக்குவர் இருசியமுக - பர்வதம் நோக்கி வருகின்றனர். அவர்களைப் பற்றி அறிய அனுமன் வருகிறான். இராமன் " நீ யார் ?" என்று வினவ,

"..................

கஞ்சம் ஒத்து அலர்ந்த செய்ய கண்ண !யான் காற்றின் வேந்தர்க்கு

அஞ்சனையின் வயிற்றில் வந்தேன்; நாமமும் அனுமன் என்பேன்"

( அனுமப்படலம் 17)

"சொல்லின் செல்வன் " என்ற தன் கட்டுரையில் பேராசிரியர் முனைவர் க. நஞ்சையன் பின்வரும் கருத்துக்களைத் தருகிறார். அதனை மேற்கோளாக இந்நூலின் சுருக்கமாகத் தருகிறேன்.

## அனுமனின் பேச்சாற்றல்

இராமகாதை முழுவதும் அனுமன் பேசும் காட்சிகளில் அவருடைய சொல்லாட்சி புலப்படுகிறது. இராமனைப் பார்த்த அனுமன், "தேவ நும் வரவு" என்று கூறுவதில் இருந்து அவனது பணிவு தெரிகிறது.

பேச்சு என்பது அருமையானது. இந்தப் பேச்சுத்திறன் கற்ற அறிவாலும் கேள்வியறிவாலும் ஏற்படும். அனுமன் இவற்றில் சிறந்து விளங்குகிறான். அனுமனின் பேச்சாற்றலை பேச்சாற்றலை பேராசிரியர் நஞ்சையன் பின்வருமாறு பகுக்கிறார்.

1. அன்பாகப் பேசுதல்

2. நிதானமாகப் பேசுதல்

3. இனிமையாகப் பேசுதல்

4. ஆழமுடையதாகச் சிந்தித்துப் பேசுதல்

5. சமயமறிந்து பேசுதல்

6. சபையறிந்து பேசுதல்

7. தன் கருத்தை வலியுறுத்திப் பேசுதல்

8. இரு பொருட்படப் பேசுதல்

9. குறிப்பால் உரைத்தல்

10. வகைப்படுத்திக் கூறும் திறன்

## 1.அன்பாக பேசுதல்

பொதுவாக நமக்கு நன்கு தெரிந்தவர்களிடம் அன்பாகப் பேசுவோம். தெரியாதவர்களிடம் அன்பு காட்ட யோசிப்போம். ஆனால் அனுமன் அனைவரிடமும் அன்புள்ளத்தோடு பேசுகிறான். இலங்கை நோக்கி அனுமன் செல்லும்போது வழியில் வந்த மைந்தாகமலை அனுமனிடம் தன்னிடத்தே இளைப்பாறிச் செல்லுமாறு வேண்டுகிறது. அதற்கு அனுமன் சமாதானமாகப் பதில் கூறுவது அன்பைப் புலப்படுத்துகிறது.

"பெருந்தேன் பொழிசாரணி னன்பு பிணித்த போதே

இருந்தே னுகர்ந்தேனி தினூங்னி யீவதுண்டே "

(கடறாவுப் படலம் 59)

## 2. நிதானமாகப் பேசுதல்

எதிராளி கோபப்படும் போது நாம் நம் நிதானத்தை இழந்து விடுவோம் அதுதான் உண்மை. ஆனால் அனுமன் அவ்வாறு இல்லை. சீதையைத் தேடி அனுமன் இலங்கை வந்த போது இலங்காதேவி "நில்லாய் நில்லாய் " என்று கூறித் தடுக்கிறார். "இவ்வூர் நலம் காண வந்தேன் " என்கிறான். அவன் தைரியத்தைக் கண்டு இளங்காதேவி கோபமாக,

"நான் போ என்று சொல்லியும் போகாமல் எதிர் மாற்றம் சொன்ன நீ யாரடா?" என்று கோபாவேசமாகப் பேசுகிறாள்.

அனுமனோ நிதானம் தவறாமல் சிரித்துக் கொண்டு" இந்த ஊரினுள் போகாமல் செல்ல மாட்டேன்" என்கிறான். தன்னைத் தகாத வார்த்தைகள் பேசிய போதும் நிதானமாகப் பதில் கூறும் அனுமனின் பேச்சாற்றலைக் கம்பன் நமக்குத் தருகிறான்.

## 3. இனிமையாகப் பேசுதல்

அசோகவனத்தில் சீதை இராமனை எண்ணிப் பலவாறு புலம்பியவண்ணம் இருக்கிறாள். சீதை முன் அனுமன் தோன்றி,' தான் அஞ்சனை சிங்கம். இராமபிரான்

அனுப்பிய தூதுவன் நான்' என்று இனிமையாகக் தன்னைப் பற்றின் தானே அறிமுகம் செய்து கொள்கிறான்.

ஒரு மாதத்திற்குள் இராமபிரான் வராவிட்டால் தான் உயிர் விடுதல் திண்ணம் என்று சீதை கோபமாகக் கூறுகிறாள். இவ்வாறு கோபமாகப் பேசுபவரிடம் அவர் போக்கில் பேசிச் சமாதானப்படுத்தி அன்பாகப் பேசுவது நல்ல மாண்பு. இத்தகைய மாண்புடையவனாக அனுமன் படைக்கப்பட்டுள்ளான் .

" தங்களை சிறை வைத்து அரக்கன் உயிர் வாழ்வானாம். வில் வீரர்களான இராமா இலக்குவர்கள் ஒன்றும் செய்யாமல் அயோத்திக்குத் திரும்பிப் போய் விடுவார்களாம்". என்று அனுமன் வேடிக்கையாகப் பேசுகிறான்.

## 4. ஆழமுடையதாகச் சிந்தித்துப் பேசுதல்

" சொல்லுக சொல்லிற் பயனுடைய" என்ற குறட்பாவுக்கு ஏற்ப அனுமன் வாயிலிருந்து வருகின்ற சொற்கள் பயனுள்ள சொற்களே. வெற்றுச்சொற்கள் அனுமனிடம் எள்ளளவும் இல்லை.

அரக்கர்களை இராமன் அடியோடு அழித்து விடுவான் என்ற சிந்தனையை ஆழமாகச் சிந்தித்து அனுமன் பேசுவதாக அமைத்துள்ளார்.

. " பேய்களும் பறவைக் கூட்டமும் அரக்கர்களின் இரத்த வெள்ளமாகிய கடலில் மூழ்கி அரைக்கியரது கண்ணீர்ப் பெருக்காகிய நதியில் நீராடுவதை பாருங்கள். அரக்கர்களின்

பிணங்களால் கடல் தூர்ந்து விடுவதையும் இலங்கை வெந்து உருகுவதியும் காணுங்கள்......... கணக்கற்ற அரக்கர்களின் உயிர்களைக் கொண்டு செல்ல முடியாமல் சோர்வடைந்து நின்று பெருமூச்சு விடுவதையும் பாருங்கள்" என்று இனிய மொழி பேசிய," இராமன் விரைவில் உங்களைக் காண வருவார். அமைதியாக இருங்கள்" என்று சொல்லின் செல்வன் பேசுகிறான்.

**விபீடணன் அடைக்கலம்**

விபீடணனை இராமனுடன் சேர்க்க பலரும் எதிர்ப்பு தெரிவிக்கின்றனர். ஆனால், அனுமனோ" தூதாகச் சென்ற என்னை ' இவனைக் கொல்லுங்கள்" என்று இராவணன் அரக்கர்களுக்குக் கட்டளை இட்டபோது' தூதாக வந்தவனைக் கொல்லக்கூடாது' என்று தடுத்தவன் இவனே, இவனைச் சேர்த்துக் கொள்வதில் தவறில்லை" என்று கூறுகிறான்.

## 5. சமயம் அறிந்து பேசுதல்

பேசும் சமயம் என்ன? சரிதானா? என்று ஆலோசித்துப் பேசினால் பேச்சு ஏனையோரைக் கவரும் என்பதில் ஐயமில்லை.

" ஆறு துயரஞ்சொல்லின வஞ்சி அடியேன்தோள்

ஏறுகடி சென்று தொழு தின்னடி பணிந்தான்"

( 5:6;10)

என் தோள்களில் ஏறுங்கள். தங்கள் துயர் இன்றோடு தீர்ந்தது. எதிர்க்கும் அரக்கர்களைக் கொன்று குவிப்பேன். தங்கள் நிலைமையைப் பார்த்தபிறகு வெறுங்கையோடு இராமபிரானிடம் திரும்ப மாட்டேன்" என்கிறான் அனுமன்.

## 6. சபை அறிந்து பேசுதல்

இராவணன் சபையில் அனுமன் சபை அறிந்து பேசுகிறான்.

" அவையறிந் தாராய்ந்து சொல்லுக சொல்லின்
தொகையறிந்த தூய்மை யவர்".

(குறள்- 711)

எனும் வள்ளுவரின் வாய்மொழிக்கு ஏற்ப அனுமன் அளவறிந்து பேசுகிறான்.

இந்திரசித்து தன் பிரம்மாத்திரத்தால் அனுமனைக் கட்டி இராவணன் முன்பு நிறுத்துகிறான். இராவணன் கோபத்துடன் " சிவனா ? திருமாலா ?இந்திரனா ? அல்லது ஆதிசேடனா ?" என்றெல்லாம் கேட்கிறான்.

"நீ சொன்ன யாருமல்லன். அந்த அற்ப பலம் கொண்டவர்களுக்கு நான் அடிமை செய்யவில்லை . மும்மூர்த்திகளுள் ஒரு அவதாரமான இராமன் என்ற வில் வீரனின் தூதன் நான் " என்று வீரத்தோடும் விவேகத்தோடும் அனுமன் அவையறிந்து பேசுகிறார் .

## 7. தன் கருத்தை வலியுறுத்தப் பேசுதல்

" இராமன் வரமாட்டார் " என்று சீதை விரத்தியுடன் பேசுகிறாள் . இதற்கு பதில் உரைத்த அனுமனோ

" இங்கு மாபெரும் வானர சேனை வந்து சேரும் பொழுது அதன் நடுவில் இராமரை என் புயத்தின் மீது இலக்குவரை அங்கதன் புயத்தின் மீதும் பாருங்கள் . துன்பத்தின் காரணமாகக் கொள்ளும் சந்தேகத்தை விட்டொழியுங்கள். தாங்கள் குறித்த நாளுக்குள் வந்து தங்களை இராமர் மீட்கவில்லை என்றால் அந்தப் பழியும் பாவமும் பற்றுவதற்கு அவர் இராவணன் அல்லவே ?! இராமர் அல்லவா? என்று சொல்லின் செல்வன் தன் கருத்தைச் சீதாதேவியிடம் வலியுறுத்திப் பேசுகிறான்.

## 8. இரு பொருள்படப் பேசுதல்

அனுமன் சீதை உரையாடும்போது ," சீதா தேவியே நீங்கள் இங்கு இருப்பதை இராமபிரான் அறிந்திலர். அறிந்திருந்தால் வந்திருப்பார் . அவர் வரின் அரக்கர்கள் அழிந்திருப்பர்.

1. முன்பு தன் அரசினைப் பரதனுக்கு நல்கினான்

2. அண்மையில் வாலியிடமிருந்து அரசை வாங்கி தம்பி சுக்ரீவனுக்கு அளித்தான் என்ற இரு பொருள்பட

" பின்ன வற்கரசு நல்கித் துணையெனப் பிடித்தான் ....."

என்ற வரியில் காணலாம்.

## 9. குறிப்பால் உணர்த்தல்

இராமனிடம் வந்து தான் சீதையைக் கண்ட செய்தியை அனுமன் கூறுமிடத்தில் குறிப்பால் உணர்த்தும் செயல் புலனாகிறது.

" கண்டெனன் கற்பினுக் கணியைக் கண்களால் "

(3:15:58)

இராமனுடைய ஆவலை உணர்ந்த அனுமன் கண்டேன் ! கற்பினுக்கு அணியை ! என் கண்களால் ! என்று கூறுவதிலிருந்து தன்னம்பிக்கையுடன் கூடிய வார்த்தைகள் குறிப்பால் உணர்த்துவிதமாகப் பேசப்படுவதைக் காணலாம்.

## 10. வகைப்படுத்திக் கூறும் திறன்

ரிஷிய முகத்துக்கு இராமன் வந்த வரலாற்றைக் கூறுவதிலும் இராமனிடம் இலங்கையில் சீதையைக் கண்ட விதத்தைக் கூறும் மொழிகளிலும் காண்கிறோம்.

சீதை இராமனைப் பற்றி அனுமனிடம் கேட்கும் போது வகை பிரித்துப் பேசுகிறான். சீதையின் பிரிவால் ராமன் கோதாவரியையும் மலையையும் மான்களையும் பார்த்துப் புலம்பியது போன்ற நிகழ்வுகளை அனுமன் வகை பிரித்துக் கூறுவதாக அமைந்துள்ளது.

"தாங்கள் கூறிய அடையாளங்களைக் கூறி, கணையாழியையும் கொடுத்தேன் . அதை வாங்கி ஆயிரம் கலசங்களின் அளவுக்குத் தன் தண்ணீரால் நீராட்டுவித்து எதுவும் சொல்லாமல் பெருமூச்சு விட்டார். தாங்கள் இருக்கும் இடம் தெரியாமல்தான் இராமபிரான் வரவில்லை. தெரிந்தால் வந்திருப்பார் என்று கூறினேன். இன்னும் ஒரு மாதத்திற்குள் தாங்கள் சென்று அவரை மீட்கத் தவறினால் உயிரை விட்டு விடப் போவதாக கூறினாள். தனது சூடாமணியையும் எடுத்து அடையாளமாக என்னிடம் கொடுத்தனுப்பினார். இதோ பாருங்கள்" என்று சொல்லுகிறான் அனுமன்.

ஆக, இராமகாதையில் 'சொல்லின் செல்வன்' அனுமன் அன்பாக, நிதானமாக அவையறிந்து, குறிப்பறிந்து, பேசுவதில் வல்லவனாகத் திகழ்கிறான் என்பதற்குச் சான்றுகள் கண்டோம். இதுபோன்ற பாங்கில் பேசிப்பழகினால் பேச்சாளர் ஒவ்வொருவரும் தம் துறையில் வெற்றி பெறலாம் என்பது திண்ணம்.

## அறிஞர் அண்ணா

இலண்டன் மாநகரில் நடைபெற்ற கூட்டத்தில் அறிஞர் அண்ணா கலந்து கொள்ளச் சென்றார். ' Complete " , ' Finished " என்ற இரண்டு சொற்களுக்கும் வித்தியாசம் என்ன? என்று கேட்டார்களாம். கூட்டத்தில் ஒரு பகுதியினர் இரண்டுக்கும் வித்தியாசம் இல்லை என்று கூறினார்கள்.

அறிஞர் அண்ணா கூறியதாவது:- " நீங்கள் ஒரு சரியான பெண்ணைத் திருமணம் செய்தால் உங்கள் வாழ்க்கை ' Complete '. அதுவே , நீங்கள் ஒரு தவறான பெண்ணை திருமணம் செய்தீர்களானால் உங்கள் வாழ்க்கை Finished என்றாராம்.

அதுவே அந்த ஒரு சரியான பெண் உங்களை ஒரு தவறான பெண்ணுடன் கையும் களவுமாக பிடித்து விட்டால் உங்கள் வாழ்க்கை 'Complete , Finished ' .

இந்த விளக்கத்தைக் கேட்டு ரசித்த கூட்டத்தினர் எழுந்து நின்று 5 நிமிடங்கள் கைதட்டினாராம்.

Because

ஒருமுறை அறிஞர் அண்ணாவிடம் ஒரே வார்த்தையை ஒரு வாக்கியத்தில் மூன்று முறை தொடர்ந்து பயன்படுத்த முடியுமா? என்ற சவாலுக்கு விடையாக அவர் பேசியது: " No Sentence can end with because. Because because is conjunction.

1945 ஆம் ஆண்டு அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் புரட்சிக்கவிஞர் பாவேந்தர் பாரதிதாசன் படத்திறப்பு விழாவின் பேசியது !

"அது இருக்க இது ஏன் என்று மேல்நாடுகளிலே கருதி இருப்பார்களானால் ஆளில்லா விமானத்திற்கு பிறகு அணுகுண்டு கண்டுபிடித்திருக்க முடியுமா? தொல்காப்பியம் நமக்கு இருக்கும்போது நமக்கு வேறென்ன வேண்டும் என்றிருந்தால் அகமும் சிலப்பதிகாரமும் கிடைத்திருக்க வழியுண்டா? சிலப்பதிகாரமே போதும் என்றிருந்தால் கலிங்கத்துப்பரணி கிடைத்திருக்குமா? கலிங்கத்துப்பரணியே போதுமென்றிருந்தால் பாரதியாரின் தேசிய கீதங்களைக் கேட்டிருக்க முடியுமா ?பாரதியாரின் தேசிய கீதங்களே போதுமென்றருந்தால் தேசிய விநாயகம் பிள்ளையின் தாயினுமினிய அன்பு குழைத்தூட்டும் பாக்களைப் பார்த்திருக்க முடியுமா? முடியாது. தேசிய விநாயகம் பிள்ளையே போதுமென்றிருந்தால் நாமக்கல்லாரின் "கத்தியின்றி இரத்தமின்றி யுத்தமொன்று வருகுது" என்ற புது மாதிரியான சண்டை தத்துவ பாடலை கேட்டிருக்க முடியுமா ? அது போலத்தான் நாமக்கல்லாரே போதுமென்றிருந்தால் "கொலை வாளினை எடடா ! மிக கொடியோர் செயல் அறவே" என்ற பாரதிதாசனின் உணர்ச்சிமிக்க புரட்சிகரமான பாடலைக் கேட்டிருக்க முடியாது " என்று அறிஞர் அண்ணா தான் எழுதியிருந்த 'ஏ ! தாழ்ந்த தமிழகமே !' என்ற நூலில் பதிவு செய்திருப்பார் . இந்தச் சொற்பொழிவிலிருந்து அண்ணாவுடைய தமிழ் மொழி பரந்துபட்ட தமிழ் அறியை உய்த்துணர முடியும்.

## கலைவாணர்

கலைவாணர் என்.எஸ். கிருஷ்ணன் ரசிகர்கள் புடைசூழ உரையாடிக் கொண்டிருந்தார்.

"மதுரைக்கு சென்றிருந்தேன். அங்கே வைகையில் கழுத்தளவு தண்ணீர் இருந்து இருந்ததுங்கோ" என்றாராம்.

இரசிகர்கள் திகைப்புடன் "என்னங்க கதை விடுறீங்களா? வைகையிலாவது கழுத்தளவு தண்ணீராவது?" என்று கேட்டார்களாம்.

கலைவாணர் தனக்கே உரிய பாணியில் "கழுத்தளவு தண்ணீர் உண்மைதானுங்கோ. ஆனால், தலைகீழா நிக்கனுங்கோ" என்று கூற ரசிகர்கள் குலுங்கி குலுங்கிச் சிரித்தனர் .

நகைச்சுவையில் சமூக சீர்திருத்தக் கருத்துகளை நுழைத்து சினிமா ரசிகர்களைச் சிரிக்க வைத்ததோடு சிந்திக்கவும் வைத்தவர்.

' சிந்திக்கத் தெரிந்த மனித குலத்துக்குச் சொந்தமானது சிரிப்பு' என்ற பாடல் ஒன்றே இவரது நகைச்சுவை கலந்த சமூகச் சிந்தனைக்கு எடுத்துக்காட்டாகும்.

## திரு.வி.க

திரு.வி.க ஒரு தலைசிறந்த மேடைப் பேச்சாளர் . மடை திறந்த வெள்ளமென உணர்ச்சியும் எழுச்சியும் எழுப்பும் கருத்தாழமுள்ள பல உரைகளை நிகழ்த்துபவர். கட்டிப்

போடுகின்ற பேச்சாற்றல் கொண்டவர். கேட்பாரை பிணிக்கும் தன்மையுடன் கேளாறையும் கேட்க விரும்ப வைக்கும் வகையினதாய் மாற்றாரையும் மயக்கி தன்வசம் ஈர்க்கும் வண்ணம் அமைந்தவை அவரது மேடைப்பேச்சுகள் .

புதிய உரைநடையின் தந்தை, மேடைப்பேச்சின் தந்தை எனப் போற்றப்பட்டவர்.

தமிழ் தென்றல், பேச்சுப்புயல் எனப் பலவாறு போற்றப்பட்டவர்.

பூக்களிலே சிறந்த பூ என்று திரு.வி.க அவர்கள் பருத்திப் பூவைக் கூறினார். ஏனென்றால் மற்ற பூக்கள் எல்லாம் பூத்து மலராகி உதிர்ந்து விடும். ஆனால் பருத்திப் பூவோ பூத்து மலராகி, பஞ்சாகி, நூலாகி, துணியாகி, ஆடையாகி மனிதனின் மானம் காத்து நிற்கும் என்றார்.

## அறிஞர் கி.வா.ஜகந்நாதன்

தமிழில் சிலேடையாகப் பேசுவதில் வல்லவர் கி.வா.ஜகந்நாதன் . இதற்கு நிறைய உதாரணங்கள் கூறலாம்.

கி.வா.ஜகந்நாதன் தாயார் வீட்டில் அவருக்கு முந்திய நாள் இரவு செய்த உப்புமாவைத் தந்து சாப்பிடச் சொல்லி இருக்கிறார் என்று அடம் பிடித்து இருக்கிறார். இவரோ வேண்டவே வேண்டாம் என்று அடம் பிடித்து இருக்கிறார்.

"உனக்கு உப்புமா தொண்டையில் குத்துகிறதோ?!" என்று தாயார் கேட்க ,

"ஆமாம் குத்துகிறது; ஊசியிருக்கிறது" என்றாராம். உப்புமா கெட்டுப் போய் விட்டது என்பது ஒரு பொருள். வழக்காற்றில் நாம் ஊசிப்போய் விட்டது என்றுதான் சொல்வோம். இது இரட்டுற மொழிதலாகும். இதுபோல சிலேடை பேசுவதில் கி.வா.ஜ வல்லவர்.

ஒரு ஊருக்கு கி.வா.ஜ பேசச் சென்றார். அவருக்கு சிற்றுண்டி செய்தவர்,

" தங்களுக்குப் பூரி பிடிக்குமா?" என்று கேட்டார் .

அதற்கு இவர் "ஜகந்நாதனுக்குப் பூரி பிடிக்காமல் இருக்குமா?" என்று பதில் சொல்ல அனைவருமே சிரித்தனராம்.

ஒரு கல்யாண வீட்டில் சாப்பிட்டு முடித்துக் கை கழுவ வந்தார் கி.வா.ஜ. ஒரு அன்பர் செம்புத் தண்ணீர் கொடுத்து கை கழுவத் தந்தார்.

"சாதாரணமாக நீரில்தான் குவளை இருக்கும். இங்கே குவளையில் நீர்!" என்றாராம்.

'இம்மை - மறுமை என்ற தலைப்பில் பேச கி.வா.ஜ. அழைக்கப்பட்டிருந்தார். அவர் பேச ஆரம்பித்ததும் மைக் கோளாறாகி விட்டது.

அதை அகற்றிவிட்டு வேறு மைக் வைத்தார்கள். அதுவும் கொஞ்ச நேரத்தில் சரியாகச் செயல்படாமல் போனதாம்.

கி.வா.ஜ. "இம்மைக்கும் சரியில்லை; அம்மைக்கும் சரியில்லை" என்று அவர் பேச அந்த தலைப்பு கேட்பான் பேச வந்த தலைப்புக்கேற்ப பேசவே சபையோர் சிரித்துச் சிரித்தனர்.

தொடர்ந்து கூட்டங்களில் பேச சென்றார் கி.வா.ஜ. தொண்டையில் சளி பிடித்தது. இருமல் வந்தது விழாக் குழுவினர் அவருக்கு Cough Syrup வாங்கிக் கொண்டு வந்து தந்தனராம். "இதைத்தான் கற்றோருக்குச் சென்ற இடமெல்லாம் Syrup என்கிறார்களோ?!.

கிருபானந்தவாரியார் கலந்து கொண்ட விழாவில் கி.வா.ஜ. சுவாமிகளுக்கு பொன்னாடை போர்த்தியதும் " நூல் தந்த வாரியாருக்கு பதிப்பாளர் ஆடை தருகிறார் "

என்றார் . சிரித்தனர் அடுத்து இறைவணக்கம் பாடிய சிறுமிக்கு கி.வா.ஜ.,பேனா பரிசளித்தார். " நாவால் பாடிய சிறுமியைக் கி.வா.ஜ. தன் பே'னா'வால் கௌரவிக்கிறார்". என்று வாரியார் சிலேடையாகப் பேச அரங்கமே சிரித்தது.

ஒரு கடை முதலாளி வீட்டு விருந்தில் கி.வா.ஜ. கலந்து கொண்டார். கடையில் வேலை பார்க்கும் ஒரு பையன் மட்டும் இல்லாததைக் கண்டு கி.வா.ஜ. முதலாளியிடம் அவனைப் பற்றி விசாரித்தார் .

"அவன் கடையைப் பூட்டி விட்டு வந்து அடுத்த பகுதியில் கலந்து கொள்வான்" என்று பதிலுரைத்தார்.

" ஓஹோ! கடை சிப்பந்திக்குக் கடைசிப் பந்தியா?" என்று கேட்டாராம் கி.வா.ஜ.

ஒரு நண்பரின் வீட்டுக்கு கி.வா.ஜ. போயிருந்தார். நண்பரின் மனைவி விளாம்பழத்தில் வெல்லம் போட்டுப் பிசைந்து அன்போடு கொண்டு வந்து உபசரித்தார்.

அதை வாங்கி உண்ட கி.வா.ஜ. "மாதுளங்கனி" அருமை என்று பாராட்டினார்.

"மாதுளம்கனியா ! நான் தந்தது விளாம்பழம் அல்லவோ ?" என்று அந்த அம்மையார் குழப்பத்துடன் கேட்டார்.

"மாது உளம் கனிந்து கொடுத்த கனி என்று சொன்னேன்" என்றார் கி.வா.ஜ.

கி.வா.ஜ. அவருடைய பாணியிலேயே சிலேடையில் மடக்கும் ஒரு பெண் உண்டாம்.

கி.வா.ஜ.வை ஒரு நாள் கூட்டத்துக்குப் பேச அழைத்தார்.

" இன்னிக்கு வேண்டாமே ! தொண்டை கம்மியிருக்கு " .

அந்தப் பெண்ணோ, "பரவாயில்லை கம்மல் பிரகாசிக்கவே செய்யும்" என்று பதிலுரைத்தார்.

ஒருமுறை அவருக்குப் போர்த்திய பொன்னாடை கிழிந்து இருந்தது. அதற்கு அவர் கொடுத்த கமெண்ட் "இந்தப் பொன்னாடையில் பூ இருக்கிறது, பழம் இருக்கிறது, பிஞ்சும் இருக்கிறது" என்றாராம்.

## திருமுருக கிருபானந்த வாரியார்

ஆன்மீக சொற்பொழிவுக்காகவே தன் வாழ்நாளை அர்ப்பணித்த திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகள் நகைச்சுவை ததும்பப் பேசுவதில் வல்லவர். துணுக்குகள், கதைகள், நடைமுறை நிகழ்வுகள் என்ற நிலைகளில் நகைச்சுவை உருவாக்குவார்.

பெரும்பாலும் வாரியார் பொழிவின்போது சிறுவர்களைப் பார்த்துக் கேள்வி கேட்பார். சரியான பதில் கூறுபவர்களுக்கு புத்தகங்களை பரிசாக கொடுப்பது வழக்கம்.

ஒருமுறை நாகமலை புதுக்கோட்டைக்கு அவர் வந்திருந்த போது, குழந்தைகளை நோக்கி "இந்த கூட்டத்திலேயே அவரவர் வீட்டில் கடைசிக் குழந்தை யார்? கையை தூக்குங்கள்" என்று கேட்டார். ஒரு பையன் எழுந்து நின்று,

“நான் தான் எங்கள் வீட்டில் கடைசிக் குழந்தை "என்றான். மகிழ்ச்சி...... மகிழ்ச்சி என்றபடி உங்களைப் பார்த்து இவன் தான் கடைசிக் குழந்தை என்று அப்பா அம்மா அல்லவா சொல்ல வேண்டும்" என்றார். கூட்டத்தினர் ரசித்துச் சிரித்தனர் அந்த குழந்தைக்கு ஒரு சிறு புத்தகம் பரிசாக கொடுத்த உட்கார வைத்தார்.

மற்றொரு நிகழ்வைச் சொல்வார்கள். ஒரு சமயம் சிறுவர்கள் அமர்ந்திருந்த திசையை நோக்கியவர் "முருகப்பெருமானின் தந்தை பெயர் என்ன?" என்று குழந்தைகளிடம் வாரியார் கேட்டார்.

"சிவாஜி" என்று கூறிவிட்டான் ஒரு சிறுவன். திருவிளையாடல் திரைப்படம் வந்த புதிது என்பதால் அச்சிறுவனின் மனதில் சிவபெருமான் வேடமேற்று நடித்த சிவாஜிகணேசன் ஆழப்பதிந்திருந்தார். சிறுவனின் பதிலைக் கேட்டு மக்கள் சிரித்தனர். உடனே மக்களைப் பார்த்து ஏன் சிரிக்கிறீர்கள்?

"அவன் சொன்னதில் தவறில்லை. முருகனின் அப்பா பெயர் சிவன். சிவா என்றும் கூறலாம்.

பெரியவர்களான காந்தி, நேரு, மாதா, பிதா போன்றவர்களை காந்திஜி, நேருஜி, மாதாஜி, பிதாஜி என்று சொல்வது போல , சிவனையும் இந்தச் சிறுவன் மரியாதையுடன் சிவாஜி என்று கூறிவிட்டான்" என்று சிலேடையாகப் பதிலளித்தார். குழந்தையை தன் அருகே அழைத்துப் பரிசைக் கொடுத்து தட்டிக் கொடுத்தார். அப்போது எழுந்த கைதட்டலில் அரங்கமே அதிர்ந்தது.

## கவிப்பேரரசு வைரமுத்து

பேச்சுத்திறமை உள்ளவர்களுக்கு எழுத்துத் திறமை இருக்காது. எழுதும் திறமை உள்ள எழுத்தாளர் பலருக்கு பேசும் திறமை இருக்காது.

எழுத்துக் திறனும் பேச்சுத் திறனும் வாய்த்தவர்களை விரல்விட்டு எண்ணிவிடலாம். அறிஞர் அண்ணா, வலம்புரிஜான், நெடுஞ்செழியன், கவிப்பேரரசு வைரமுத்து.

28. 12 .2013 இல் கவிஞர் வைரமுத்து ஒரு பேச்சாளர் எப்போது பேசலாம்? என்பது குறித்து மேடையில் பேசியதாவது.

"எத்தனை மணித்துளிகள் பேசலாம் என்பதைத் தீர்மானிப்பவன் நானல்ல; வடிவமைக்கிற ஒரு விழாதான்; அரங்கத்தில் நிகழும் எதிர்பார்ப்புதான்; எனக்கு முன்னால் பேசியவர்களின் பேச்சின் அதிர்வலைதான்; ஒரு பேச்சாளர் பேசும் நேரத்தைத் தீர்மானிக்கும் என்று நம்புகிறான் நான்" என்று பேசக் தொடங்குகிறார்.

மேலும் அவர் பேசும்போது, "ஒரு மேடை என்பதால் வடிவமைக்கப்படுகிறது என்பதைப் புரிந்து கொள்பவனல்ல உழைப்பவன் அல்ல பேச்சாளன், பேசும்போது ஒரு மனிதனின் தொனியில் தெரியும். தொண்டையிலிருந்து பேசுகிறானா? நாவிலிருந்து பேசுகிறானா? என்று அவர் பேசுவதிலிருந்து எனக்குத் தொனிக்கிறது . இந்த மனிதன் இதயத்திலிருந்து பேசுகிறான் என்பது. "அந்த அன்பு நெகிழ வைக்கிறது" என்று பேசினார்.

ஆறுமுறை தேசிய விருதும், கலைமாமணி, பத்மபூஷன், கவிப்பேரரசு, காப்பியப் பேரறிஞர், காப்பிய சாம்ராட் எனப் பல்வேறு பட்டங்கள் பெற்றவர்.

தன் இளமைப் பருவத்தில் அண்ணாவின் இனிமையான தமிழ் நடையாலும் பெரியாரின் சிந்தனையாலும், கலைஞரின் இலக்கியத் தமிழாலும், பாரதி, பாரதிதாசன், கண்ணதாசன் ஆகியோரின் கவிதை நடையாலும் பெரிதும் ஈர்க்கப்பட்டு 12 ஆவது வயதிலேயே கவிதை எழுதத் தொடங்கியதாகக் கூறுகிறார்.

எம் .ஏ . 2ஆம் ஆண்டு படிக்கும் போது அவர் எழுதிய "வைகறை மேகங்கள்" என்ற நூல் சென்னை பெண்கள் கிறித்தவக் கல்லூரியில் பாடமாக வைக்கப்பட்டது.

இவர் கவிஞர் மட்டுமல்ல சிறந்த எழுத்தாளரும், நூலாசிரியரும் ,பேச்சாளரும் .

1978 ஆம் ஆண்டு முதல் இன்று வரை திரைப்படப் பாடல்களும், நூல்களும் எழுதி வருபவர்.

## பேராசிரியர் கு. ஞானசம்பந்தன்

மதுரையைச் சேர்ந்த பேராசிரியர் கு. ஞானசம்பந்தன் தியாகராஜர் கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராக இருந்தார். அவருக்கு இயல்பிலேயே நகைச்சுவை உணர்வு அதிகம் உண்டு. பணிபுரியும் காலத்திலேயே பட்டிமன்றங்கள், வழக்காடு மன்றங்களில் பேசுபவர். மதுரை நகைச்சுவை மன்றத்தில் இவருடைய பேச்சு அடிக்கடி இடம் பெறும். நடிகர் கமலஹாசன், கவிஞர் வைரமுத்து மற்றும் பல வி.ஐ.பி.களுடன் நெருக்கமானவர். சினிமாவில் நடிக்கும் அளவுக்கு இவருக்கு இவருடைய நகைச்சுவைப் பேச்சு கை கொடுத்தது என்றால் மிகையாகாது.

தொடர்ந்து எளிய உதாரணங்களாக வாழ்வில் அன்றாடம் நடைபெறும் நிகழ்ச்சிகளை எடுத்துச் சொல்லிச் சிரிக்க வைப்பார். அடுக்கடுக்கான நிகழ்ச்சிகளைக் கூறி தொடர்ந்து சிரிக்க வைக்கவும் செய்வார். இப்பவே செய்ய வைக்கவும் செய்வார். சிலவற்றை அவர் கூறக் கேட்டால்தான் புரியும். சிலவற்றை எழுதலாம். உதாரணமாக,

"ஒரு கோடீஸ்வரர் தன் கணக்குகளை எழுத ஆடிட்டார் ஆடிட்டர் தேவை என்று பேப்பரில் விளம்பரம் செய்கிறார். ஐம்பது போ வந்து . இன்டர்வியூ வைக்கப்படுகிறது. 54 இலட்சத்தையும் 84 இலட்சத்தையும் , பெருக்கினால் எவ்வளவு வரும்?" என்று கேள்வி கேட்கிறாங்க . உடனே ஆளாளுக்கு கால்குலேட்டர் எடுத்து கணக்கு போடச் துவங்கி விட்டார்கள். ஒருவர் மட்டும் "உங்களுக்கு எவ்வளவு வர வேண்டும்?" என்று கேட்கிறார். அவரைப் பார்த்து you are அப்பாயிண்டடு" என்று தேர்வு செய்து விடுகிறார்கள். இதுமாதிரி புத்திசாலித்தனமாகக் கணக்கு எழுதக் தெரிந்தவர்கள்தான்தான் அந்த கோடீஸ்வரருக்குச் தேவை.

கல்லூரியில் வகுப்பு எடுக்கும் போது மாணவர்கள் கேள்வி கேட்பார்கள். சில நேரங்களில் எசகுபிசகான கேள்விகளும் வரும். சாமர்த்தியமாகப் பதில் சொல்ல வேண்டும். என் நண்பர் ஒருவர் அழகாகச் சமாளிப்பார். சில வாத்தியாருக்குக் கோபம் வரும். ஆனால் இவர் கோபப்பட மாட்டார். கேள்வி கேட்பவனைப் புகழ்ந்து பாராட்டத் தொடங்கி விடுவார்.

"நான் நெனைச்சேன்பா..... இப்படி புத்திசாலித்தனமாகக் கேள்வி கேட்க உனக்குத்தானப்பா தெரியும் ?! "You ask good question! sitdown " என்று பேசி அவனை உட்கார வைத்து விடுவார்.

## விடுதலை வேள்வியில் கவிக்குயில் சரோஜினி தேவி வீரப்பிரசங்கம்

காந்தியடிகளின் அறப்போராட்ட நெறிகள் சரோஜினி தேவிக்கு மிகவும் பிடித்திருந்தன. 1916 - ஆம் ஆண்டு லக்னோவில் காங்கிரஸ் கூட்டம் நடந்தது. அக்கூட்டத்தில் சரோஜினி தேவி ஆற்றிய உரையைக் கேட்டு, காந்தியடிகளே வியந்து போனாராம். கவிக்குயிலும் நேருவும் அங்குதான் அதிகமாக அறிமுகமானார்களாம்.

"இந்தியர்களின் கைகளில் ஆயுதம் இருக்கக்கூடாது என்ற அரசின் சட்டத்தைக் கடுமையாக எதிர்த்துப் பேசினார் சரோஜினிதேவி அரைமணி நேரம் உணர்ச்சி கொந்தளிக்க ஆங்கிலத்தில் அவருடைய உரை இழந்தது. அந்தக் கூட்டத்திற்கு ஆளுநர் சர்.ஜேம்ஸ் மெஸ்டன் தன் மனைவியுடன் வந்திருந்தார். தேவியின் பேச்சைக் கேட்டு வியந்து ஆளுநர் தம்பதி தம் விருந்தினர் மாளிகைக்கு அழைத்துச் சென்று விருந்து உபசரித்துப் பாராட்டி மகிழ்ந்தார். இவருடைய உரை இளைஞர்கள் உள்ளங்களில் நாட்டுப் பற்றித் தூண்டிவிட்டது.

1. பேச்சு மேலாண்மை குறித்து எழுதுக.

2. இலக்கியத்தில் சொல்லின் செல்வன் யார்?

3. அறிஞர் அண்ணா மேடைப்பேச்சு குறித்து எழுதுக.

4. கலைவாணரின் மேடை தமிழ் விளக்குக.

5. அறிஞர் கி.வா. ஜெகநாதன் அவரின் மேடைப்பேச்சு குறித்து விளக்குக.

6. திரு முருக கிருபானந்த வாரியார் மேடைப் பேச்சில் உரையாற்றியமைக் குறித்து எழுதுக.

7. கவிப்பேரரசு வைரமுத்துவின் மேடைப்பேச்சு குறித்து விளக்குக.

8. கு. ஞானசம்பந்தன் அவரின் மேடைப்பேச்சு உரை விளக்குக.

9. கவிக்குயில் சரோஜினி தேவி அம்மையாரின் மேடை உரை குறித்து விளக்குக.

10. திரு.வி.கா அவர்களின் மேடை சொற்பொழிவு எவ்வாறு அமையும்?

# அலகு-5

## ஜவஹர்லால் நேரு உரை

அகில இந்திய காங்கிரஸ் கட்சியின் பொதுச்செயலாளராக நேருவை மகாத்மா காந்தியே ஒரு மாநாட்டில் முன்மொழிந்தார். பெரும்பாலும் உணர்ச்சிவசப்படாமலும் கட்சிக்குள் இருந்த மனக்கசப்புகளைக் களைந்தும் ஒற்றுமை ஓங்கிட ஓயாது உழைத்தார் .

சுதந்திரப் போராட்டக் காலத்தில் மன உறுதி, சமாதான முறையில் சமரச அடிப்படையில் எதிரொலிகளையும் தன்வசம் ஈர்த்து இழுக்கும் வன்மையும் எளிமையான போக்கும் நேருவிடம் அமைந்திருந்தது.

1927 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் நடந்த காங்கிரஸ் மாநாட்டில் தலைவர் நேருவின் பேச்சு அனைவருடைய கவனத்தையும் ஈர்த்தது.

" இந்தியாவும் அதன் நட்பு நாடுகளும் சேர்ந்து ஐரோப்பாவின் காலனி ஆதிக்கத்திற்கு முடிவு கட்டும் நாள் நெருங்கிவிட்டது. சுதந்திரத்தைப் பெற்ற பின் இந்திய மக்கள் நாட்டில் நல்ல ஜனநாயக நெறிமுறைகளை அமுல்படுத்தி தேசியப் பாதையை வகுத்துக் கொள்ள வேண்டும். ஏழ்மை, சாதிபேதங்கள் மக்களிடமிருந்து அகற்றப்பட வேண்டும். அடிமைகளாகவும் கோழைகளாகவும் வாழ்வதைக் காட்டிலும் வன்முறை வரவேற்கத்தக்கதே" என்று நேரு உரையாற்றினார்.

காந்தி உப்புச் சத்தியாகிரகத்துக்கு தண்டி யாத்திரை போனபோது "உப்பு சத்தியாகிரகம் மட்டுமல்ல; ஆங்கிலேயர் பிறப்பிக்கும் எல்லா உத்தரவுகளையும் பகிஷ்கரிக்க வேண்டும்" என்று பிரச்சாரம் செய்தார் நேரு.

சுதந்திரப் போராட்டத்தில் நாடு முழுவதும் சுற்றுப்பயணம் செய்து நேரு உரையாற்றிய காரணத்திற்காக மீண்டும் மீண்டும் சிறைக் தண்டனைகள் பெற்றவர். இவருடைய உரை மக்களைச் சுதந்திரப் போராட்டத்திற்குத் தூண்டியதாக ஆங்கிலேய அரசு நேருவைக் தண்டித்தது.

## ஆன்மீகப் பேச்சாளர் சுகிசிவம்

இரண்டாயிரத்துக்குப் பிறகு சுகிசி வம் பெயர் அதிக அளவில் பிரபலம் ஆனது. ஆன்மீகச் சொற்பொழிவு மட்டுமல்லாமல் ஜனரஞ்சகமான பேச்சிலும் அவர் வல்லவர். 'சொல்வேந்தர்' என அழைக்கப்படுவர் .

ஒருமுறை கால்நடை மருத்துவர்கள் கல்லூரி விடுதி விழாவுக்கு எம்.ஆர். ராதாவை சிறப்பு விருந்தினராகப் பேச அழைத்து இருந்தார்கள். இரண்டு மாடி ஏறி வந்த களைப்பில் மூச்சு வாங்கியபடி சீட்டில் உட்கார்ந்தார். மாணவர்கள் சப்தமிட்டபடி 'நடிகவேள் பேசு ! நடிகவேள் பேசு ! என்று . அப்போது அவர் எழுந்து மைக்கில்,

" டேய் நீங்கள்லாம் மாடுகளுக்கு வைத்தியம் படிக்கிற பசங்கதானடா ?!

" ஆமா ஆமா ."

" அப்படினா கொஞ்சம் நாஞ்சொல்றதை கேளுங்க.

வயதான காலத்தில் இரண்டு மாடி ஏறி வந்து உட்கார்ந்து இருக்கேன்.

எப்படிடா உடனே பேச முடியும்?!"

நான் மனுஷன் சொல்றேன் கேக்க மாட்டேங்கிறீங்களே! ?". ஆனால் பாவம் வாயில்லா ஜீவன் . அதுகளுக்கு எதுவும் சொல்லத் தெரியாது. நீங்க எப்படி புரிஞ்சுகிட்டு வைத்தியம் பார்க்கப் போறீங்களோ ?!" என்று சமயோசிதமாக பேசி மாணவர்களை அமைதிப்படுத்தினாராம்.

மற்றொரு முறை நடிகவேள் எம் . ஆர். இராதா நாடகம் போட சபாவுக்கு வருகிறார். இவருடைய ஒரே நாடகம் தினமும் மீண்டும் மீண்டும் போடுவார்களாம். தினம் நடந்தாலும் வசனங்களை மாற்றி மாற்றிப் பேசுவாராம். மக்கள் ஆர்வமுடன் கேட்க வருவார்கள் - கூட்டம் அலைமோதியது.

ஆறு மணிக்கு காரில் வந்து இறங்குகிறார் நாடகத்தைப் போடு ! நாடகத்தைப் போடு " என்று கூட்டம் கூக்குரலிடுகிறது. காரிலிருந்து இறங்கிய ராதா தன் கையில்

அவருடைய நாயை அழைத்துப் போவது வழக்கம். நேராக மேடையில் ஏறி மைக் அருகில் செல்கிறார். கையில் இரண்டு பிஸ்கெட் எடுத்துக்கொண்டு தன் தாயை பார்த்துப் பேசுவது போல ஜாடையாக கூட்டத்தை பார்த்துப் பேசுகிறார் .

"இதோ பாரு குலைக்காதே. நான் போடுவேன்னு நினைத்தாயோ. போடமாட்டேன் ஆறரைக்குதான் போடுவேன் " என்று சாடை பேசினாராம்.

இதுபோல நாட்டு நடப்பு செய்திகளைக் தன் சுவையான சொற்பொழிவுகளில் கலந்து பேசுவார் சுகிசிவம்.

### வார்த்தைச் சித்தர் வலம்புரிஜான்

1946 இல் நெல்லை மாவட்டம் உவரி என்ற ஊரில் பிறந்தவர். 12 ஆண்டுகளாகத் தாய் பத்திரிகை நடத்தி வந்தவர். எதுகை மோனையுடன் வார்த்தைகளை அடுக்கிப் பேசுவதில் இவர் தனி ரகம். 2001 இல் இவர் பேசிய பேச்சு வலைத்தளக் காணொளியில் உள்ளது.

இவருடைய ஆங்கில மொழிப்புலமை அளப்பரியது. போப் இரண்டாம் ஜான்பால், ஜெகசீவன்ராம், அன்னை தெரசா, ஜெயப்பிரகாசம் ஆகியோருக்கு மேடைப்பேச்சின் போது மொழி பெயர்ப்பாளராக இருந்துள்ளார் என்பதிலிருந்து இவருடைய மொழி வல்லமை புலப்படும்.

உதாரணத்திற்கு ஒரு சில கூறலாம். ஒருமுறை இவர் பேசும்போது இவருடைய தொண்டை சரியில்லை. ஏற்கனவே 64 கூட்டங்களில் பேசி வந்து விட்டார். மைக்கைப்

பிடித்ததும் ....... "அனைவருக்கும் வணக்கம் என்னுடைய தொண்டை ஒத்துழையாமை இயக்கம் நடத்தினால் கூட தமிழுக்கு ஆற்றும் தொண்டை நிறுத்தக்கூடாது என்று 65 வது கூட்டத்தில் பேச வந்திருக்கிறேன் " என்று ' தொண்டை ' என்ற வார்த்தையை வைத்து இரு பொருள்படப் பேசி வார்த்தை விளையாட்டு விளையாடினார் இவர்.

இவர் எல்லோரையும் மனம் திறந்து பாராட்டும் குணமுடையவர். ஏனென்றால், இவருடைய சின்ன வயதில் தன்னைப் பாராட்ட ஆளில்லையே என்ற மனக்குறை உந்தவே தன் மொழிப்புலமையையும் பேச்சாற்றலையும் தானாகவே வளர்த்துக் கொண்டவர்.

1985இல் தூய சவேரியர் கல்லூரி ஆண்டு விழாவுக்கு சிறப்பு விருந்தினராக அழைக்கப்பட்டிருந்தார். வந்து கலந்து கொண்டு கல்லூரி ஆண்டு மலரை வெளியிட்டுச் சிறப்புரை ஆற்றினார். இவர் இக்கல்லூரியின் பழைய மாணவர். ஆண்டு மலரில் வெளிவந்த " கவிஞர் பார்வையில் அன்றும் இன்றும் " என்ற எனது கட்டுரையைப் பாராட்டி அடுத்த வாரம் இவர் நடத்தும் ' தாய் ' வார இதழில் இரண்டு வரிகள் எழுதியிருந்தார். இவருடைய அணிந்துரை இருந்தால் நூல்கள் அதிகம் விற்பனை ஆகும்.

" எப்போதும் வருவதில்லை கவிதை. எப்போதோ வருவதே கவிதை. நினைத்தால் வருவதல்ல கவிதை. இதயம் கனத்தால் வருவது கவிதை" என்று இவர் கவிதை உருவாவது குறித்து விளக்குவார்.

## வீரத்துறவி விவேகானந்தர்

வீரத்துறவி விவேகானந்தர் பெயரைக் கேட்டதும் "சகோதர சகோதரிகளே!" என்று அமெரிக்காவில் பேசினார் என்பதுதான் எல்லோருக்கும் நினைவு வரும்.

உலகப் புகழ்பெற்ற சிகாகோ மாநாடு. சிகாகோ நகரில் நடக்க உள்ளது. சிகாகோ செல்வதற்கு முன் விவேகானந்தர் ஆற்றிய சொற்பொழிவுகள் 11, செப்டம்பர் 11 ஆம் நாள் 1893 இல் விவேகானந்தர் சிகாகோ மகாசபைக் கூட்டத்தில் பேசுகிறார்.

"அமெரிக்க சகோதர சகோதரிகளே என்று அழைத்தேன்; அவ்வளவுதான் இரண்டு நிமிட நேரம் காது செவியாகும்படியான கரகோஷம். அதன் பிறகுதான் உரையைத் தொடர முடிந்தது " என்கிறார் வீரத்துறவி.

## காங்கிரசின் முதல் பெண் பேச்சாளர்

பிற்காலத்தில் சமூகத் சீர்திருத்தலதியாகவும் எழுத்தாளராகவும் தேவதாசி முறை ஒழிப்புப் போராளியாகவும் திராவிட இயக்க அரசியல்வாதியாகவும் திகழ்ந்தார். அது மட்டுமல்ல ஆரம்ப காலத்தில் பெரியாருடன் இணைந்து காங்கிரஸ் கட்சியில் அண்ணல் காந்தியடிகளின் கொள்கைகளை மேடைப்பேச்சு மூலம் பிரச்சாரம் செய்தார். காங்கிரஸ் கட்சியின் முதல் பெண் பேச்சாளர்.

'அண்ணல் காந்தியடிகள் மீதான கொள்கைப் பிடிப்பு காரணமாக இராமாமிர்தம் அம்மையார் வெள்ளையருக்கு எதிரான பிரச்சாரத்தில் ஈடுபட்டார். ஒத்துழையாமை இயக்கத்திற்காகக் கதர் துணி அணியும் போராட்டம் நடத்தினார்கள்.

காங்கிரஸ் கட்சியின் முதல் பெண் பேச்சாளராகக் திகழ்ந்தார் காந்தியடிகள் என்ன கூறினாலும் அது மூவலூராருக்குக் கட்டளை ஆகும். தீண்டாமைக்கு எதிராக மேடைப் பிரச்சாரம் செய்துள்ளார். பல நூற்றாண்டுகளாக அடிமைப்பட்டுக் கிடந்த தலித்துகளுக்கு முதன் முதலாக மூவலூரார் வேட்டி அணிவித்தார்.

தேவதாசி முறை ஒழிப்பு கொண்டு வர சட்டம் இயற்றுமாறு டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி போராடினார். மூவலூரார் ஆதரவாக இருந்தார். இந்திய எதிர்ப்புப் போராட்டம் நடைபெற்றது. 1937 - 40 வரை நடந்த போராட்டத்தில் அம்மையாரும் கலந்து கொண்டார். இதனை வலியுறுத்தி பெண்கள் மாநாடு நடந்தது. 1938 இல் நடந்த போராட்டம் வலிமையானதாகும்.

13 நவம்பர் 1938 அன்று சென்னையில் பெண்கள் மாநாடு கூடியது. மறைமலையடிகள், மகள் நீலாம்பிகை அம்மையார் தலைமையில் கூடிய அந்த மாநாட்டில் ஈ.வே.ரா. சிறப்புரை ஆற்றினார். திருச்சி உறையூர் முதல் சென்னை வரை 42 நாட்கள் இந்தி எதிர்ப்புப் பேரணி நடைபெற்றது. 577 மைல் தூரம் நடந்த இந்தப் பேரணியில் மூதாட்டியான இவர் மட்டுமே பெண்மணி. வரும் வழியில் 87 பொதுக்கூட்டங்களில் பேசியுள்ளார். இந்தப் போராட்டம் குறித்து திராவிட இயக்க வரலாறு பாகம் 1 என்ற நூலில் ஆர்.முத்துக்குமார் விளக்கமாக எழுதியுள்ளார் .

இந்தித் திணிப்பு எதிரான போராட்டத்தில் அம்மையார் கலந்து கொண்டார். மறியலில் ஈடுபட்ட மூவலூரார், தருமாம்பாள், சண்முகத்தம்மையார், பட்டம்மாள் , சாத்தம்மாள் ஆகிய 5 பெண்கள் கைது செய்யப்பட்டனர். மூவலூரார் ஆறு வாரங்கள் சிறைத்தண்டனை அனுபவித்தார்.

## இணைய வழிக் கருத்தரங்கம்

நாள் 20 . 6 . 2020

கல்லூரி : தூய சவேரியார் கல்வியியல் கல்லூரி, பாளையங்கோட்டை, திருநெல்வேலி.

பொருள் : பேச்சுக்கலை

பேராளர் : திருமதி இந்திராமேரி ராஜாமணி .

"........ சொல்லின் செல்வர் என்று அனுமனைச் சொல்வர் இலக்கியவாதிகள். சீதையைத் தேடிச் சென்று திரும்பி அனுமன் இராமனைச் சந்தித்து சுருங்கச் சொல்லி புலப்படுத்திய வார்த்தைகள் 'கண்டேன் கற்பினுக்கனியை" என்பதே. பழம்பெரும் பேச்சாளர் வின்ஸ்டன் சர்ச்சிலிடம் தங்கள் பேச்சு வெற்றி பெறுவதன் இரகசியம் என்ன? என்று கேட்டபோது, "எனக்கு 30 நிமிட உரை பேச வேண்டும் என்றால் தயாரிப்பதற்கு 5 நிமிடம் நேரம் போதும். ஆனால் 5 நிமிடம் நேரம் உரை பேசுவதற்குத் தயாரிக்க வேண்டும் என்றால் அதைத் தயாரிக்க எனக்கு 30 நிமிடங்கள் தேவை" என்று கூறினாராம். இது மாபெரும் உண்மை.

மேடைப் பேச்சாளர்கள் தாம் பேச வேண்டிய வார்த்தைகளைக் கவனமாகத் தெரிவு செய்ய வேண்டும். கையில் வைத்திருக்கும் குறிப்பை அவ்வப்போது பார்த்து தமக்கு ஏற்படும் ஐயங்களைத் தீர்த்துக் கொள்ளலாம். தற்காலத்தில் உரையாளர்கள் Power Point

பயன்படுத்துகிறார். அதையே பார்த்து வாசிக்கக் கூடாது. குறிப்புகள் மட்டுமே பயன்படுத்த வேண்டும்.

பேசும் இடம், , சூழலுக்கு ஏற்ப பேச்சுகள் பொருள் கொள்ளப்படுகின்றன. 'உடம்புக்கு என்னம்மா வருகிறது ?" என்ற வாக்கியத்தை எடுத்துக் கொள்ளலாம்.

சுகமில்லாதவரிடம் கேட்கும்போது நலம் விசாரிக்கும் சாயலில் எடுத்து கொள்ளப்படும். அருகில் நிற்கும் நபரோடு சண்டை வரும் போது இப்படிக் கேட்டால் "சண்டைக்கு" அழைக்கும் நோக்கில் எடுக்கப்படும் இவ்வாறு இடம் பொருள் பார்த்து வார்த்தைகள் பொருள் கொள்ளப்படும். உச்சரிக்கும் ஏற்ற இறக்கத்திலேயே பொருள் வேறுபடுவதைக் காணலாம். பேச்சுக்களை இவர் நான்கு வகையாகப் பிரித்துக் கூறுகிறார். அவையாவன:

1. நேர்மறைப் பேச்சு
2. எதிர்மறைப் பேச்சு
3. அலுவலகப் பேச்சு
4. தனக்குத்தானே பேச்சு

பேச்சாளர் பேசுவது எதற்கு? என்பதைக் கவனிக்க வேண்டும். பணத்துக்காக, புகழுக்காக, கைத்தட்டலுக்காக, மற்றவர்களைக் திருப்திப்படுத்துவதற்காக, போலித்தனமாகப் பேசுபவர்கள் இனம் கண்டறியப்பட வேண்டும். இவர்களுடைய பிடியிலிருந்து பேச்சைக் காப்பாற்ற வேண்டும்.

வெறும் மேற்கோள்களை மட்டுமே தன் பேச்சில் அடுக்கிச் செல்லக்கூடாது. அது கேட்பவருக்கு ஒருவித சலிப்பை ஏற்படுத்தும். ஒரு வீடு கட்டும்போது சாரம் போடுவது மாதிரி மேற்கோள்கள் பயன்பட வேண்டும். கட்டுமானம் நம்முடையது; பணி நம்முடையது என்பதை ஒவ்வொரு பேச்சாளரும் கவனத்தில் கொண்டு தன் சொந்தக் கருத்துக்களைத் தம் பேச்சில் இடம்பெறச் செய்ய வேண்டும்.

அறிஞர் அண்ணாவிடம் அவருடைய பேச்சின் வெற்றி குறித்து கேட்டபோது, "நான் அழிந்தாலும் என் பேச்சுகள் கொண்டாடப்படும் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு. தலைசிறந்த அறிவாளிகள் முன்பு பேசப் போகிறேன் என்று எண்ணி, பேச்சை தயாரித்து வருவேன். ஆனால், மேடையில் பேசும்போது எனக்கு முன்பு இருப்பவர்கள் முட்டாள்கள் என்று நினைத்துக் கொண்டு பேசுவேன்" என்றாராம் அறிஞர் அண்ணா.

ஆகவே, பேச வேண்டுமே என்பதற்காகப் பேசாதீர்கள். பேச வேண்டும் கேட்பவர்களுக்குப் பயனுடையதாக இருக்கும் என்ற நம்பிக்கையுடன் பேசுங்கள். உங்கள் பேச்சு நிச்சயம் வெற்றி பெறும்.

என் தந்தை பொ.மா. இராசாமணி பேசும்போது சொல்வார்கள்; வாயிலிருந்து பேசுவதாகக் கடமைக்குப் பேசினால் கேட்பவர்கள் காதோடு நின்று போகும். மனதிலிருந்து பேசும்போது நம் பேச்சு கேட்பவர்களுடைய மனதைச் சென்று அடையும். என்று பேச்சுக்கலை பற்றிய தனது கருத்துக்கள் எடுத்துக் கூறினார்.

## பேச்சாற்றல் - நூல்கள்

தி.மு.தெய்வசிகாமணி ஆச்சாரியார். 1944 இல் எழுதிய 'மேடை தமிழ்' என்ற நூல் முதல் நூல். 'பேச்சாளராக' அ.கி. பரந்தாமனார், 'நீங்களும் 'பேச்சாளராகலாம் ' 'குமரி

அனந்தன், பேசும் கலை வளர்ப்போம் கலைஞர் , 'நீங்களும் ,பேச்சாளராகலாம் '- பி.சி. கணேசன்.

நீங்களும் பேச்சாளர் ஆகலாம் - பேரா.க. அன்பழகன்

மேடையில் பேசலாம் வாங்க - அறந்தை நாராயணன்

சிறந்த பேச்சாளர்கள் - மா. சு. சம்பந்தன்

மேடைப்பேச்சு - ஏ. ஹபீபுல்லா

மேடைக்தமிழ் வடிவமும் வரலாறும் - முனைவர்.கு. கோபாலகிருஷ்ணன்

தமிழ்த்தென்றல் அல்லது தலைமைப் பொலிவு - திரு.வி.க.
தமிழின்பம் - ரா. பி. சேதுப்பிள்ளை

பூம்புகார் பதிப்பகம் - பேரறிஞர் அண்ணாவின் சொற்பொழிவுகள்

அ.கி. மூர்த்தி - அண்ணாவின் மேடைத் தமிழ்

மு. கருணாநிதி - மேடையில் வீசிய மெல்லிய பூங்காற்றே

விஜயா பதிப்பகம் - அப்துல் கலாம் சொற்பொழிவுகள்

இரா. சண்முக வடிவேல் - தமிழ் வளர்த்த சான்றோர்கள்

பேரா.கு.ஞானசம்பந்தம் - பேச்சுக்கலை

ப.பாலசுப்பிரமணியன் - வாங்க பேச்சாளர் ஆகலாம்

## ஆய்வுகள்

முனைவர் பி. ஆறுமுகம் - ' அறிஞர் அண்ணாவின் மொழிநடை'

பி.ரெத்தின சபாபதி - அறிஞர் அண்ணாவின் சட்டமன்ற உரைகள்

முனைவர் க. கோபாலகிருஷ்ணன் - மேடைத்தமிழின் பல்வேறு நிலைகள்

ப.சத்திய மூர்த்தி - தென்கச்சி கோ சுவாமிநாதனின் இன்று ஒரு தகவலில் அறிவியல் ஆய்வேடுகள்.

1. ஜவஹர்லால் நேரு அவர்களின் மேடைப்பேச்சு குறித்து ஆய்க.
2. சுகிசிவம் குறித்து எழுதுக .
3. வலம்புரி ஜான் மேடைப்பேச்சு குறித்து எழுதுக.
4. விவேகானந்தரின் சொற்பொழிவை உரைக்க.
5. காங்கிரஸின் முதல் பெண் பேச்சாளர் எவ்வாறு அமைந்தது விளக்குக.
6. இணையவழி கருத்தரங்கம் குறித்து எழுதுக .
7. மேடைப் பேச்சாளரின் ஆரம்பகால நிலை குறித்து எழுதுக.
8. பேச்சாளர்கள் உருவாவது எவ்வாறு?
9. மேடைபயத்தை போக்குவது எவ்விதம்?
10. மேடை உரைக்குத் தேவைப்படும் கருத்துக்களை எவ்விதத்தில் தேர்ந்தெடுக்க வேண்டும்?

முனைவர் கு.பிருந்தா,
தமிழியல் துறை,
உதவிப் பேராசிரியர்,
மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம் ,
திருநெல்வேலி,
9344473498.
rjsbrintha@gmail.com